


25 MAY 2010

உ



# குறள்வழி

**இல்லதென் இல்லவள் மாண்பானால் உள்ளதென்**

**இல்லவள் மாணாக் கடை**

**பொருள் :** மனைவி நற்குண நற்செய்கைகளுடையவளாயின் ஒருவனிடத்தில் எல்லாமுண்டு. அவள் அத்தன்மை இல்லாவிடின் அவனிடம் ஒன்றும் இல்லையாகும். (53)

**பெண்ணிற் பெருந்தக்க யாவுள கற்பென்னும்**

**திண்மையுண் டாகப் பெறின்**

**பொருள் :** பெண்ணினிடத்தில் கற்பு என்னும் மன உறுதி உண்டாயிருக்கப்பெற்றால், ஒருவன் அடையக் கட்டியவைகளுள் இல்லாளின் மேலான பொருள் வேறு இல்லை (54)

☆☆☆☆☆☆☆☆☆☆☆☆☆☆☆☆☆☆☆☆☆☆☆☆☆☆☆☆☆☆☆☆

# நற்சிந்தனை

மறப்பேனோ குருநாதன் தன்னை

திருத்தாண்டகம் – 5



நிற்பனவும் நடப்பனவு மானாய் நீயே
நீங்காதென் னுயிருக்கோ ருயிரும் நீயே
பற்பலவாஞ் சமயமெலா மானாய் நீயே
பழவடியா ரடிக்குடியாய் நின்றாய் நீயே
கற்பனைக ளெல்லாமா யல்லாய் நீயே
கங்குல்பக லறியாத கடவுள் நீயே
அற்புதமே யற்புதமே யென்னி னல்லால்
அடியேன்யா னென்சொல்லி யேத்து கேனே 01

கண்ணுக்குக் கண்ணாகி நின்றாய் நீயே
காமனையுங் கண்ணழலா லெரித்தாய் நீயே
விண்ணுக்கும் விளங்கொளியாய் நின்றாய் நீயே
வேதாந்தத் துட்பொருளு மானாய் நீயே
பண்ணுக்கோ ரிசையாகி நின்றாய் நீயே
பற்றற்றார் பரவுகின்ற பொருளும் நீயே
எண்ணெழுத்துச் சொல்லாகி நிற்பாய் நீயே
என்னரசே யென்சொல்லி யேத்து கேனே 02

# ஞானச்சுடர்



வெளியீடு:
சந்நிதியான் ஆச்சிரம சைவ கலைபண்பாட்டுப் பேரவை

# ஞானச்சுடர்

## வெளியீடு - 2 சுடர் - 147

## 2010 பங்குனி பொருளடக்கம்


| | | |
|---|---|---|
| பங்குனி மாதமும்... | நா. நல்லதம்பி | 1 - 2 |
| மங்கலப் பொருட்களுள்... | செல்வி செ. ஜடா | 3 - 5 |
| இராமலிங்க சுவாமிகள் | த. நாகராசா | 6 - 8 |
| வாராந்த நிகழ்வின் | - | 9 - 12 |
| மனிதனை மேம்படுத்துவன... | இரா. சாந்தன் | 13 - 14 |
| கடவுள் எங்கே? | பொ. சிவபாதசுந்தரம் | 15 - 16 |
| நம் மனதை வென்ற... | K.S. சிவஞானராஜா | 17 - 18 |
| அருட்கவி சீ. விநாசித்தம்பி | செல்வி. தி. வரதவாணி | 19 - 20 |
| ஆசாரக் கோவை | - | 21 - 22 |
| பானுகோபன் எனப்... | சிவ. சண்முகவடிவேல் | 23 - 25 |
| நித்திய அன்னப்பணி | - | 26 - 27 |
| வேண்டுதல்கள் | திருமதி சி. யோகேஸ்வரி | 28 - 30 |
| சிவபுராணம் | சு. அருளம்பலவனார் | 31 - 33 |
| கல்லெறிந்த காதல் | ஆ. மகேசு | 34 - 37 |
| பைந்தமிழின் பின்சென்ற... | திருமதி பா. சிவனேஸ்வரி | 38 - 40 |
| சிறுவர் கதைகள் | - | 41 - 42 |
| தவமுனிவனின்... | சிவ. மகாலிங்கம் | 43 - 47 |
| திருவிளையாடல் | ஆறுமுகநாவலர் | 48 - 50 |
| இராமகிருஷ்ணரின்... | கு. நவரத்தினராஜா | 51 - 52 |
| விஞ்ஞானமும் மெய்.... | பொ. சோமசுந்தரம் | 53 - 55 |
| தினம் தினம் ஆனந்தமே.. | சத்குரு ஜக்கி வாசுதேவ் | 56 - 57 |
| சிவராத்திரி விரதம்.. | செல்வி. மாதாஜி | 58 - 62 |
| இயமலோகம் செல்லும் வழி | வாரியார் சுவாமிகள் | 63 - 64 |
| சைவ நற்சிந்தனை | கு. சோமசுந்தரம் | 65 - 66 |
| நாலாயிரம் திவ்விய... | ச. லலீசன் | 67 - 69 |
| செய்தி சிதறல்கள் | - | 70 |
| செம்மைவழி காட்டிய... | தி. மயூரகிரி | 71 - 73 |
| சந்நிதியான்.. | ந. அரியரத்தினம் | 74 - 76 |
| தமிழகத் திருக்கோயில்.. | வல்வையூர் அப்பாண்ணா | 77 - 78 |


அன்பளிப்பு : **மலர் ஒன்று 30/- ரூபா**


**சந்நிதியான் ஆச்சிரம சைவகலை பண்பாட்டுப் பேரவை**

**தொலைபேசி இலக்கம் : 021 3219599**

**Web Site : WWW. Sannithiyan.org**

பதிவு இல. Q.D/46/NEWS/2010

**அச்சகம் : சந்நிதியான் ஆச்சிரமம், தொண்டைமானாறு**

உ



# ஞானச்சுடர் மாசி மாத வெளியீடு

**வெளியீட்டுரை -**

ஞானச்சுடர் மாசிமாத மலருக்காகிய வெளியீட்டுரையினை உடுப்பிட்டி மகளிர் கல்லூரியில் கடமையாற்றி ஓய்வுபெற்ற ஆசிரியை திருமதி புனிதவதி சண்முகலிங்கம் அவர்கள் நிகழ்த்தினார்கள்.

அவர் தம் உரையின் மூலம் ஆச்சிரமம் ஆற்றும் சகல பணிகளுக்கெல்லாம் மகுடம் வைத்தது போன்று விளங்குவது இம் மலர் வெளியிடும் நிகழ்வாகும். கடந்த பல வருடங்களாக இம்மலர் மாதா மாதம் வெளிவருவது என்பது இலகுவான காரியமல்ல. இது ஒரு கடினமான செயல்.

இச்செயற்பாட்டினை முன்னெடுத்துச் செல்வதற்கு ஸ்ரீ செல்வச்சந்நிதி வேற்பெருமானது பூரண அருள் கிடைக்கவேண்டும். சந்நிதியானது அருளாட்சி இங்கே பூரணமாக உள்ளதால்தான் ஆச்சிரமத்தில் இடம்பெறும் குறிப்பாக நித்திய அன்னப்பணி உட்பட சகல பணிகளும் நிறைவாக நடந்த வண்ணம் உள்ளது என்பதை அடியார்களுக்கு கூறியதுடன் இம்மலர் வெளியீட்டில் வருடா வருடம் கலந்து கொள்வதையிட்டும் நன்றி கூறி தனது வெளியீட்டுரையினை நிறைவு செய்தார்.

**மதிப்பீட்டுரை-**

சுடரின் 146 இதழாக வெளிவந்த மாசி மாத மலரின் மதிப்புரையினை யாழ். பல்கலைக்கழக முதுநிலை விரிவுரையாளர் திருமதி நாச்சியார் செல்வநாயகம் அவர்கள் நிகழ்த்தினார்கள். ஞானச்சுடர் வெளியிட்ட காலம் தொட்டு இம் மலரது வளர்ச்சி பெரும் ஆச்சரியத்துக்குட்பட்டதாகவே உள்ளது. இதனடிப்படையிலே நானும் வருடம் ஒரு முறை இம் மலரிற்குரிய மதிப்புரையினை ஆற்றி வருவதாக கூறியதுடன் மற்ற நூல்களை மதிப்புரை செய்வதைவிட இம் மலரை வேறு கோணத்தில்த்தான் மதிப்புரையை ஆற்ற வேண்டியுள்ளது. ஏனெனில் இம்மலரானது சந்நிதிச் சூழலில் பலவருடங்களாக தொடர்ந்து வெளிவந்து கொண்டிருப்பதுதான்.

மேலும் - இம்மலர் உலகம் முழுவதும் உள்ள அன்பர்களைச் சென்றடைந்து அவர்கள் சந்நிதியானை நினைப்பதற்கும் வணங்குவதற்கும் காரணமாக விளங்குகின்றது. ஞானச்சுடர் மலரில் இடம்பெற்ற கட்டுரைகளில் உள்ள ஆழமான கருத்துக்களை ஆச்சிரம மண்டபத்தில் கூடியிருந்த அடியார்களுக்கு சுருக்கமாக விளக்கிக் கூறி, தனது மதிப்பீட்டுரையினை நிறைவு செய்தார்.




ஒவ்வொரு சமயமும் நல்ல கோட்பாடுகளைப் போதிக்கின்றது. உலகத்து மக்கள் ஒழுக்கத்துடனும் நற்பண்புகளுடனும் வாழ சமயங்கள் வழிகாட்டுகின்றன. இன்றைய உலகில் சமயப் பற்றுள்ள மனிதர் மிகச் சிலரே. அதுவும் இந்து சமயத்தைப் பொறுத்தவரை அதன் நிலை என்ன என்பதை சிந்தித்துப் பார்க்க வேண்டும். பழம் பெருமையை மட்டும் பேசிக் காலம் கழிக்கலாகாது. இன்றைக்கே நாம் செய்ய வேண்டுவனவற்றை, செய்தல் வேண்டும். நமது சமயக் கொள்கைகளையும் கோட்பாடுகளையும் முழுமனதுடன் கடைப்பிடித்தல் வேண்டும் என்பதை உணரவேண்டும். எமது சமயத்தின் வளர்ச்சியையும் நிலையான தன்மையையும் உறுதி செய்ய, வேண்டுவனவற்றைச் செய்தல் வேண்டும். காலத்துக்குக் காலம் மகான்கள் பிறக்கிறார்கள். அருளாளர்கள் அவதாரம் செய்கிறார்கள். அவர்கள் சொல்லிச் சென்றவற்றை நாம் கடைப்பிடிக்கிறோமா என்பதைப் பற்றி சிந்திக்க வேண்டும். அத்திவாரம் நன்றாக இல்லாத கட்டடம் போலாகாமல் உறுதியான மனத்துடன் சமயத் தொண்டு புரிதல் வேண்டும். இவை யாவும் இன்றைய இளைஞரின் தலையாய கடனாகும். இது தமது கடமையும் உரிமையும் என்ற உணர்வோடு இன்றைய இளைஞர் செயலில் இறங்க வேண்டும். எங்கள் சமயத்தின் எதிர்காலமும் அவர்கள் கையிலே தான் உள்ளது.

சமய வழிபாட்டு இடங்களில் ஒழுங்கீனங்களை ஏற்படுத்துவது, வேண்டாத விஷயங்களைப் பற்றிப் பேசுவது, அரட்டையடிப்பது போன்றன எமது சமய நடைமுறைகளுக்கு ஒவ்வாதவையாகும். இச்செய்கைகள் உண்மையான தெய்வ ஈடுபாடுள்ளோரையும் திசை திருப்பும் செயலாகும். இதனால் எமது சமய அடிப்படைகளே விளக்கம் பெறாமல் போய் விடுகிறது. இது குறித்து இன்றைய இளைஞர்கள் சிந்திப்பதில்லை. இவையெல்லாவற்றையும் எதிர்காலச் சந்ததியினராகிய நாம் சிந்தித்து தெளிந்து தவிர்த்துவிட வேண்டியவை. நாம் சிறுகச் சிறுகச் செய்யும் சமயத்துக்கு ஒவ்வாத விடயங்கள் நமது சமயக் கோட்பாடுகளை, விழுமியங்களை அரிக்கும் கறையான்கள் போன்றவை இவையே என்பதை உணர்ந்து சமயக் கோட்பாடுகளைப் போற்றிப் பாதுகாப்போமாக.

# உலகி லொருவன் சந்நிதி முருகன
## (சிந்துநடை)

உலகி லொருவனெடி அவனென்தன்
உள்ளத்தில் நின்றானெடி - அவனோ
உலவும் இடமோ பல - சந்நிதி
உயர் தலம் கண்டேனெடி

குலவியே ஆடுகின்றான் - சந்நிதி
கும்பிடு மடியார்க் கெல்லாம்
நிலவிட வரமருள்வான் - உள்ளும் புறமும்
நித்தமும் ஆடுகின்றான்

ஆலயப் பக்கத்திலே நாகஞ் சூழும்
அரும்பெரும் பூவரசு - அவனென
காலமெல்லாம் நிற்குதே - அற்புதமாய்
கண்டு நீ கும்பிடெடி

ஆற்றங்கரை தனிலே - கருங்கடல்
அலை யோயாது பாடும் - நித்தநித்தம்
போற்றிடும் பக்தர் கணம் - அவன்புகழ்
பூசித்துப் பாடி யாடும்

மாற்றமங் கொன்றில்லாமல் குறிஞ்சிபோல்
மயிலேறி விளையா டுவான் - ஆச்சிரமச்
தோற்றும் சோற்றுமலையில் - மகிழ்ந்து
துள்ளியே விளையாடுவான்

பாலக் குமர னெடி ஆயினுந்தன்
பக்கத்தில் பெண்ணிருவர் - அமர
கோலமாய் வீற்றிருப்பான் - ஆயிரம்
கோடிசூ ரியரும் ஒவ்வார்

சேவற் கொடியுடையான் - அருணகிரி
திருப்புகழ் விருப்புடையான்
பாவலர் கச்சியப்பர் - நக்கீரர் தம்
பாமலரும் கேட்டுவப் பான்

ஓவா தவன்கழலே நினைக்கின்ற
உத்தமர் மோகனதாஸ் - போலவே
யா ரோதி ஏந்தினாலும் - கற்பகம் போல்
உவந்த ருள் புரிவா னெடி

முந்தையோர் பற் பலரில் - கதிர்காமர்
முற்றா யவனைக் கண்டே - தனது
சிந்தை பறிகொடுத்தார் - அந்தக் கதை
செகமெலாம் அறியு மெடி

கார்த்திகே யனைக் குகனை, கந்தனை
கண்ணுதல் தன் மகனை - சந்நிதி
மூர்த்தியை மறவாமலே அவன்பாத
முத்திபெற் றுய்வா யெடி



முதுபெரும் புலவர்
கலாபூஷணம், புலவர்
மணி
வை.க. சிற்றம்பலம்

உ

# பங்குனி மாத சிறப்புப் பிரதி பெறுவோர் விபரம்

**R. கிருஸ்ணசிவம்**

*(அவுஸ்திரேலியா)*

**கனகசுந்தரம் செல்லப்பா**

*(U.K)*

**V. சிவநாதன்**

*(பிராந்திய முகாமையாளர், யாழ். இலங்கை வங்கி)*

**ஐ. சங்கரலிங்கம்**

*(அம்மன் பல்பொருள் வாணிபம், ஊரெழு கிழக்கு)*

**இராமசாமி திருச்செல்வம்**

*(தலைவர், பர்வபத்தினி அம்பாள் தேவஸ்தானம்)*

**நா. நவராஜ்**

*(உளவள துணையாளர், யாழ்ப்பாணம்)*

**அ. வரதராசா**

*(வரியப்புலம் வீதி, சுண்ணாகம்)*

**வே. நடராசா**

*(தும்பளை மேற்கு)*

**சி. கிருஷ்ணபிள்ளை J.P.**

*(ஆவரங்கால்)*

**பொதுமுகாமையாளர்**

*(வலி. கிழக்கு வடபகுதி ப.நோ.கூ. சங்கம், அச்சுவேலி)*

**பொதுமுகாமையாளர்**

*(பனை, தென்னை வள அபிவிருத்தி கூ. சங்கம், அச்சுவேலி)*

**சி. சந்திரலிங்கம் J.P.**

*(பதிவாளர், மாவட்ட நீதிமன்றம், பருத்தித்துறை)*

**செ.க. செல்வநாயகம்**

*(செல்வா ஸ்ரோர்ஸ், ஆவரங்கால்)*

**க. இராசதுரை**

*(கிராம உத்தியோகத்தர், ஆவரங்கால்)*

**சோமசுந்தரம் செல்வக்குமார்**

*(சண்சில்க் றைக்கிளின் சென்ரர், G.P.S. றோட், கல்வியங்காடு)*

**உரிமையாளர்**

*(புதிய குகானந்தா, தட்டாதெருச் சந்தி, யாழ்ப்பாணம்)*

**கி. இராஜதுரை அதிபர்**

*(வதிரி மெ.மி.த.க. பாடசாலை)*

**உரிமையாளர்**

*(சுபாஸ் வெதுப்பகம், நெல்லியடி)*

**ஜீ. ஜெயப்பிரகாஷ்**

*(ஆறுமுகம் சிற்பாலயம், திருநெல்வேலி)*

**சி. கணபதிப்பிள்ளை (தலைவர்)**

*(யாழ். மாவட்ட கூட்டுறவுச் சமாசம்)*

**கு. செல்வரெத்தினம்**

*(நிக்ஷன் பல்பொருள் வாணிபம், அச்சுவேலி)*

**வை. துரைராசா**

*(ஓஸ்காவீதி, உரும்பராய் தெற்கு)*

**ந. நவரெட்ணம்**

*(மகேஸ்வரி வாசா, ஆனைக்கோட்டை)*

**S. விமலராசா**

*(தேவாலயவீதி, சங்கானை)*

**வே. கிருஸ்ணபிள்ளை**

*(K.V.K. அரிசி ஆலை, உடுப்பிட்டி)*

**M.B. முருகதாஸ் (கல்யாணி)**

*(வல்வெட்டித்துறை)*

**சி. வல்லிபுரம்**

*(தும்பளை, பருத்தித்துறை)*

**உரிமையாளர்**

*(கந்தசாமி அன்சன்ஸ், சங்கானை)*

**சபா இரத்தினசிங்கம் J.P.**

*(சபா றேடர்ஸ், அச்சுவேலி)*

**V. பரமானந்தம்**

*(கொள்வனவு உத்தியோகத்தர், பருத்தித்துறை ப.நோ.கூ. சங்கம்)*

**ஜெ. நகுலன்**

*(பூநாரி ஒழுங்கை, யாழ்ப்பாணம்)*

**திருமதி இ. தில்லையம்பலம்**

*(திருவாதெனி, இமையாணன்)*

**K. கேதீஸ்வரநாதன்**

*(புன்னாலைக்கட்டுவன் தெற்கு)*

**சு. மகேஸ்வரன்**

*(மாரியம்மன் மோட்டோர்ஸ், கோப்பாய்)*

**திருமதி மகேஸ்வரி**
*(சங்கத்தானை, சாவகச்சேரி)*

**E.V.K. குமாரசாமி**
*(செல்வபதி, மட்டுவில்)*

**ஏ. சுந்தரமூர்த்தி**
*(மணியன் ஈசன் ஜுவல்லரி)*

**S. நாகம்மா**
*(கிறீன் மெமோறியல் வைத்தியசாலை, மானிப்பாய்)*

**உரிமையாளர்**
*(மெடிலாண்ட் பார்மஸி, சங்கானை)*

**S. திருவளேஸ்வரன்**
*(V.S.K. மானிப்பாய்)*

**த. விவேகானந்தராசா**
*(டச்றோட், சித்தங்கேணி)*

**ஐ. புஸ்பநாதன்**
*(S.R.P. ஸ்ரோர்ஸ், சங்கானை)*

**அ. குபேரானந்த உதயன்**
*(உதயன் கொமினிக்கேஷன், இணுவில்)*

**அ. கோணேஸ்வரன்**
*(தில்லையம்பதி, கோண்டாவில்)*

**ஆ. தனபாலசிங்கம்**
*(இணுவில் கிழக்கு)*

**சி. அழகேசன்**
*(வட்டுவினி அம்மன் கோவிலடி, இணுவில்)*

**க. தர்மநாயகம்**
*(மஞ்சத்தடி, இணுவில்)*

**பூ. இராமகிருஷ்ணர்**
*(சிவசக்தி கோவிலடி, அச்சுவேலி)*

**Dr. ஸ்ரீகணேசன்**
*(பழமுதிர்ச்சோலை, பருத்தித்துறை)*

**செ. சூரியகுமார்**
*(இன்பர்சிட்டி)*

**உரிமையாளர்**
*(கண்ணாடி களஞ்சியம், நெல்லியடி)*

**வ. தங்கவடிவேலு**
*(இராமுகடை, கரவெட்டி)*

# பங்குனி மலர் 2010 ஞானச்சுடர்

**அதிபர்**

(கம்பர்மலை அ.த.க. பாடசாலை)

**அதிபர்**

(உடுப்பிட்டி அமெரிக்க மிஷன் கல்லூரி)

**திருமதி சி. தருமலிங்கம்**

(இமையாணன், உடுப்பிட்டி)

**ஆனந்தராசா சீதா**

(ஆதிகோவிலடி, வல்வெட்டித்துறை)

**கி. அருள்நாதர்**

(பாலாவி தெரு, பொலிகண்டி)

**ஏ. மாணிக்கராசா**

(வறாத்துப்பளை, பருத்தித்துறை)

**ப. கந்தரூபன்**

(கமலவாசம், அளபாவோடை)

**வை. கதிர்காமநாதன்**

(இணுவில் தெற்கு)

**ஆ. கதிர்காமசேகரம்**

(வன்னியசிங்கம் வீதி, தாவடி)

**து. சிவராசா**

(இணுவில்)

**சின்னத்துரை கைலாயநாதன்**

(வட்டுவினி, இணுவில் மேற்கு)

**V.K. சண்முகலிங்கம்**

(திருமகள் வீதி, அரியாலை)

**A. நடராஜா**

(கலட்டி அம்மன் வீதி, வண்ணார்பண்ணை)

**மார்க்கண்டு முத்துப்பிள்ளை**

(அத்தியடி, யாழ்ப்பாணம்)

**திருமதி V. கௌரி**

(கோயில் வீதி, நல்லூர்)

**M. சிவகுமாரன்**

(தாளையடி லேன், திருநெல்வேலி)

**N.S. படிகலிங்கம்**

(சரவணை கிழக்கு)

**கந்தையா காசிராசா**

(குப்பிளான் தெற்கு)

**திருமதி சு. ஹெம்சத்வனி**

(காங்கேசந்துறை வீதி, மயிலணி)

# பங்குனி மாதமும் உத்தர விரதமும்

- நா. நல்லதம்பி அவர்கள் -

வருடத்தில் ஒவ்வொரு மாதமும், அந்தந்த மாதத்துக்குரிய பண்டிகைகளாலும் விரதங்களாலும் சிறப்புப் பெறுகின்றது. அந்த வகையில், "பங்குனி உத்தர விரதம்" அனுட்டிக்கப்பெறுவதாலும் பங்குனித் திங்கள் (தினம்) அம்பிகை வழிபாட்டுக்குச் சிறந்த நாளாக இருப்பதாலும் பங்குனி மாதம் சிறப்புப் பெறுகின்றது.

பங்குனி உத்தர விரதம், கல்யாணசுந்தர விரதம் என்றுஞ் சொல்லப் பெறுகின்றது. கல்யாண சுந்தரமூர்த்தியாக்கிச் சிவபெருமானைக் குறித்துச் செய்யப்பெறுவதால் இது கல்யாண சுந்தர விரதமாகிறது; அதனால் சிவவிரதமும் ஆகிறது. திங்கட்கிழமைகளில் அம்பிகை வழிபாடும் விரதமும் அனுட்டிக்கப் பெறுவதால் பங்குனியில் சக்தி விரதமும் இடம்பெறுகின்றது.

பன்னிரண்டாவது மாதமாக வரும் பங்குனியில், பன்னிரண்டாவதான உத்தரம் மகா சோதியான பூரணையில் வருவதும் பங்குனியின் விசேட சிறப்பாகும். இந்த விரோதி வருட பூரணைத் தினம் திங்கட்கிழமையாக இருப்பதுவும் ஒரு சிறப்புத்தானே.

இனி, ஒரு நாமம் ஓர் உருவம் இல்லாத இறைவனுக்கு ஆயிரம் திருநாமங்கள் பாடி வணங்குகின்றோம். அதற்கு ஏற்றாற்போல, இமயமலை அரசனாகிய இமவான், தனது மகள் பார்வதிதேவியை இறைவனுக்கு மணம் முடித்து வைத்து, அவனைக் குடும்பஸ்தனாக்கி மகிழ்கிறான்.

உலகம் இயங்குவது, உயிர்கள் ஆணும் பெண்ணுமாக இன்பம் அனுபவித்து வாழ்வதில்த்தானே தங்கி இருக்கிறது என்ற சைவசித்தாந்த தத்துவம் இங்கே உணரத்தக்கது.

இந்த "பார்வதி கல்யாணத்திற்கு ஏற்ற முகூர்த்தநாள் பங்குனி உத்தரம் என்று நாள் குறித்துச் சொன்ன கச்சியப்ப சிவாச்சாரியார் இப்படிப் பாடியிருத்தல் காண்க.

*"ஆதியின் உலகமெல்லாம் அளித்திடும் அன்னை தன்னைக்*
*காதலின் வதுவைசெய்யக் கருதினை, கணித நூலோர்*

*ஓதுபங் குனியின் திங்கள் உத்தரம் இன்றே ஆகும்*
*ஈதுநன் முகூர்த்தம் எய்தாய் இமய மேல் வருதி என்றான்"*

மேலும், விஷந்தீண்டி இறந்த பூம்பாவை என்னும் பெண்ணை உயிர்பெறப் பாடிய திருஞானசம்பந்தர், கபாலீச்சரம் என்னும் அப்பதியிலே நடைபெறும் பங்குனி உத்தரப் பலி விழாவையும் ஒலிவிழாவையும் கண்டு களிக்காமல், "போதியோ பூம்பாவாய்" என்று குறிப் பிட்டுள்ளமை பங்குனி உத்தரத்தின் மகிமையை உணரவைப்பதாகும்.

*மலிவிழா வீதி மடநல்லார் மாமயிலைக்*
*கலிவிழாக் கண்டான் கபாலீச்சரம் அமர்ந்தான்*
*பலிவிழாப் பாடல்செய் பங்குனி உத்தரநாள்*
*ஒலிவிழாக் காணாதே போதியோ பூம்பாவாய்*

- சம்பந்தர் தேவாரம்.

பங்குனி உத்தர விரதம் மேற்கொள்ளும் அடியார்கள் தம்முட் கூடிக் குலாவி உண்டுகளித்து ஆரவாரஞ் செய்வார்கள். இப்பாடலில் "பலிவிழா" எனக் குறிப்பிடப்படுவது, தங்களுக்குள் உணவுப் பண்டங்களைப் பரிமாறிக் கொள்வதை (பலிகொடுப்பது) குறிப்பதாகும்.

"........ தலையாலே பலி தேருந்தலைவன்" எங்கள் இறைவன். அடியார்களது வினைப் பயனை இறைவன் "பலி" கொள்கிறான்; பலிபீடத்தில் எமது ஆணவ மலத்தைப் பெற்றுக் கொண்டு (பலிகொண்டு) அருள் செய்வது போல. "பலி ஏல் கடவுள்" என்பதும் காண்க.

திருநாவுக்கரசர் குறிப்பிடும் "வீங்கு இளவேனில்" காலத்தின் தொடக்கம் பங்குனி மாதமாகும்.

தமிழ் மக்கள் மார்கழிக் குளிரிலிருந்து விடுபட்டு, தமது பயிர்களை அறுவடைசெய்து செல்வச் செழிப்போடு வசந்த காலத்தில் தமது காதல் வாழ்வு சிறப்புற வேண்டுமென இறைவன் இறைவி திருமணத்தை உத்தர நாளில் நடைபெற அமைத்து வழிபட்டு வருவதை நினைவிற் கொள்வோமாக.

பங்குனி மாதத்தில் உத்தர விரதம் அனுட்டிப்பதோடு அம்மன் ஆலயங்களிலெல்லாம் பொங்கல் விழாவும் விசேட திருவிழாக்களும் இடம்பெறுவதையும் நாம் அறிவோம். முக்கியமாகத் திங்கட்கிழமைகளில் பொங்கலும் திருவிழாவும் சிறப்பாக நடைபெறுகின்றன.

ஆகவே, இந்தப் பங்குனி மாதத்தில் பராசக்தியை வேண்டிப் பொங்கலும் விழாவும் செய்வதோடு உத்தர விரதம் அனுட்டித்தும் இறையருள் பெறுவோமாக.

*எங்கும் நின்கண் உண்டு, எதையும் நீகேட்பாய், எலா முனக்குள்*
*தங்கும், நீயே தேவ தேவாதிகட்கும் தலைவி, அன்பால்*
*பொங்கும் மனத்தே முளைத்துத் தழைக்கின்ற பொற்கொடி நீ*
*பங்குனித் திங்களில் வந்தருள் செய்வாய் பராசக்தியே.*

உ

# மங்கலப் பொருட்களுள் பாலின் சிறப்பு

- செல்வி செ. ஜடா அவர்கள் -

மங்கலப் பொருட்களுள் பால் பிரதானமானது. பால் இன்றி எந்த இந்துசமயக் கிரியைகளோ, சடங்கு, சம்பிரதாயங்களோ இடம்பெறமாட்டாது.

பால் சகல விதமான ஐசுவரியங்களையும் தன்னகத்தே கொண்டுள்ளமையால் கிருஷ்ண பகவான் ஆயர் பாடியில் பசுக்களைத் தன் வேணுகானத்தினால் மகிழ்வித்தார். கிருஷ்ண பகவானுக்கு மிகவும் பிடித்தமானது வெண்ணெய் அதனால் கையில் வெண்ணெயைத் தாங்கியுள்ளார். பாலைக் காச்சி அதற்குள் உறைமோர் விட்டுத் தயிரானதும் அதனைக் கடைந்து எடுக்கின்ற வெண்ணெயைத் தனது தோழர்களுடன் சென்று திருடி உண்பாராம். (நவ- புதிதாக நீதம் - எடுக்கப்பட்டது) எம்முடைய உள்ளம் பால் போன்று வெண்மையாக, தூயதாக இருக்கவேண்டும். அப்பொழுதுதான் மேகவர்ணமுடைய கண்ணன் எம் அருகில் வருவான். மேகம் கருமை நிறமாக இருந்தாலும் அதிலிருந்து பொழிகின்ற மழை நீரானது கறுப்பாக இருப்பதில்லை. அதேபோன்று கிருஷ்ணனின் அருளைப் பெறவேண்டுமேயானால் கபடு, சூது போன்ற மாசுக்களை உள்ளத்திலிருந்து அகற்றி பாலின் நிறமான வெண்மை போன்று வைத்திருக்கவேண்டும்.

பசுவானது நாம் கொடுக்கும் கழிவுப் பொருட்களை உண்டு வெண்மை நிறப் பாலாக அளிக்கின்றது. இது தியாக உணர்வுடன் நாம் வாழ வேண்டுமென்பதை எடுத்துக் காட்டுகின்றது. குழந்தைகளுக்கு தாய்ப் பால் கிடைக்காத பொழுது தாய்க்கு நிகராக தன் பாலைக் கொடுத்து குழந்தையை வளர்க்கின்றது. இதனால் பசுவினை "கோ மாதா" என அழைப்பர். பால் ஒரு நிறையுணவும் கூட.

பசு என்ற அரும்பெரும் செல்வத்திலிருந்து பல செல்வங்கள் கிடைக்கப் பெறு கின்றன. பசுவிலிருந்து பெறப்படும் பால், தயிர், நெய், கோமயம், கோசலம் என்பன பஞ்ச கௌவியம் எனப்படும். இதனைச் சம்பந்தர் "நறு நெய்யொடு பால் தயிர்" எனப் பாடுகின்றார்.

ஆலயங்களில் இறைவனின் அபிடேகத்திற்காகவும் நிவேதனத்திற்காகவும் பசுக்களை வளர்க்கும் வழக்கமுள்ளது. சில ஆலயங்களில் உற்சவ காலங்களில் சுவாமி திருவீதியுலா வருமிடத்து காளை மாடு சுவாமியை இழுத்துச் செல்வது வழக்கம். பசுவிடமிருந்துபெறப்படும் கோரோசனை அபிடேகத்திரவியமாகிறது. இதனால் திருவுருவத்திற்கு அபிடேகம் செய்யப்படு வதனால் கிடைக்கப் பெறும் பலன் தீர்காயுள் ஆகும். குழந்தைகளுக்கு இது மருந்தாகவும் பயன்படுகின்றது.

இறைவனுக்கு செய்யும் உபசாரங்களில் 'மதுபர்க்கம்' ஒன்றாகும். தயிர், பால், நெய், தேன் இவைகளைச் சமமாகக் கலந்து இது பெறப்படும். இதை இறைவனின் முகத் திற்கு நேராகக் காட்டவேண்டும். இறைவனுக்கு அபிடேகம் செய்யப்படுவதற்கு பஞ்சாமிர்தம்

முக்கியமானது. பஞ்சாமிர்தத்தில் அபிடேகம் செய்வதால் யாவற்றிலும் வெற்றி கிடைப்பது மட்டுமன்றி எல்லாவகையான செல்வமும் கிடைக்கப்பெறும். தேன், நெய், சர்க்கரை, பால், தயிர், இவை ஐந்தும் சேர்ந்ததுதான் பஞ்சாமிர்தம். இதில், மாம்பழம், பலாப்பழம், வாழைப் பழம் ஆகிய முக்கனி வர்க்கத்தையும் சேர்க்கலாம். அபிடேகம் செய்ததன் பின் பக்தர்கட்கு பஞ்சாமிர்தம் பிரசாதமாக வழங்கப்படும்.

இறைவனின் விபூதிப் பிரசாதம் பசுவின் சாணத்திலிருந்து தயாரிக்கப்படுகின்றது. விநாயகர் வழிபாட்டிற்கு சாணத்தில் பிள்ளையார் பிடித்து வைக்கப்படுகின்றது. பாலினால் அபிடேகம் செய்வதனால் ஆயுள் விருத்திப் பலனும், தயிரினால் அபிடேகம் செய்வதினால் வம்ச விருத்தியும் ஏற்படும். பிரசாதம் வைக்காத நேரத்தில் இறைவனுக்குப் பால் நிவேதன மாகின்றது. ஆலயங்களில் முதல் பூசையான உஷாக்காலப் பூசைக்கு பால்தான் நிவேதனமா கிறது. கிரியைகள் இடம்பெறுமிடத்து அக்கினி காரியங்களில் சமர்ப்பிக்கப்படுவது நெய் ஆகும். அக்கினி கிரியைகளின் முடிவில் பூரணாகுதி இடம்பெறும் நெய்யைச் சிருக்கில் விட்டுச் சிருவத்தாலே மூடி அதன் நுனியில் பூ வைத்து எழுந்து நின்று நெய்யைத் தாரையாக ஓமகுண்டத்தில் விடப்படும். அப்பொழுது தேங்காய், பால், பழம், வெற்றிலை, சுவர்ணபுஸ்பம் ஆகிய மங்கலப் பொருட்களும் ஓம குண்டத்தில் இடப்படும். பசுவின் கோசலம் (சிறுநீர்) மருத்துவ தன்மை கொண்டது.

குத்துவிளக்கில் நெய் ஊற்றி திருவிளக்கு பூசை செய்வர். ஆலயங்களில் மாவிளக்கு பூசை செய்யுமிடத்து மாவிளக்கில் நெய்விட்டு ஏற்றுவர். முற்காலத்தில் ஆலயம், வீடு ஆகியவற்றின் நிலத்தை சாணத்தினால் மெழுகுவர். இதனை அப்பர் புலர்வதன் முன் அலகிட்டு மெழுகுமிட்டு' எனப்பாடுகின்றார். நிவேதனமாக வைக்கப்படும் பால் காய்ச்சப்பட்ட தாக இருக்கவேண்டும். கிரியை சடங்குகளுக்கு காய்ச்சாத பால் பயன்படுத்தப்படும் பெண் ணின் புனித நீராட்டு விழாவுக்கும், திருமண விழாவிலும் பால், அறுகு வைத்து நீராட்டுவார்கள். வாழ்க்கை தூய்மையானதாக அறுகு போல் வேர் வேரூன்ற வேண்டுமென்பதே இதன் தத்துவமாகும். திருமண வைபவம் முடிந்தவுடன் முதலில் மணமக்கள் 'பசு' தரிசனத்தையே பெறுவர். பின்பு பிரசாதமாகப் பாலும், பழமும் அருந்துவர். ஆலயங்களில் விசேட கிரியைகள் இடம் பெறும் பொழுது பசுவினை ஆலயத்திற்கு கொண்டு சென்று கோபூசை செய்வர்.

புதுமனை குடிபுகுதலின்போது புதுப்பானையில் பால் காய்ச்சி அதற்குள் கற்கண்டு சேர்த்து எல்லோருக்கும் வழங்குவர். இதனைப் பால் காய்ச்சுதல் என்றே வழங்குவர். வீட்டில் துடக்கு ஏற்பட்டால் அதற்கான புண்ணியாகக் கிரியை செய்துவிட்டு நீரில் பால் கலந்த புண் ணியாக நீரை மாவிலையினால் வீடு, வெளிப்புறம், ஆகியவற்றில் தெளிப்பதோடு எல்லோரது உடம்பிலும் தெளிக்கப்படும். இங்கே பால் ஒரு புனிதப் பொருளாகிறது.

குழந்தைகளுக்கு (சோறு ஊட்டுதல்) அன்னப்பிராசனத்தின் பொழுது சோற்றுடன் பாலையும் சேர்த்து அளிப்பது வழக்கம். பௌத்தர்கள் எல்லா சுபகாரியங்களிலும் பாற்சோறு வைக்கும், பழக்கம் உண்டு. இந்துக்களும் தைத்திருநாளன்று புதுப்பானையில் பொங்கல் வைக்குமிடத்து பாலினைக் கலந்தே பொங்கல் வைப்பர். புதுப்பானையில் பால் பொங்கி வழிவதனைப் பார்த்து குதூகலித்து மகிழ்வர். நாட்டில் கடுமையான வரட்சி ஏற்பட்டால் இறைவனைக் குளிரவைக்கும் முகமாக குடம் குடமாக பாலினால் அபிடேகம் செய்வர். அம் பாளின் உளம் குளிர்ந்தால் மழை பெய்யுமென்பது ஐதீகம்.

எல்லா செல்வங்களையும் கொண்ட பசுவினை அடியார்கள் பாடல்கள் வாயிலாகப்

போற்றியுள்ளனர். "வாழ்க அந்தணர் வானவர் ஆனினம்" என திருஞானசம்பந்தரும் யாவர்க்கு மாம் பசுவுக்கொரு வாயுறை" என திருமூலரும் போற்றியுள்ளனர்.

உமாதேவியார் காஞ்சித்தலத்திலிருந்து வாழ்க்கையில் கடைப்பிடிக்கவேண்டிய முப்பத் திரண்டு அறங்களை வளர்த்தார் என்று புராணம் கூறுகிறது. அவற்றுள் பசுவுக்கு வாயுறை (பசுமாட்டிற்கு பசும் புல்லாகிய உணவு கொடுத்தும்) விலை கொடுத்து கொலை செய்யப்பட விருக்கும் பசுக்களை மீட்டல் ஆகியவை முக்கிய அறச்செயல்களாகும். ஆலயக்கிரிகைகள் நடாத்துமிடத்து ஆச்சாரியார் புலித்தோலை ஆசனமாகக் கொள்வர். ஆமைவடிவிலான பலகை யும் ஆசனமாகும். மானிடமிருந்து பெறப்படும் கஸ்தூரி அபிடேக திரவியமாகும். இதனால் அபிடேகம் செய்யப்பெறும் பொழுது கிடைக்கும் பலன் சகல காரியங்களிலும் வெற்றி கிடைப்பதாகும்.

தொன்மைக்காலத்தில் சந்திக்குச் சந்தி பசுக்கள் உடலை உரோஞ்சுவதற்காக ஆ வுரோஞ்சுக்கல் அமைத்திருந்தனர். இன்று கூட சில கிராமங்களில் ஆவுரோஞ்சுக்கல்லைக் காணலாம். கிணற்றுக்கு அருகாமையில் தொட்டியமைத்து பிராணிகள், மிருகங்கள் குடிப்பதற் காக நீர் இறைத்து விடுவார்கள்.

மேற்கூறியவற்றை தொகுத்து நோக்குகின்ற பொழுது பால் மங்கலப் பொருள்களுள் முக்கியமானதாகவும், கிரியை, பூசைக்குரிய பொருளாகவும், உணவுப் பொருளாகவும் கொள் ளப்படுகின்றதெனலாம்.

**திருச்சிற்றம்பலம்**

**வாழ்க அந்தணர் வானவரானினம்**
**வீழ்க தண்புனல் வேந்தனும்மோங்குக**
**ஆழ்க தீய தெல்லாமர னாமமே**
**சூழ்க வையக முந்துயர் தீர்கவே**

**திருச்சிற்றம்பலம்**

\- திருஞானசம்பந்தர்.




காடுடைய சுடலைப் பொடி பூசியனும் - கடலலை
மீதுபள்ளி கொள்ளும் பரந்தாமனும்
மேடுடைய மலைகளிலுறைகின்ற முருகனும்
வயல் நிலங்களை காக்கும் கணபதியும்
பூணூலுடைய அந்தணர் வழியால்
நால்வகை நிலத்தினின்றும் பரவி
செங்கோலுடைய மன்னரையும் மக்களையும்
காத்தருளும் இறை (இயற்கை) யருள்
நூலுடைய மறை வேதத்தின் மிகத்
தொன்மையுணர்ந்த மௌன பூசையேற்று
தொண்டை மானாறு மேவுகின்ற செல்வச்
சந்நிதி வேலுடைய பெருமானே!

# இராமலிங்க சுவாமிகள் [வள்ளலார்]

- த. நாகராசா அவர்கள் -

வள்ளற் பெருமான் ஓதாதுணர்ந்தவரென்றும் வெள்ளாடைத் துறவியென்றும் கூறப் படுபவர். அவருடைய இறுதி வாழ்க்கை மக்கள் நலன் காக்கும் சேவையாகவே முடிந்தது. இவருடைய அருட்பா மருட்பாவென்ற வாதத்திற்கிடையிலும் அவர் அதைப் பொருட்படுத்தாது தாங்கிக்கொண்டு தனது கொள்கையை மக்களிடையே பரவச் செய்தார். சமரசசுத்த சன் மார்க்கசங்கம் தோன்றியபின் அவரது கொள்கைகள் தமிழகமெங்கும் வேகமாகப் பரவின. பருவத்தில் பொழிந்த மழை போல வள்ளலார் கவிதை மழை பொழிந்தாறென்றே சொல்ல வேண்டுமென்பர் சிலம்புச்செல்வர் ம.பொ. சிவஞானம் ஆலயங்களிலும் இல்லங்கள் தோறும் அப்பாடல்கள் பாடப்பெற்றன. ஆலயங்கள் சென்று வழிபடும் பக்தரெல்லாம் "ஒருமையுடன் நினது திருமலரடி நினைக்கின்ற உத்தமர் தம் உறவு வேண்டும்" என்று துவங்கும் பாடலைப் பாடி இறைவனை வணங்கினர். "கோடையிலே இளைப்பாற்றிக் கொள்ளும் வகை கிடைத்த குளிர்தருவே" என்று தொடங்கும் பாடலைப் பாடாத மக்களில்லை. அந்தளவிற்கு வள்ளலார் பாடிய பாடல்களில் ஈடுபாடு கொண்டு காணப்பட்டனர். பக்தர்களேயன்றி பிச்சை எடுக்கும் பக்தர்கள் கூட,

*"அம்பலத்தரசே அருமருந்தே*
*ஆனந்தத்தேனே அருள்விருந்தே"*

என்று வள்ளற் பெருமானின் புரட்சிகரமான கருத்துக்களைப் பரப்பி வந்தனர். வயோதிபர் மட்டுமன்றி கல்லூரிகளிற் படிக்கும் சிறார்களும்,

*"கல்லாற்கும் கற்றவர்க்கும் களிப்பருளும் களிப்பே*
*கானார்க்கும் கண்டவர்க்கும் கண்ணளிக்கும் கண்ணே"*

என்ற பாடலைப் பாடி பள்ளித் தலமனைத்தும் ஆலயமாக்கினர் என்கின்றார் சிலம்புச் செல்வர். அத்துடன் ஔவை சூட்டிக் கொடுத்த நாச்சியார், காரைக்காலம்மையார் என்ற பக்த சிரோன்மணிகளின் வழி வந்த பெண்கள் வள்ளற் பெருமானின் பாடலை அதாவது கும்மியடிக்கும் பாடலைப் பாடி இல்லங்கள் தோறும் கோயிலாக்கினர். திருமணவீட்டிலும் பிண ஊர்வலத்தின் போதும் வள்ளலாரின் பாடல்கள் ஒலிக்கப்பட்டன. உதாரணமாக:-

*தெண்டனிட்டே னென்று சொல்லடி - சுவாமிக்கு நான்*
*தெண்டனிட்டேனென்று சொல்லடி என்றும்*
*(திருமண நிகழ்வில்)*

*அருட் சோதி தெய்வம் எனை ஆண்டு கொண்ட தெய்வம்*
*அம்பலத்தே ஆடுகின்ற ஆனந்த தெய்வமென்றும்*

(பிண ஊர்வலம்) பாடி தமது பாரம்பரியத்தை கடைப்பிடித்தனர். அந்தவகையில் இராமலிங்க சுவாமிகளின் பெருமை தமிழ் நாட்டிற்கு மட்டுமன்றி பாரததேசத்திற்கும் பறைசாற்றப்பட்டது. மேற்குறிப்பிட்ட கலாசார மரபுகளின் செயற்பாடுபோல பின்பற்றப்பட்டு வந்தன. சைவ மக்கள் மட்டுமன்றி வைணவ சமயத்தைச் சேர்ந்தோரும் வள்ளற்பெருமானின் பாடலைப் பாடினர். தேவார திருவாசகப் பாடல்கள் முற்றாகப் புறக்கணிக்கப்பட்டதென்று மருட்பா குழாத்தினர் கூறினாலும் பாடியபாடல்களால் பக்தி நெறி மாறவில்லை என்றும் பக்திநெறியில் புதிய மறுமலர்ச்சியொன்று தோன்றியதாகக் கூறலாம். அந்த அளவிற்கு தமிழ் நாடு மகிழ்வெய்தியது. சம்பந்தர், அப்பர் போன்றோர் தமிழ்நாடு பெற்ற புண்ணியக் கண்ணென்று கூறுவதுபோல வள்ளலாரும் தமிழகம் பெற்ற புண்ணியக் கண்ணென்று கூறலாம். பழையன கழிதலும் புதியன புகுதலும் அக்காலச் சூழ்நிலைக்கேற்ப அமைந்துவிடும் என்பது போல வள்ளற் பெருமானின் பாடல்களும் அக்காலச் சூழலுக்கேற்ப அமைந்து காணப்பட்டது. வள்ளலார் பாடிய பாடல்களை திருவாவடுதுறை ஆதீன மகா சந்நிதானமன்றி தருமபுர ஆதீனமும் இவரது பாடலை மறுத்துரைத்தனர். இதற்கு முக்கிய காரணம் வைணவதெய்வத்தை வள்ளலார் புகழ்ந்து பாடியதாகும். நாவலர் பெருமானுக்கும் வள்ளற்பெருமானுக்குமிடையே பாடல் ரீதியில் முரண்பாடு காணப்பட்டாலும் அவர்கள் ஒரு வரையொருவர் மதித்து வாழ்ந்தனர். வள்ளலார் அருட்பா மறுப்பு என்றும் மருட்பா மறுப்பென்றும் இரண்டு குழுக்களிடையே மோதல் காணப்பட்டதைக் கண்டு வள்ளலார் சிந்தை நொந்து பரமனிடம் வேண்டினார். சைவப்பெருமக்கள் வள்ளலாரை வெறுத்து விவாதம் நடத்தினாலும் அல்லது கருத்துப்போர் நடத்தினாலும் தன்னை எதிர்த்தவர்களை தமது சுற்றத்தவர்களாகவேகருதினார் வள்ளற் பெருமான். அந்தளவிற்கு பொறுமையுடன் செயற்பட்டார். இதை விளக்க வள்ளலார் பாடிய பாடலொன்று பின்வருமாறு கூறுகின்றது.

*வாது பேசிய மனிதர் காள் ஒரு*
*வார்த்தை கேண்மின்கள் வந்துநும்*
*போது போவதன் முன்னரே அருட்*
*பொதுவிலே நடம்போற்றுவீர்*
*தீது பேசினீரென்றிடாதுமைத்*
*திருவுளங் கொளுங் காண்மினோ*
*சூது பேசிலேன் நன்மை சொல்கின்றேன்*
*சுற்றம் என்பது பற்றியே*

சமய மதமார்க்கங்களால் இறைவனை அடைய முடியாதென உணர்த்தி எம்மதமும் சம்மதமென்ற சமரச சன்மார்க்க நெறிநின்று இறைவன் அருள்பெறவாரீர் என்று மருட்பா குழாத்தினரை வள்ளற் பெருமான் அழைக்கின்றாரென்று ம.பொ.சி. கூறுவர்.

யேசுபிரான், நபிபெருமானார் காந்திமகான் போன்றோர் மனித குலத்துக்கு நன்மை செய்ய வந்தவர்கள் என நினைத்து தொண்டாற்றினர். வள்ளற் பெருமானும் இறைவன் அனுப்பிய தூதுவராக மக்களிடையே தன்னை அறிமுகப்படுத்திக் கொண்டார். "நானுரைத்த வார்த்தையெல்லாம் நாயகன் தன் வார்த்தை நம்புமினோ நமரங்காள" என்று வள்ளற் பெருமான் கூறினார். இதை ஆணவம் என்றனர் சைவர்கள். ஆனால் வள்ளற் பெருமான் வாழ்ந்த காலத்தில் இராம கிருஷ்ண பரமஹம்சர் இது ஆணவமாகாது என்கின்றார். வள்ளலார் ஆண்டவன் அருளால் உள்ளொளி பெற்ற ஞானியாவார். தமக்கு தந்த எல்லா அருட் செயல்களும் இறைவனால் கொடுக்கப்பட்டதென்கிறார் இராமலிங்கர். பணத்தை வெறுத்தவர். ஆண்டவரிடத்தே தன்னை சரணாகதியாக்கினவர். தன்னை வணங்கினவர்களை அவர் ஏற்கவில்லை. எல்லாம் ஆண்டவன் சித்தமேயென்று தன்னை நாடி வந்தவர்க்கும் சீடர்களுக்கும் உணர்த்திக் காட்டினார்.

*"செயல் அனைத்தும் அருளொளியாற் காண்க என எனக்கே*
*திருவுளம் பற்றிய ஞானதேசிக மாமணியே"*

இப்பாடலின் படி எதையும் அறிவாலே பார்க்காமல் அருளாலே பார் எனக் கூறுகின்றார். இவரின் பாடலில் கூட தாயுமானவரின் கருத்தையே வலியுறுத்திக் கூறுகின்றார் என்பர். வள்ளலார் கண்ட ஒருமைப்பாட்டின் ஆசிரியர்.

(முற்றிற்று)

---


**சந்நிதியான் ஆச்சிரமம் மேற்கொண்டுவரும் நித்திய அன்னப்பணிக்கும் மற்றும் ஆச்சிரமத்தினால் நடாத்தப்படும் சகல சமுதாயப்பணிகளுக்கும் உதவிபுரிய விரும்புவோர் கீழே உள்ள முகவரியுடன் தொடர்புகொள்ளவும்.**

காசுக்கட்டளை
செ. மோகனதாஸ்
சந்நிதியான் ஆச்சிரமம்,
தொண்டைமானாறு.
T.P.No. 021-2263406
021 3219599

காசோலை
செ. மோகனதாஸ்
க. இல. 7342444
இலங்கை வங்கி,
பருத்தித்துறை.

www. sannithiyan. org

## படங்கள் தரும் பதிவுகள்

### வாராந்த நிகழ்வின் வரிசையில் கௌரவிக்கப்பட்டோர் (31.01.2010)




திரு. ஆறு திருமுருகன் அவர்கட்கு ஆச்சிரமத்தின் சுவாமி அவர்கள் பொன்னாடை போர்த்தி கௌரவிக்கும் நிகழ்வு அருகில் செஞ்சொற் செல்வர் இரா. செல்வ வடிவேல் அவர்களும்




அதிபர் நவரெத்தினராசவேல் அவர்களுக்கு மதுரகவி காரை எம்.பி. அருளானந்தம் அவர்கள் நினைவுக் கேடயம் வழங்கும் நிகழ்வு


கடன்படுதல் துயரத்தை வளர்ப்பதற்கு வழி




கௌரவிக்கப்பட்டோர் வரிசையில் திரு. சிவ ஆறுமுகசாமி அவர்கட்கு இளைப்பாறிய அதிபர் க. ஆனந்தராசா அவர்கள் நினைவுக் கேடயம் வழங்கும் நிகழ்வு



நிகழ்வின் வரிசையில் அதிபர் ச. லலீசன் அவர்கட்கு அதிபர் ஆறு திருமுருகன் அவர்கள் நினைவுக் கேடயம் வழங்கும் நிகழ்வு



கௌரவிக்கப்படுவோர் வரிசையில் கிராம சேவையாளர் க. ஸ்ரீஸ்கந்தராசா அவர்கட்கு பண்ணிசைப்புலவர் சி. தில்லைமணி அவர்கள் நினைவுக் கேடயம் வழங்கும் நிகழ்வு அருகில் பேரவை உறுப்பினர் கு. அருணகிரிநாதன் அவர்களும்.



ஆசிரியர் K. கைலநாதன் அவர்கட்கு திரு. S. சிவப்பிரகாசம் அவர்கள் நினைவுக் கேடயம் வழங்குவதைக் காணலாம்

உன்னுடைய பகைவன் உன் இதயத்திலே தான் உள்ளான்.



நிகழ்வின் வரிசையில் கலாபூஷணம் இசைமணி வ. செல்லத்துரை அவர்கட்கு இளைப்பாறிய ஆசிரியர் க. சொக்கலிங்கம் அவர்கள் நினைவுக் கேடயம் வழங்கும் நிகழ்வு



வாராந்த நிகழ்வில் கௌரவிக்கப்பட்டவர்களில் கலந்து சிறப்பித்தவர் வரிசையில் ஆசிரியர் திருமதி கௌரி சுரேசன் அவர்கட்கு இளைப்பாறிய அதிபர் திருமதி தவமலர் சுரேந்திரநாதன் அவர்கள் நினைவுக் கேடயம் வழங்கும் நிகழ்வு

# மனிதனை நெறிப்படுத்துவன மதங்களே!

**- பேராசிரியர் கலாநிதி இரா. சாந்தன் J.P அவர்கள் -**

மனிதனை மனிதனாக வாழவைப்பது மதங்களே! மதம் எனப்படுவது நெறி அல்லது செல்லும்பாதை எனப்பொருள்படும். மனிதனானவன் அந்த நெறிவழி செல்வதனாலேயே பூரண மனிதனாகின்றான். அது அல்லாமல் நெறிதவறிய மனிதன் திசை காட்டியில்லாப் படகு போல வழிதவறுகின்றான். பல இன்னல்களுக்கு ஆளாகுகின்றான்.

இம்மதங்கள் எவ்வாறு மனிதனை நெறிப்படுத்துகின்றன என்று நோக்குவோமாயின்! இவை மனிதனை ஒரு வரம்புக்குள்ளேயே வாழ வழிவகுக்கின்றன. எப்படியும் வாழலாம் என்று இல்லாமல் இப்படித்தான் வாழவேண்டும் என்று கோடிட்டுக் காட்டுகின்றன. அது இந்து மதமாயினும் சரி வேறு எந்த மதமாயினும் சரி எல்லா மதங்களும் வரம்புகளின் வழி செல்லும் வாய்க்கால்களாக அன்பு, கருணை, நேர்மை, பொறுமை போன்ற இன்னோரன்ன சீரிய ஒழுக்கப்பண்புகள் மூலம் மேன்மையான வழிக்கு இட்டுச் செல்லுகின்றன.

இந்து மதத்திலே அன்பை வளர்ப்பது எப்படி என பட்டினத்தார் பின்வருமாறு கூறுகின்றார்.

*ஒன்றென்றிரு தெய்வம் உண்டென்றிரு உயர் செல்வமெல்லாம்*
*அன்றென்றிரு பசித்தேன் முகம்பார் பல் அறமும் நட்பும்*
*நன்றென்றிரு நடு நீங்காமலே நமக்கிட்டபடி*
*என்றென்றிரு மனமே உனக்கே உபதேசமிதே.*

பசித்தோர் முகம் பார்க்க வேண்டும். வறுமைப்பட்டவரது துன்பத்தை விரைந்து துடைக்கவேண்டும்.

*"அற்றார் அழிபசி தீர்த்தல் அ∴தொருவன்*
*பெற்றான் பொருள்வைப் புழி"*

என்பது திருவள்ளுவர் வாக்கு. வறியவர்களின் பசியைத் தீர்க்க வேண்டும். அதுவே பொருள் பெற்ற ஒருவன் அப்பொருளைத் தனக்குப் பிற்காலத்திலே உதவுமாறு சேமித்து வைக்கும் இடமாகும் என்பது இக்குறளின் பொருள்.

அடுத்தபடியாக பட்டினத்தார் வலியுறுத்துவது அறங்கள் செய்ய வேண்டும் என்பதாகும். இதில் அறங்கள் என்பவை எவை? பொறாமை கொள்ளாதிருத்தல் பிறர் பொருளுக்கு ஆசைப்படாதிருத்தல், சினத்தைத் தவிர்த்தல், இனிய வார்த்தைகளைச் சொல்லுதல் என்பனவே அந்த அறங்கள்.

*"அழுக்காறு அவா, வெகுளி இன்னாச் சொல் நான்கும்*
*இழுக்கா இயன்றது அறம்"* என்கிறது திருக்குறள்.

வேறு என்ன நமக்கு வேண்டும்? அருமையான நண்பர்கள் வேண்டும். சிரித்து

மகிழ்தல் மட்டும் நட்பன்று. பிழை செய்யும்போது, இடித்துரைப்பதும், துன்பம் நேரும்போதும் உதவி செய்வதும் நட்புக்கு இலக்கணமாகும்.

*"நகுதற் பொருட்டன்று நட்டல் மிகுதிக்கண்*
*மேற்சென்று இடித்தற் பொருட்டு"*

என்றும்

*"உடுக்கை இழந்தவன் கைபோல ஆங்கே*
*இடுக்கண் களைவதாம் நட்பு"*

என்றும் பொய்யாமொழி இதனையே வலியுறுத்துகின்றது.

இன்னும் என்ன பண்பு நமக்கு தேவைப்படுகின்றது? நடுவு நிலைமை நீங்காத நேர்மைத் திறம் வேண்டும். சிந்தனையிலும் சொல்லிலும் செயலிலும் கோணுதல் இல்லாமல் இருக்க உறுதி நமக்கு வேண்டும். இக்குணங்களை நமது வாழ்வில் மதங்கள் இடித்துரைக்கின்றன. இதன் வழி செல்லும் வாழ்வின் பயன்களை எடுத்துச் சொல்லுகின்றன. இவ்வழிச் சென்றவர்களின் வரலாற்றைப் பாடமாக கற்றுத் தருகின்றன. இதனால் மனிதன் மேன்மையடைகின்றான். மக்களின் சமூகத்திலே மாட்சிமையடைகின்றான். இதனைப் பேணிக்காப்பாற்ற முடியாதவன் மக்களோடு மக்களாக கலந்து கரைந்து விடுகின்றான்.

மேலும் கூறப்போனால் ஒவ்வொரு மதவழிபாட்டுத் தலங்களும் அங்கு எவ்வாறு வழிபாட்டில் கலந்து கொள்ள வேண்டும் என்பதுடன் இறைவனின் பரிபூரண நிலைமை தோற்ற வைத்து பக்தி மேலீட்டினை உருவாக்குவதன் மூலம் மனிதனை மனத் தூயனாக்கி மேன்மை அடையவைப்பதுடன் அங்குள்ள விக்கிரகங்கள், சிற்பங்கள், ஓவியங்கள், போன்றனவும் மனிதனின் காட்சி வழி சென்று உறுதியான பக்தியினை மனதிலே ஆழப்பதிய வைப்பதன் மூலம் பண்புள்ள ஒழுக்க சீலனாக மாற்றம் அடைகின்றான்.

இந்து மதத்திலாயினும் சரி ஏனைய மதங்களிலாயினும் சரி கடைப்பிடிக்கப்படும் விரதங்கள் எதை எடுத்துக் காட்டுகின்றன. பசித்திரு, விழித்திரு, தனித்திரு எனக்கூறுகின்ற மதங்கள், மதங்கள் மூலம் மனிதன் பசித்திருக்கும் போது மற்றவனுடைய வறுமை துன்பம் புலப்படுகின்றது. விழித்திருக்கும் போதும் தனித்திருக்கும் போதும் அதனால் ஏற்படும் கஷ்டங்களை உணருகின்றான். இதன் மூலம் ஏனையவர்களின் கஷ்டத்தை அனுபவவாயிலாக உணரும் மனிதன் மற்றவர்களுக்கு உதவும் மனப்பாங்கினைப் பெறுகின்றான்.

ஒவ்வொரு சமய விழாக்களின் மூலமும் பல மனித நேயத்தன்மையைப் பெற்றுக் கொள்வதனால் மனிதன் மேன்மையடைகின்றான். குறிப்பாக இந்து மத வைபவங்களான தைப்பொங்கல், வருடப் பிறப்பு, தீபாவளி, நவராத்திரி போன்றவற்றை எடுத்து நோக்கும்போது நன்றிக்கடன், சுற்றம் சூழ விருந்துண்ணல், பெரியோரை மதித்தல், தானதர்மம் செய்தல் அறம் வெல்லும் மறம் தோற்கும், தாய்மையின் பெருமை போன்ற பல தத்துவக் கருத்துக்களைப் பெற்று அவற்றை மனந்திருந்தி செயற்படுவதன் மூலம் மதங்கள் மனிதனை மனிதனாக வாழவைத்து இறுதியில் மனிதனை தெய்வமாக மாற்றுகின்றன. அவை கூறும்வழி சென்று நாமும் நடமாடும் தெய்வங்கள் ஆவோமாக!.

# கடவுள் எங்கே?

- பொ. சிவபாதசுந்தரம் அவர்கள் -

இறைவன் எல்லா ஆன்மாக்கள் உள்ளத்திலும் உறைந்துள்ளார். "அவனன்றி அணுவும் அசையாது" என்பது நாம் அறிந்த உண்மை.

ஆகவே, எல்லாப் பொருட்களிலும் எல்லா உயிர்களிலும் பாலில் நெய்போல் எங்களால் அறியமுடியாதபடி இருந்து எங்களை இயக்குகிறார் கடவுள்.

"தொண்டர்தம் பெருமை சொல்லவும் வேண்டுமோ" என்று ஔவையார் அடியவர்களின் சிறப்பியல்புகளைக் கூறியுள்ளார். எல்லாவற்றையும் கடந்து நிற்கும் பெருமானை நாம் எளிதில் அறிய முடியாது. தொண்டர்கள் அருளாளர்கள் நாயன்மார் போன்ற உலகப் பற்றற்ற ஞானி களின் மனக் கண்ணாடியில் தோற்றமளிக்கிறார்.

அவ்வடியவர்கள் எப்படி இறையருளை உள்வாங்குகிறார்கள் என்று சிந்தித்தால் அவர் கள் அழுக்காறு, அவா, வெகுளி, இன்னாச்சொல் என்ற மாயையாகிய ஆசையை விட்டுவிட்டு அழுக்கற்ற தூமையான கண்ணாடி போல நிற்கும் மன இயல்பினர். ஆகவே, தூய அழுக்கற்ற கண்ணாடியில் தெளிவாக பார்க்க முடியும் எங்கள் உருவத்தை அப்படியே இறைவனையும் முழுக்க முழுக்க கபடமற்ற முறையில் பார்க்கின்றார்கள். அவர் செயல்களை எங்களுக்கு ஒலிபெருக்கி பரப்புவதுபோல் சொல்ல, செயலில் காட்ட, அருகதை உள்ள உத்தமர்கள் ஆகின்றார்கள். இறை சக்தி அருளாளர்களின் இருப்பிடமாகின்றன.

"தன்னுயிர் தானறப் பெற்றானை ஏனைய மன்னுயி ரெல்லாம் தொழும்" என்ற வள்ளுவர் கூற்று உண்மைப்படுத்துகின்றது.

'தன்னை அறிந்தவன் தலைவனை அறிவான்' என்பது தெளிவாகின்றது.

ஏன் நாம் அப்படி வரக்கூடாது என்றால், வரக் கூடிய சாத்தியக் கூறுகள் உண்டு. எப்படி?

அழுக்காறு, அவா, இன்னாச்சொல், வெகுளி என்ற சேற்றில் புதைந்து அவற்றை நீக்க முடியாதபடி ஆசையில் மாழும் நாம் எப்பொழுது அவற்றைவிட்டு இறையருள் பெறும் வாய்ப்பு உண்டாகின்றதோ அப்பொழுதே நமக்கும் ஈஸ்வரனின் கருணை வெள்ளம் நம்மிடம் வந்து அலை மோதும், தீய எண்ணங்கள் குடி கொண்ட இடத்து, ஞான சூரியன் பிரகாசியான் ஞானம் வர நடமாடும் தெய்வமாகலாம்.

முகம் பார்க்கும் கண்ணாடியில் பலவகைப்பட்ட கறைகள் இல்லாமல் அகற்றப்பட்டு கழுவி எங்கள் மாயையை நீக்கினால் இறையருள் வந்து சேரும். மனிதன் தெய்வமாகலாம்.

நமது அழுக்கு மனத்தை மாற்றும் மருந்து ஒன்றுண்டு. அதை நாம் தினமும் சந்திக் கிறோம். அதில் நம்பிக்கை இல்லை என்ற அலட்சியம். 'கைப்புண்ணுக்கு கண்ணாடி வேண்டுமா" எங்கள் அறியாமை மறைக்கின்றன. அது எது?

நாயன்மார் தந்த திருமுறைகள் கைவசம் உண்டு. அவற்றை வழிப்படுத்தத் தெரியாத அறியாமைப் பசாசு எங்களை அணுகவிடுவதில்லை.

*"வேண்டுதல் வேண்டா இறைவனடி*
*சேர்ந்தார்க்கு யாண்டும் இடும்பையில"*

தேவாரம் முதல் திருமுறைச்செல்வங்களை வைத்துக்கொண்டு தீண்டாதிருந்தால் எப்படி இறையருள் கிடைக்கும், நம்பினார் கெடுவதில்லை, நம்பிக்கையோடு இச்செல்வங்களை பாராயணம் செய்து எங்கள் பிணியைத் தீர்க்கலாம். அப்பொழுதே எங்களிடம் உறைந்திருக்கும் கடவுள் தன்மை வெளிப்பட்டு இதே பிணி தீர்க்கும் மருந்து பித்தம் தெளிய மருந்தொன்று உண்டு. அதுவே திருவருள் மருந்து. தந்தது உந்தனை கொண்டது எந்தனை யார் கொலோ சதுரர் என்றார் மணிவாசகர்.

இறையருள் பெற்ற பின் நாம் வேறு, அவர் வேறு என்ற நிலை இல்லை எம்மைத் தெய்வமாகும் நிலையாகின்றது.

"அன்பே சிவம்"

---

# வாழ்வென்றும் ஈடேறுமே!

செல்வச் சந்நிதி உறையும்
சேவற் கொடி யோனை
சிந்தையில் நினை மனமே!
வல்வினை தீர்த்திடுவான்
வற்றாத அருள் சொரிவான்
வணங்கிடு நீ தினமே!!.... (செல்)

தொண்டைமானாற்றங்
கரைதனிலே கோவில்
கொண்டவன் எங்கள் குகன்!
அண்டித் தொழுவோர்க்கு
அல்லல் களைந்திடும்
ஐயன் உமை மகனே! (செல்)

வள்ளி தெய்வானைக்கு
வாய்த்த மணாளனை
வணங்கிடுவாய் மனமே!
வள்ளல் அவன் பதம்
வாழ்த்தி வணங்குவோர்
வாழ்வென்றும் ஈடேறுமே (செல்)

கீரிமலை கி. குலசேகரன்

# நம் மனதை வென்ற நல்ல பெண்மணிகள்

- கே.எஸ். சிவஞானராஜா அவர்கள் -

இற்றைக்கு ஐம்பது வருடங்களுக்கு முன்னதாக நாம்சிறுவர்களாகத் துள்ளித்திரிந்த காலமது. நாகரீகம் என்பது யாழ்ப்பாணத்திற்கு விண்ணப்பிக்கத் தயங்கிய வேளையது. கல்விக்குச் சமயங்கள் கைகொடுத்த பாதையது. பக்குவம், பண்பாடு, பயபக்தி, கண்டிப்பு, கட்டுப்பாடு, கலைகள், கௌரவங்கள் மலிந்த காலமது. பாதையிலும் சரி, படிப்பிலும் சரி, பார்வையிலும் சரி யாருமே பிசக முடியாத காலமது. குழந்தைகளும் சரி, சிறுவர்களும் சரி, இளம் பராயத்தவர்களும் சரி கண்டபடி அங்கு இங்கு நிற்கவோ, காணவோ, தடுமாறவோ முடியாத உலகமது. ஆண்களும் சரி, பெண்களும் சரி உடை, நடை, பாவனையில் தமிழும், சைவமும் மகிழ்ந்து வாசம் செய்த பண்பாடது. இவ்வாறானதொரு நேர்த்தியான கால வேளையில், நம் இளமை வயதினரைச் சீராகவும், உதாரணமாகவும் வழிகாட்டி நம்மனதை வென்ற நல்ல பெண்மணிகளாக, அளவெட்டியில் பலர் வாழ்ந்துள்ளனர். அவ்வாறான பலரில் சிலர், கும்பழாவளைப் பிள்ளையார் கோவிலின் சரியைத் தொண்டுகளில் ஒருமுகமாகப் பலன் கருதாது பேறு தந்தவர்களாவர். அத்தகு பெண்களைக் காணும் போதும், பேசும் போதும், தாண்டிச் செல்லும் போதும் நாமும் புனிதமாகி விடுவோம். (ஆம்! இப்போதைய நிலையில் நாம் எங்கே போகின்றோம் என்ற இலக்குத் தோற்றுப் போய்விட்டது. சுருங்கச் சொன்னால் மனிதன் வென்றுவிட்டான். மனிதம் வெல்லப்படவில்லை. "நான்" என்ற சொல் மட்டும் வெல்லப்பட்டுள்ளது. நாம் வெல்லப்படவில்லை! மாறாக என்னை "நான்" மகிமைப்படுத்துகின் றேன். என்னைவிட எம்மில் ஒருவன் மனிதனாக இருக்கின்றான். அந்த மனிதன் என்றுமே அடிமை யாகவும், அமைதியாகவும் இருக்கின்றான். அவன் மேடைக்கு வரவில்லை) அவ்வாறு மனிதமதை மகிமைப்படுத்திய நல்ல பெண்மணிகள் எம்மையும், நாம் வாழ்ந்த சமூகத்தையும் வாழ வைத் துள்ளனர். இவர்களை ஒரு கணம் ஞாபகமூட்ட வழிதந்த ஞானச்சுடருக்கு என்றும் வணக்கங்களும், வாழ்த்துக்களும் உரியதாக. அவ்வாறானதென நான் வணங்கும் நல்ல பெண் மணிகள் :-

01. சேதுப்பிள்ளை அக்கா
02. சேவையர் அம்மா
03. கற்கண்டு பொன்னம்மாக்கா
04. செல்லம்மாக்கா
05. பண்டிதை அம்மா
06. மீனம்மாக்கா
07. மனோன்மணி அக்கா
08. வள்ளியம்மை அக்கா
09. இராசம்மாக்கா
10. பறுவதக்கா
11. இளையபிள்ளை அக்கா
12. செங்கமல அக்கா
13. கமலக்கா
14. ஆச்சிமுத்தக்கா
15. மங்களேஸ் அக்கா
16. சின்னம்மாக்கா
17. மகேஸ் அக்கா

ஆகிய பெயர்களைக் கொண்டவர்கள் தினமும் கும்பழாவளைப் பிள்ளையார் ஆலயம் வந்து ஏதாவது ஒரு பணியை ஒழுங்காக, ஒற்றுமையாக நிறைவேற்றி அன்றைய

இளைய சமூகத்தினருக்கு வழிகாட்டியவர்களாவர். எப்படி மறக்க முடியும்? இவ்வாறு ஒருமுறையாவது எழுதுவதற்கு ஒரு சந்தர்ப்பம் கிடைத்தமையை எண்ணி யான் அவ்வாத்மாக்களைப் பூஜிக்கின்றேன்.

---

## சைவ சித்தாந்தத்தின் தெளிவே
# சித்த மருத்துவம்

சிவபெருமானால் ஆரம்பிக்கப்பட்ட வைத்திய வரலாறு முதல் முதல் அகத்தியருக்கு வழங்கப்பட்டது. இதனால் சிவபெருமானுக்கு வைத்தியநாதன் என்றும் பெயர் சூட்டப்பட்டது.

மனித உடலுக்கும் ஆலயத் தோற்றத்திற்கும் ஒற்றுமை உண்டு இதனைத் திருமூலர் இப்படிக் கூறுகின்றார்.

*உள்ளம் பெருங் கோயில்*
*ஊனுடம்பு ஆலயம்*
*வள்ளல் பிரானாருக்கு*
*வாய்க் கோபுர வாசல்*
*தெள்ளத் தெளிந்தார்க்கு*
*சிவன், சிவலிங்கம்*
*கள்ளப் புலனைந்தும்*
*காளா மணி விளக்கே*

இதன்படி கோபுர வாசல் மனித உடம்பின் வாய்ப் பகுதியை குறிக்கிறது. இருதயம் மூலஸ்தானத்தையும் வயிற்றுப் பகுதி (தொப்புள் கொடி) கொடிக் கம்பமாகவும் வர்ணிக்கப்படுகிறது. மனிதன் இறந்தபின் கிரிகைக்காக சுண்ணப் பாடல் படிப்பதும் ஆலயக் கொடியேற்றத்திற்கு சுண்ணப் பாடல் படிப்பதும் ஒரே சம்பவமாகும்.

அந்தக் காலத்தில் சத்திர சிகிச்சை நடைபெற்றது, நக்கீரனுக்கு ஒரே தலையிடி. இதனால் அவர் வேதனைப்பட்டார். இதை உணர்ந்த அகத்தியர் தன்னுடைய சிஸ்யனுக்கு சைகையால் காட்டினார். அதன்பின் நக்கீரனின் மண்டை ஓட்டைப் பிளந்து பார்த்தபோது மூளையில் ஒரு தேரை இருக்கக் கண்டார். உடனடியாக அதை எடுப்பதற்கு ஆயத்தமானார். அதற்காக ஆயுதம் (குறடு) எடுத்தபோது ஊமை சிஸ்யன் அதைத் தடுத்தான். பின்பு ஒரு தாம்பாளத்தில் தண்ணீர் விட்டு சிரசடியில் பிடித்தார். உடனே தேரை தண்ணீரில் குதித்தது. பச்சை மூலிகைகள் வைத்து மண்டை ஓட்டைப் பொருத்தினார்கள். அன்றிலிருந்து ஊமை சிஸ்யனுக்கு தேரையர் என்று பெயர் சூட்டப்பட்டது.

சித்த மருத்துவத்தில் பாவிக்கப்படும் மருந்துகள் இறைவனைக் குறிக்கும் மருந்தாக இருந்தன. இதன்படி, சிவன் குளிகை, காய்ச்சல், இருமல், தலையிடி, தடிமன் போன்ற நோய்களைக் குணமடையச் செய்யும்.

விஷ்ணு சக்கரம் இது விஷ்ணுவின் சக்கரம் எப்படி விரைவில் செயற்படுகிறதோ அப்படி சன்னிதோஷம், படுவன் காய்ச்சல் போன்ற நோய்களுக்குப் பயன்படுத்தப்பட்டது.

இன்று சித்த மருத்துவத்திற்கும் ஆங்கில மருத்துவத்திற்கும் இடையே ஒரு தொடர்பு இருக்கிறது. எதற்கும் மூலிகை மூலம் பெறப்பட்டதும் தாவரங்கள் மூலம் பெறப்பட்டதுமானதே மருந்து வகைகள். இதனைப் பெரும் நிபுணர்கள் கூட ஏற்றுக் கொண்டுள்ளார்கள்.

ஆகவே சைவ சித்தாந்தத்திற்கும் சித்த மருத்துவத்திற்கும் இன்னும் ஏராளமான தொடர்புகள் உண்டு என்பதை அறியத் தருகின்றேன்.

**"நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்"**

**- Dr. V. பாலகிருஷ்ணன் அவர்கள் -**

உ

# அருட்கவி. சி. விநாசித்தம்பி புலவரது கண்ணன் வந்த வண்ணம் நூலிலிருந்து....

- செல்வி தி. வரதவாணி அவர்கள் -

யோகமாயை ஆகிய துர்க்கையைக் கல்லில் அடித்து கொல்வதற்காக கம்சன் ஓங்கியதும், அவனது கைகளில் இருந்து அக்குழந்தை நழுவி ஆகாயத்தில் உயரச் சென்று "உன்னைக் கொல்பவன் ஏற்கனவே பிறந்து வாழ்ந்து கொண்டிருக்கிறான். தேவையில்லாமல் பச்சிளம் குழந்தையைக் கொல்லாதே, உண்மையான எதிரியைத் தேடு" எனக்கூறி மறைந்தது. இவ்வாறாக

*"வித்தகி வைஷ்ணவி மொழிகேட்டு*
*வெந்திடு கம்சன் கொதித் தெழுந்தான்*
*பத்துத் தினங்களுட் பிறந்திருக்கும்*
*பாலகர் தலைகளை வெட்டுவித்தான்*

இந்த அதிசய வார்த்தைகளைக் கேட்ட கம்சன் கடுங்கோபம் கொண்டான். பற்களைக் கறகற வென்று கடித்தான். தோள்களைத் தட்டினான். உடல் நடுங்கினான். கண்களில் தீப்பொறிகள் பறந்தன. ஏவலாளரை அழைத்தான். "எனது அரசாங்கத்தில் உள்ள நாடெல்லாம் சென்று பத்து நாட்களுக்குள் பிறந்திருக்கும் எல்லாக் குழந்தைகளின் தலையையும் எடுத்து வாருங்கள். அக்குழந்தைகளுக்குள்ளே கண்ணன் இருப்பான். சீக்கிரம்" என்று கட்டளையிட்டான்.

எண்ணில்லாக் குழந்தைகள் கொண்டு வரப்பட்டன. எல்லாக் குழந்தைகளின் தலைகளையும் அந்த மகா கொடும்பாவியான கம்சன் தனது வாளாலே வெட்டி மலை போல் குவித்தான். அந்தத் தலைகளுக்குள் ஸ்ரீ கிருஷ்ணரின் அம்சம் கொண்டதான தலையைக் காணவில்லை போல் இருந்தது. இதனால் கம்சன் ஆர்ப்பரித்தவாறு எங்கோ மறைந்து கிருஷ்ணன் வாழ்கிறான் எனக் கூறி மேற்கொண்டு என்ன செய்வது எனச் சிந்திக்கலானான்.

*"வெட்டிக் கொணர்ந்திட்ட பாலகரின் தலையுள்*
*வேணுகோ பாலனின் தலையில்லை என்று*
*பட்டிப் பசுக்குலம் சென்று வஞ்சனையால்*
*பாலரைக் கொல்ல ஒரு பூதனையை விட்டான்.*

தமது அசுர அமைச்சர்களுடன் கலந்தாலோசிக்கையில் பூதனை பற்றி அறிந்து கொண்டான். பூதனை என்பவள் சூனியம் வாய்ந்த பெண் அரக்கி. ஒழிந்திருந்து எதையும் அறியும் ஆற்றல் மிக்கவள். எனவே கிருஷ்ணர் இருக்கும் இடத்தை அவளே கண்டறிந்து கொல்ல வல்லவள் என்பதை அறிந்தான். உடனே அப்பூதனையை அழைத்து நகரங்கள்

தொல்லை கொடுக்கும் உறுப்பு நாக்கு

கிராமங்கள் அனைத்திலும் உள்ள குழந்தைகளுக்கு உனது நச்சுப் பாலை ஊட்டி இறக்கும்படி செய்வாயாக" என்று உத்தரவிட்டான். அதற்கு அவளும் இணங்கினாள்.

விரும்பிய உருவை எடுக்கும் சக்தி கொண்ட பூதனை குழந்தையைத் தேடி ஆகாயத்தில் பறந்து கொண்டிருந்தாள். அப்போது கோகுலத்தைக் கண்டாள். அதற்கு முன் அவள் அங்கு சென்றதில்லை. அதனால் கீழே இறங்கினாள். குழந்தைகள் வாழும் இல்லங்கள் நோக்கி நடந்தாள். அழகிய ஓர் பெண் உருவெடுத்து அக்குல அரசன் நந்த கோபன் மனை சென்றாள். அவளது அழகிய தோற்றத்தைக் கண்டு திருமகளே வந்து விட்டதாக அவளின் அழகில் வியந்து யசோதை அவளை வரவேற்றாள். கோகுலத்து கோபியர் மனதையும் அழகிய உருவெடுத்த பூதனை கவர்ந்துவிட்டாள்.

*"பொல்லாத கம்சனின் கட்டளைப் படியே*
*பூதனை எனுங்கொடியள் பாலூட்ட வந்தாள்*
*மல்லாடி யவள் முலையை வாரிக் குடித்து*
*மாய்த்திட்டான் மாயவன் வாயாற் கடித்தே"*

நந்தகோபன் மனையுள் கிருஷ்ணர் தொட்டிலில் துயில் கொண்டு இருந்தார். மெதுவாகக் குழந்தையை கையில் எடுத்தாள். இதனைக் கண்ட யசோதை குழந்தையை வாஞ்சையினால் கையில் எடுத்து வைத்துள்ளாள் என நினைத்து சென்றுவிட்டாள். பூதனை சுற்றும் முற்றும் பார்த்தாள் யாரும் இல்லை என்று தெரிந்ததும் குழந்தைக்குத் தனது நச்சுப்பாலை ஊட்டத் தொடங்கினாள். சிறிது நேரத்தில் தனது பாலை அருந்தி குழந்தையாகிய கிருஷ்ணர் இறந்துவிடுவான் எனக் கருதிப் புகட்டியவளுக்கு அச்சிறிது நேரத்தில் தான் அவளுக்கு விளங்கியது! குழந்தையாகிய கிருஷ்ணர் குடிப்பது தன் நச்சுப்பாலை அல்ல. தனது உயிரை என்பது. உடனே ஓலமிட்டுக் கத்தினாள். அலறினாள். பயனில்லை கிருஷ்ணர் அவளின் உயிரைக் குடித்துவிட்டார். பெண் உருவம் நீங்கி தனது சுயமான அரக்கி ரூபத்திலே செத்துக் கீழே வீழ்ந்து மடிந்தாள்.

கொடியவளான பூதனையின் உயிரை முடித்த கிருஷ்ணர் அவளின் பூதாகரமான உடலில் இயல்பான பச்சிளம் குழந்தையின் செயலாக அங்கும் இங்கும் தவழ்ந்து விளையாடிக் கொண்டிருந்தார்.

இறக்கும் போது பூதனை அலறிய ஒலிகேட்டு ஓடிவந்த யசோதை பூதனையின் சுயஉருவையும், இறந்து கிடப்பதையும் கண்டு தனது பச்சிளம் குழந்தை அவ்வுருமேல் தவழ்ந்து விளையாடுவதைக் கண்டு ஓடிச் சென்று கிருஷ்ணரைத் தூக்கலானாள்.

உடனே ஆயர்கள் ஒன்று சேர்ந்து அப்பூதனையின் பூதாகரமான உடலை மிகவும் கஷ்டப்பட்டு தூக்கி வெளியே எடுத்துச் சென்று சிதைமூட்டினர். பெரிய ஆபத்திலிருந்து குழந்தையைக் காப்பாற்றியதை எண்ணி எல்லோரும் கடவுளுக்கு நன்றி கூறித் துதிக்கலாயினர். ஆபத்தையே நீக்கிவிட்டு ஒன்றும் அறியாதவர் போல குழந்தை நிம்மதியாகத் தூங்கிக் கொண்டிருந்தது.

(தொடரும்...

உ

# பெருவாயின் முள்ளியாரின் ஆசாரக் கோவை

### *76. எப்படிப் பேசுவது*

விரைந்துரையார் மேன்மேல் உரையார் பொய்யாய
பரந்துரையார் பாரித்துரையார் ஒருங்கனைத்தும்
சில் எழுத்தினாலே பொருள் அடங்கக் காலத்தால்
சொல்லுக செவ்வி அறிந்து

ஒருவரிடம் ஒன்றைச் சொல்லுகிற போது, வேகமாகப் பேசமாட்டார். சொன்னவற்றையே மேலும் மேலும் சொல்லிக் கொண்டிருக்க மாட்டார். பொய்யான செய்திகளை கோடிட்டுக் காட்டாமல் விளக்கிக் கொண்டிருக்க மாட்டார். விரிவாக நீண்ட நேரம் பேசமாட்டார். சொல்ல வேண்டியவற்றை எல்லாம் சில சொற்றொடர்களிலே, கேட்பவர் விளங்கிக் கொள்ளும் வகையில், காலமும் இடமும் அறிந்து கவனமாகப் பேச வேண்டும்.

பரந்து - விரிவாக; பாரித்து - விளக்கி; சில் - சில; எழுத்து - சொற்றொடர்; செவ்வி - சமயம்.

### *77. இவள் அல்லவா பெண்*

தம்மேனி நோக்கார் தலை உளரார் கைந் நொடியார்
எம்மேனி ஆயினும் நோக்கார் தலைமகன்
தம்மேனி அல்லால் பிற.

தன்னுடைய உடல் அழகு கண்டு தானே பெருமைப் படமாட்டார். கண்ட இடங்களில் தலைவாரி முடிக்க மாட்டார். கையோடு கை புடைத்துக் கொள்ள மாட்டார். எவ்வளவுதான் அழகுடையதாக இருந்தாலும் தம் கணவன் உடல் அழகை அல்லாமல் பிறர் உடல் அழகு பார்க்கமாட்டார்.

மேனி - உடல்; உளரார் - கோதார்; நொடித்தல் - புடைத்தல்; தலைமகன் - கணவன்

### *78. நீங்கவும் கூடாது நெருங்கவும் கூடாது*

பிறரொடு மந்திரம் கொள்ளார் இறைவனைச்
சாரார் செவி ஓரார் சாரின் பிறிதொன்று
தேர்வார் போல் நிற்க திரிந்து

மன்னர் முன் இருக்கும் போது மற்றவர்களுடன் ரகசியம் பேசக் கூடாது. மன்னனுடன் மிக நெருக்கமாக இருந்து விடவும் கூடாது. அரசன் அடுத்தவர்க்குச்

சொல்லுவதைக் காது கொடுத்துக் கேட்க முயலக் கூடாது. மன்னரோடு சேர்ந்து நிற்க நேர்ந்தால்; வேறு எதையோ நினைத்துக் கொண்டிருப்பவரைப் போல, முகக் குறிப்பால் எதையும் வெளிக்காட்டிக் கொள்ளாமல் இருத்தலே நல்லது.

மந்திரம் - இரகசியம்; ஓர்தல் - ஆராய்தல்.

***79. பெரியோர்க்கே உரிய பெருங்குணம்***

**துன்பத்துள் துன்புற்று வாழ்தலும் இன்பத்துள்**
**இன்ப வகையான் ஒழுகலும் - அன்பில்**
**செறப்பட்டார் இல்லம் புகாமை இம் மூன்றும்**
**திறப்பட்டார் கண்ணே உள.**

துன்பம் வந்த காலத்தில், தன்னுடைய துன்பத்தைப் பொறுத்துக் கொண்டு, அடுத்தவர் படும் துன்பத்துக்கு, வருந்தி வாழ்வதும்; இன்பம் வந்தபோது, மகிழ்ச்சியடைவதோடு, அந்த மகிழ்ச்சியை மற்றவர்களுடனும் பகிர்ந்து கொண்டு நடப்பதும்; அன்பில்லாத தீயவர்கள் வீட்டுக்குப் போகாது விலகியிருப்பதும் ஆகிய மூன்று குணங்களும், ஒழுக்க நெறிப்படி வாழும் உயர்ந்த பெரியோர்களிடத்தில் மட்டுமே இருக்கும்.

ஒழுகல் - நடத்தல்; செறப்படுதல் - வேறுபடுதல்; திறம் - ஒழுக்கம், நேர்மை.

***80. குலப் பெயர் வைத்துக் கூப்பிடக்கூடாது***

**தெறுவந்தும் தம்குரவர் பேர் உரையார் இல்லத்து**
**உறுமி நெடிதும் இராஅர் - பெரியாரை**
**என்று முறை கொண்டு கூறார் புலையரையும்**
**நன்கறிவார் கூறா முறை.**

கோபப்பட்ட காலத்திலும் பெரியவர்கள் பெயரைச் சொல்ல மாட்டார்கள். பெரியோர்கள் பெயரைச் சொல்வது மதிப்புக் குறைவு என்பதால், வீட்டில் மனைவியிடம் கோபம் கொண்டால் நீண்ட நேரம் வீட்டில் இருக்க மாட்டார். இருந்தால் பேச்சு நீளும் கோபம் அதிகமாகும் என்பதால், பெரியோர்களை எப்போதும் உறவுமுறை பாராட்டிப் பேசமாட்டார். இழிந்த கீழ்சாதியினராயினும், அவர்களை கற்றறிந்த பெரியோர் குலப் பெயர் - சாதிப் பெயர் சொல்லி அழைக்கமாட்டார்கள்.

தெறு - கோபம்; உறுமி - கோபித்து; முறை - பிறப்பு, உறவு.

***81. சிறந்தவர் செயல்***

**புழைக்கடைப் புகார் அரசன் கோட்டி உரிமை**
**இவற்றுக்கண் செவ்வியார் நோக்காரே அவ்வத்**
**தொழிற்குரியர் அல்லாதவர்.**

ஒருவர் வீட்டுக்குப் போகும் போது, பின்வாசல் வழியாக நுழையமாட்டார்கள். அரசசபையிலும், அந்தப் புரத்திலும் நற்குணம் உடைய பெரியோர்; வேலை இருந்தால் ஒழியப் போக மாட்டார். வேலைக்குரியவரைத் தவிர வேறு எவரையும் பார்க்கவும் மாட்டார்கள்.

புழைக்கடை - பின்வாசல்; கோட்டி - அரசவை; உரிமை - மனைவி; செவ்வியார் - சிறந்தோர்.

# பானுகோபன் எனப் பெயரிடக் காரணம்

- சிவ. சண்முகவடிவேல் அவர்கள் -

சூரபதுமனுக்குச் சிங்கனும் தாரகனும் தம்பியர். இருவரும் அண்ணனுடைய சொற் றிறம்பாதவர். சூரபதுமன் தந்தை சொல் மிக்கதோர் மந்திரம் இல்லை என்னும் கொள்கையில் நிற்பவன். தாய் சொல்லையும் தட்டாதவன். அவர்கள் யாவரும் அசுர குலத்தவராயினும் குரு வருளிலும் திருவருளிலும் தவவருளிலும் மூழ்கித் திளைப்பவர்கள்.

முழுமுதற் பரம்பொருள் சிவபெருமான். சிவபெருமானுடைய மைந்தர் திருமால். திரு மாலின் மைந்தர் பிரமதேவர். பிரமதேவருடைய மைந்தர் காசிப முனிவர். காசிப முனிவருடைய மைந்தர் சூரபதுமன், என்றால் சூரபதுமனுடைய துடுக்கிற்கும் கடுப்பிற்கும் மிடுக்கிற்கும் எடுப்பிற்கும் சொல்லவா வேண்டும்!

சூரபதுமன் மாதா மாயையினுடைய மகா வாக்கியமான “வீரயாகம்” என்பதை மந் திரமாக மனத்தில் மதித்தான். வீரயாகத்தை வெற்றிகரமாக பல்லாண்டு காலமாக வேட்டான். சிவபெருமானுடைய திருவடியை மறவாத சிந்தையனாகி வேள்வியைப் புரிந்ததனால் சிவபிரான் தரிசனம் தந்தார். வேண்டும் வரங்களைக் கேட்டான். பிறைசூடிப் பெருமான் கேட்டதோடு அமை யாது மேலுஞ் சிறப்புக்களைச் செய்தருளினார்.

சூரபதுமன் காசிப முனிவரிடத்தில் வினவினான். “இனி நாங்கள் செய்வது என்ன?

தந்தை தனயருக்கு நடைமுறைப் புந்தியைப் புகட்டவல்லவர் புகர் என்று உன்னி அசுர குருவினிடம் அனுப்பி வைத்தார். சுக்கிராச்சாரியார் மெய்ஞ்ஞானத்தை மறைத்துப் பொய்ஞானத்தை நன்ஞானமாக சூரனாதியோருக்கு உபதேசித்தார். அண்ட கோசங்களைச் சென்று கண்டிடும் படி அவற்றின் இயல்புகளை உள்ளவாறு உரைத்தார்.

சூரபதுமன் தம்பியருடன் அண்டங்களில் தன்னுடைய ஆணையை நிலைநிறுத்த திக்கு விசயத்தை மேற்கொண்டான். ஆயிரத்து எட்டு அண்டங்களிலும் தன் ஆணையையும் ஆண்மையையும் புகழையும் போற்றச் செய்தான்.

புகழ் பூத்துப் பொலிந்த சூரபதுமனை, அமரர், அமரர் கோன் பிரம விட்டுணுக்கள், அரக்கர், அவுணர், இயக்கர், நாகர் திக்குக் காவலாளர், அனைவரும் எதிர்கொண்டு வர வேற்றார்கள்.

சூரபதுமன் வதிவிடமாகக் கடலின் நடுவணாக நன்னகர் ஒன்று நிர்மாணிக்கப்பட்டது. மாடம் மாளிகை, கூடம் கோபுரம் சோலைகள், வாவிகள், பொய்கைகள், தெருக்கள் வீதி களோடு தேவதச்சன் தன் கல்வி வித்தகத்தால் அமைத்துக் கொடுத்தான். அந்நகருக்கு வீர மகேந்திரபுரம் என்ற நாமமும் நாட்டப் பெற்றது.

பிரமதேவர் ஒரு நன்னாளில் சூரபதுமனுக்குப் பட்டாபிடேகம் பண்ணி வைத்தார். மற்றைத் தம்பியருக்கும் ஏனையவர்களுக்கும் அதே போல நகர்கள் நிர்மாணித்து வெவ்வேறு இடங்களில் அமரச் செய்தான்.

சூரபதுமன் மகேந்திரபுர மாளிகையில் மன்னாதி மன்னனாக, அத்தாணி மண்டபத்தில்

சிம்மாசனத்தில் வீற்றிருந்து அரசு புரிந்தான்.

மன்னன் தேவரை ஏவல் கொண்டான்.

பின்னர் அரசன் திருமணம் செய்யச் சிந்தை செய்தான். அசுர குரு, தேவதச்சன் மகளான பதும கோமளை என்னும் பாவை நல்லாளை சூரபதுமனுக்குப் பட்டத்துத் தேவியாகத் தேர்ந்தெடுத்தார். பொருத்தம் பார்த்துச் சூரபதுமன் பதுமகோமளை மங்கல மணவினைக் கம்பலை உம்பர்கள் போற்றச் செம்பொன்மாளிகையில் வெகு கோலாகலமாகக் கொண்டாடப்பட்டது.

அந்நாளில், அவுணர் கோமான் ஆற்றிய தவத்தின் சீரால் பட்டத்தரசி பதுமகோமளை என்னும் பாவையினுடைய உதரத்தில் கருப்பம் உருப்பெற்றது.

பூரண சந்திரன் உதரம் போந்து கருவில் உருவாகிக் குழவிப் பொலிவோடு அவதரித்தாற் போல ஒரு புதல்வன் வந்து பிறந்தான். அவன் இயமனுக்கு இயமன் போல்வான்.

அந்தக் கட்டழகுடைய மைந்தன் கம்பலம் கொண்ட செம்பொற் றொட்டிலில் உறங்குவது வழமை. ஒருநாள் சூரியனுடைய கதிர் வீச்சு ஜன்னலின் துவார வழியாக வந்து மைந்தனுடைய மேனியிற் பட்டது. அதனை அவதானித்த மைந்தன் சூரியனைச் சுளித்து விழித்தான்.

அக்கணம் அம் மைந்தன் மிக்க கோபங்கொண்டான். ஆரவாரித்து எழுந்தான். வானத்தில் துள்ளிப் பாய்ந்தான். செங்கதிர்ச் செல்வனைத் தன்னுடைய செங்கையில் பற்றினான். இராகு கவ்விக் கொண்டது போலக் கையில் கவர்ந்து கொண்டான். மீண்டும் நொடிப் பொழுதில் மைந்தன் மாளிகைக்கு வந்தான்.

தவத்திலும் தலையாயது வேறு ஒன்று உண்டோ,

***வேண்டிய வேண்டியாங் கெய்தலாற் செய்தவ***
***மீண்டு முயலப் படும்*** - *(265)*

என்னும் வள்ளுவனாருடைய குறள் இலக்கணத்திற்கு மைந்தன் செயல் இலக்கியமானது எனலாம்.

மைந்தன் மாளிகையில் தன்னுடைய தொட்டிற்கால் ஒன்றில் பகலவனைப் பிணித்தான். தொட்டிற் கால் அழகு மிக்க மணியினால் சொலித்தது. ஆதவனை வலிந்து கட்டிய பின்னர் முன்னையதைப் போலத் தொட்டிலில் கண் வளர்ந்தான் சூரபதுமனுடைய காதலன்.

அச்சம்பவத்தை அறிந்த அமரர்கள் எல்லோரும் நெஞ்சம் நடுங்கினார்கள். அஞ்சி உயிர் ஒடுங்கினார்கள்.

'உலகம் உவப்ப வலனேர்பு திரி தரு பலர்புகழ் ஞாயிறு' வானில் வலம் வராத் தன்மையை பார் படைத்தோன் பார்த்தான். சூரன் மைந்தன் செய்த சூழ்ச்சி என்று தேர்ந்து கொண்டான்.

தாமரைப் பொருட்டுறைவோன் இந்திரன் முதலாம் இமையவர்கள் தற்சூழ்ந்து வர சூரபதுமனை வந்தடைந்தார். முதலில் மன்னாதி மன்னனுக்கு வணக்கம் செலுத்திய பின் சொல்லுகின்றார்.

"அரசே! புத்திரன் வைத்த வித்திகச் சிறையை விடுவித்துப் பேரிருளுக்குப் பெரும் பகைவன் தன்னைத் தருதல் வேண்டும்" என்றார்.

அரசர்க் கரசன் ஆச்சரியத்தோடு அறைகின்றான்.

"பிரமரே! வானில் இறைமை செலுத்தும் இரவியை என் மைந்தன் சிறை செய்தானா? இதுவரையில் அதை நான் அறிந்திலேன். என் மைந்தன் அதை ஆற்றுவதற்கு ஆதவன் அருந்தவறு ஆற்றியிருக்க வேண்டுமே.....!" என்று வியந்தான் வேந்தன்.

"அரசே! அற்றம் இல்லாத ஆதவன் கதிரணு தங்கள் தனயன் முகத்தில் அணுகியது. கோபங்கொண்ட குழந்தை சூரியனைப் பற்றிச் சிறை செய்தான்" என்றார் பிரமதேவர்.

சூரபதுமன் மைந்தனுடைய சூரத்தனத்தைக் கேட்டு மிக்க மகிழ்ச்சியில் திளைத்தான். சற்று நேரம் செல்லப் பிரமதேவரைப் பார்த்துப் பகர்கின்றான்.

"பிரமரே! நீரே மைந்தனிடத்தில் செல்லுவீர், அவன் மனம் மகிழ நான்கு இனிய வார்த்தை இயம்பும். அவன் பரிதியை சிறை விடுப்பான். அழைத்துச் செல்லுவீர்" என்று எடுத்தியம்பினான் எண்திசை போற்றும் இறையவன்.

நான்முகன் நல்லது என்று சூரனிடத்தில் விடைபெற்றுச் சென்றார். மைந்தனை அணுகினார்.

பொன்னாட்டுப் பூங்கொடிகள் போன்ற மேனகை, அரம்பை, திலோத்தமை ஆனோர் தாலாட்டுப் பாட்டைச் சுவைத்த வண்ணம் பொன்மணித் தொட்டிலில் பொலிந்த புதல்வனை அடைந்தார். அவன் பிள்ளைக்கு அளவிற்கதிகமான வாழ்த்துகளால் வாழ்த்தினார் பிரமதேவர். அன்பினோடு ஆசீர்வதித்து அருகில் நின்ற படைப்பாளியைப் பார்த்தான் மைந்தன், பின்னர்,

"என்னிடத்தில் என்ன பரிசில் ஏற்பதற்கு இங்கு வந்தீர், பிரமரே?" என்று வினாவினான் மைந்தன்.

"ஆதவனுடைய அருஞ் சிறையை அகற்ற வந்தோம், மைந்தா!" என்றார் சிருட்டி கர்த்தா.

"தொல்லோய்! உம்முடைய பெரும் படையை எனக்கு அளிப்பீரேல் பானுவைச் சிறை விடுப்பேன்" என் பகர்ந்தான் பாலகன்.

பிரமதேவர் அக்கணமே தமது பிரமப் படையை மைந்தனுக்கு மகிழ்ந்து அளித்தார்.

சூரன் செல்வன் செங்கதிர்ச் செல்வனைச் சிறை விடுத்தான். மகிழ்ச்சியில் திளைத்த மலராசனர் மைந்தனைப் பாராட்டினார். "இப்படையையும் பெற்றுக்கொள் மைந்தா" என்று மோக அத்திரத்தையும் ஈந்தார்.

படை கொடுத்தலும் பகவலரோடு பங்கயத் தவிசினருக்கு விடை கொடுத்தான் மன்னர் மைந்தன்.

சூரபதுமன் அச் சம்பவங்களை எல்லாம் அறிந்து ஆலோசனை பண்ணினான். அந்நன்னாளில் புதல்வனுக்குப் பானுகோபன் என்னும் இயற்பெயர் இட்டான். பானு சூரியன். கோபன் - கோபப்படுபவன் என்னும் காரணப் பெயரன்றி இயற்பெயர் ஈந்தான் என்பது கந்தபுராணம்.

*படையளித்தலும் பகலொடு பங்கயத் தவற்கு*
*விடையளித்தனன் ருதையத் தன்மையை வினாவி*
*நடையளித்தனன் புதல்வனுக் கன்னதோர் நன்னா*
*ளிடையளித்தனன் பானுகோ பன்னெனு மியற்பேர்*

உ

# 2010 ஆம் ஆண்டு நித்திய அன்னப்பணிக்கு உதவிபுரிந்தோர் விபரம்

| | | |
|---|---|---|
| செல்லையா குடும்பம் | ஊரெழு | 1000.00 |
| செ. சம்பந்தநாதன் | லண்டன் | 01 மூடை மா |
| நா. கதிர்காமநாதன் | கொழும்பு | 01 மூடை மா |
| பிரவின் ஈசன் | சங்கானை | 1000.00 |
| கிஷானி ஈசன் | சங்கானை | 1000.00 |
| சின்னத்துரை புஸ்பவதி | ஸ்ரேசன்றோட், சுண்ணாகம் | 1000.00 |
| தர்சினி மகேந்திரம் | C.A. நிறுவனம் யாழ்ப்பாணம் | 4000.00 |
| ஆ. இராசரத்தினம் | கொழும்பு | 1000.00 |
| கார்த்திகேஸ் மாஸ்ரர் | முறிகண்டி | 10,000.00 |
| Dr. க. சிவஞானசூரியர் | கொழும்பு | 1500.00 |
| சபாரெத்தினம் ஈஸ்வரசர்மா | யாழ்ப்பாணம் | 500.00 |
| க. சபாபதிப்பிள்ளை | அவுஸ்திரேலியா | 5000.00 |
| சி. மணிவாசகன் | கொழும்பு | 8000.00 |
| மு. நவரத்தினம் | கொக்குவில் | 5000.00 |
| வில்வராசா ஜெகத்நாதன் | (பலாலி) நவக்கிரி | 2000.00 |
| சி. குமாரசாமி குடும்பம் | பத்தமேனி, அச்சுவேலி | 2000.00 |
| சுப்பிரமணியம் வன்னியசிங்கம் | நவிண்டில் | 1000.00 |
| பொ. வரதராசா | கோவிற்கடவை, துன்னாலை மத்தி | 10,000.00 |
| சிவமுத்துலிங்கம் மூலம் இந்துப் பேரவை அன்பர்கள் கனடா | | 21,800.00 |
| ரவிக்குமார் தமயந்தி | ஆலடி உடுவில் | 3000.00 |
| சிவசுப்பிரமணியம் | ஆனந்தநிலையம், கரவெட்டி | 2000.00 |
| சிவசுப்பிரமணியம் மூலம் ஞானரூபன் | | 2000.00 |
| பா. அன்னஞானம் | சுழிபுரம் | 1000.00 |
| தயாபரன் பிரசாத் | கோண்டாவில் | 1000.00 |
| குணம் சுதாகரன் | தம்பசெட்டி | 01 மூடை அரிசிசாமான் |
| ந. தேவகுமாரன் | புருடிவீதி, அரியாலை | 10,000.00 |
| ரஜனி பாப்பம்மா | புலோலி | 15,000.00 |
| அ. இளங்கீரன் | நெல்லியடி | 1000.00 |
| ஜெயக்குமார் சங்கீதா | நவாலி தெற்கு, மானிப்பாய் | 3000.00 |

| | | |
|---|---|---|
| நாதன் பிறதர்ஸ் | இணுவில் | 01 மூடை அரிசி |
| வே. முருகவேள் | நெடியகாடு | 5000.00 |
| சீதா வேலுப்பிள்ளை | கனடா | 10,000.00 |
| ந. கரீந்திரன் குடும்பம் (திருமலை) | சபாபதிப்பிள்ளை வீதி, உடுவில் | 1000.00 |
| கந்தையா பிரதீஸ்வரன் (கொழும்பு) | புறுாடி லேன், அரியாலை | 1000.00 |
| கே. குமாரசாமி | சாமியன் அரசடி | 2000.00 |
| பத்மா | சுண்டுக்குளி | 1000.00 |
| சு. சந்திரலிங்கம் | சோமசுந்தரம் வீதி, ஆனைக்கோட்டை | 1000.00 |
| யோ. ஜனார்த்தனன் | சித்தங்கேணி | 500.00 |
| திருமதி ஜானகி குணபாலசிங்கம் | லண்டன் | 5000.00 |
| க.வை. சற்குணம் | கொழும்பு | 5000.00 |
| வெங்கடாசலம் சுதர்சன் | தம்பாலை | 3000.00 |
| தி. தவபாக்கியராசா | அச்சுவேலி | 01 மூடை சம்பா |
| க. பாக்கியலட்சுமி | கொழும்பு | 10,000.00 |
| மகாதேவா குடும்பம் | அச்சுவேலி | 1000.00 |
| தர்மிளா படிகலிங்கம் | சரவணை | 500.00 |
| பத்மநாதன் தர்மினி | சுன்னாகம் | 1000.00 |
| கி. கேந்தன் | லண்டன் | 5000.00 |
| க. கனகசோதி | மிருசுவில் வடக்கு | 1000.00 |
| சி. சிவநேசன், சி. நாகேஸ்வரி (கனடா) | நெல்லோடை, அளவெட்டி | 5000.00 |
| K.V. துரைசாமி | மயிலிட்டி | 1000.00 |
| வே. பொன்னம்மா | ஆவரங்கால் | 2500.00 |
| செ. சூரியகுமார் | இன்பர்சிட்டி | 1000.00 |
| பூ. மோகனதாஸ் | சுன்னாகம் | 2000.00 |
| சோதிரட்ணம் அனுஷியா | நவாலி வடக்கு | 500.00 |
| N. ரஞ்சினிதேவி | ஆனைக்கோட்டை | 1000.00 |
| செ. தம்பையா J.P. | கரவெட்டி | 500.00 |
| சு. நந்தகுமார் மூலம் P. விசாகேசன் | சுன்னாகம் | 10,000.00 |
| யோ. சுகந்தன் | சித்தங்கேணி | 500.00 |
| K. உதயகுமார் | கரவெட்டி | 1000.00 |
| குணராசசிங்கம் | சிவகஜன் (கனடா) கைதடி | 2000.00 |
| கந்தப்பர் சின்னையா நினைவாக | | 10,000.00 |
| திருமதி அன்னப்பிள்ளை சின்னையா | | 10,000.00 |
| செல்லையா திருநாவுக்கரசு குடும்பம் | அமெரிக்கா | 10,000.00 |

உ

(தொடர்ச்சி...

# வேண்டுதல்கள்

- திருமதி யோகேஸ்வரி சிவப்பிரகாசம் அவர்கள் -

ஞானசம்பந்தப் பெருமான் ஏனையோரின் நலம்நாடிச் செய்த வேண்டுதல்களை முன்னைய கட்டுரையில் பார்த்தோம். அதே போன்று அப்பரடிகளும் மற்றையோரின் நன்மைக்காக வேண்டுதல் பல செய்துள்ளார்.

நாவுக்கரசர் மேல் மிகுந்த பக்திகொண்டிருந்தவர் அப்பூதியடிகள். தான் செய்த அறப் பணிகளை நாவுக்கரசரின் பெயரிலேயே இவர் செய்துவந்தார். அவரைப் பற்றிக் கேள்வியுற்ற நாவுக்கரசப் பெருமான் அவர் வாழ்ந்த திங்களூருக்கு அவரைக் காண வந்தார். அவரது வேண்டுகோளையேற்று அவரது மனையிலே திருவமுது செய்ய ஒப்புக்கொண்டு அங்கு சென்றார். அவ்வேளையில் அப்பூதியடிகளின் மகன் அரவந் தீண்டி மரணித்துவிட்டான். அப்பருக்கு அமுதுபடைப்பது தவறிவிடக்கூடாது என்பதற்காக, மைந்தன் இறந்த துயரை மறைத்து, அப்பூதியடிகள் அவரை வரவேற்றார். நிகழ்ந்தவற்றைத் திருவருளால் அறிந்துகொண்ட திருநாவுக்கரசு நாயனார், இறந்த புதல்வனின் உடலைக் கொண்டு வரச்செய்து "ஒன்றுகொலாம்" எனத் தொடங்கும் பதிகம் பாடி இறைவனைப் பிரார்த்திக்க அவன் உயிர்பெற்றெழுந்தான்.

திருமறைக்காட்டின் நேர்க்கதவம் நிரந்தரமாக அடைக்கப்பட்டிருந்ததால் அங்கு வழிபடச்சென்ற அப்பரும் சம்பந்தரும் அக்கதவின் வழியாகச் செல்லவியலவில்லை. மற்றக்கதவால் செல்லாது நேர்க்கதவின் மூலம் வழிபட விரும்பிய அவர்கள் அதற்காக இறைவனை வேண்டுவதெனத் தீர்மானித்தனர். அப்பரடிகள் "பண்ணின் நேர் மொழியாளுமை பங்கரோ" எனத் தொடங்கும் பதிகத்தைப் பாடினார்.

***கண்ணி னால்உமைக் காணக் கதவினைத்***
***திண்ண மாகத் திறந்தருள் செய்மினே***

என்ற அவரது வேண்டுதலை ஏற்று திருமறைக்காட்டில் வீற்றிருக்கும் ஈசன திருக்கதவத்தைத் திறக்கச் செய்தார்.

இதனாலேதான் போலும் அப்பரடிகள் "தூண்டு சுடரனைய சோதிகண்டாய்" என்னும் தேவாரத்திலே மறைக்காட்டுறையும் மணாளன்,

***வேண்டுவார் வேண்டுவதை ஈவான் கண்டாய்***

எனப் பாடியுள்ளார்.

நாவுக்கரசப் பெருமானின் இயற்பெயர் மருணீக்கியார். இவரது தமக்கையார் திலகவதியார். மருணீக்கியார் சமண சமயத்தைச் சார்ந்திருந்ததைக் கண்டு வருந்திய திலகவதியார் இறைவனிடம் இது குறித்து முறையிட்டார். மருணீக்கியாரை ஆட்கொள்ளத் திருவுளங்கொண்ட சிவபெருமான் அவருக்குச் சூலைநோயை ஏற்படுத்தினார். அந்நோயை எவ்விதத் திலுங் ணப்படுத்தவியலவில்லை. திலகவதியாரின் வழிகாட்டுதலில் திருவீரட்டநாதரிடம் சென்று கூற் ாயினவாறு விலக்ககலீர்" எனத் தொடங்கும் பதிகத்தைப் பாடி மருணீக்கியார் தன் சூலை நோயைத் தீர்க்குமாறு வேண்டினார்.

இறைவன் அவ்வேண்டுதலையேற்று சூலைநோயைத் தீர்த்து அவரை ஆட்கொண்டார்.

அவரது இனிய தேவாரத்தால் மகிழ்வுற்ற ஈசன் "திருநாவுக்கரசு" என்னும் நற்பெயரையும் அவருக்கு நல்கினார். அவரது முதலாவது தேவாரமே தனது நோய் தீர்க்குமாறு வேண்டும் வேண்டுதலாக அமைந்துள்ளது. இவ் வேண்டுதல் பற்றிச் சிறிது விரிவாக அடுத்த கட்டுரையில் பார்ப்போம். இங்கு அவரது வேறு சில வேண்டுதல்களை நோக்குவோம்.

நாவுக்கரசரின் மனத்திலே அவர் சமணசமயத்தைச் சார்ந்திருந்தது பற்றிய ஒரு கழிவிரக்கம் நிறைந்திருந்ததை அவரது தேவாரங்களிலே காணலாம். உதாரணமாக "வெறிவிரவு கூவிளநல் தொங்கலானை" என ஆரம்பிக்கும் பதிகத்திலுள்ள தேவாரங்கள் தோறும் இறுதி வரியில் "ஏழையேன் நான் பண்டிகழ்ந்தவாறே" என்று பாடியுள்ளார். "அறி வற்ற நான் முன்னர் இறைவனை இகழ்ந்தேனே" என வேதனைப்பட்டிருக்கிறார். "ஆண்டானை அடியேனை" எனத் தொடங்கும் பதிகத்திலுள்ள அனைத்துத் தேவாரங்களின் இறுதியில் "போற்றாதே ஆற்றநாள் போக்கினேனே" என ஏக்கத்தை வெளிப்படுத்தியுள்ளார். இவ்வாறு பல தேவாரங்களில் இக்கழிவிரக்கத்தைப் புலப்படுத்தியுள்ளார்.

இதனால் சமணனாய் வாழ்ந்த தன் உடம்பில் சூலக்குறியும் இடபக்குறியும் பொறிக்க வேண்டுமென அவர் விரும்பினார். அவ்வாறு பொறிக்குமாறு திருத்தூங்கானை மாடத்து சுடர்க் கொழுந்தீசரிடம் வேண்டிக்கொண்டார். அந்த ஈசனின் பொற்பதங்களுக்கு அவர் செய்த விண்ணப்பம் வருமாறு:

*பொன்னார் திருவடிக்கு ஒன்றுண்டு*
*விண்ணப்பம் போற்றிசெய்யும்*
*என்னாவி காப்பதற்கு இச்சையுண்*
*டேல்இருங் கூற்றகல*
*மின்னாரு மூவிலைச் சூலம்என்*
*மேற்பொறி மேவுகொண்டல்*
*துன்னார் கடந்தையுள் தூங்கானை*
*மாடச் சுடர்க் கொழுந்தே*

மற்றொரு தேவாரத்தில் "இடவம் பொறித்து என்னையேன்று கொள்ளாய்" என வேண்டியுள்ளார். "எனது ஆவியைக் காக்க விரும்பினால் மூலிகைச் சூலம் என்மேற்பொறி" என்றவர் அடுத்த தேவாரத்தில் "காவாதொழியிற் கலக்கும் உன்மேற் பழி" என்றும் மிரட்டுவார். அவரது விண்ணப்பத்தை ஏற்ற இறைவனது அருளினால் சிவபூதமொன்று அருகிலுள்ளோர் அறியா வகையில் இடபசூலக்குறிகளை வாகீசரின் திருத்தோளிலே பொறித்தது.

அப்பர் தனது மற்றோர் ஆவலை நிறைவேற்றவும் இத்தகைய மிரட்டலுடன் வேண்டு வதைக் காணக்கூடியதாகவுள்ளது. இறைவனது திருவடித் தீட்சை பெறவேண்டுமென்பது அவரது ஆசை. அதற்காக

*கோவாய் முடுகி அடுதிறற்*
*கூற்றம் குமைப்பதன்முன்*
*பூவார் அடிச்சுவடு என்மேற்*
*பொறித்துவை போகவிடில்*
*மூவா முழுப்பழி மூடும்கண்*
*டாய்முழங் கும்தழற்கைத்*

*தேவா திருச்சத்தி முற்றத்து*

*உறையும் சிவக்கொழுந்தே*

எனத் திருச்சத்தி முற்றத்தில் எழுந்தருளியிருக்கும் சிவக்கொழுந்தீசரிடம் வேண்டினார். "போரிடும் திறன்கொண்ட கூற்றுவன் தலைவனாகி என்னைக் குமைத்து அழிப் பதற்கு முன் உனது மலர்ப்பதங்களை என்மேற் பொறித்துவிடு. அப்படிச் செய்யாவிடில் ஒரு போதும் மறையாததாக முழுப்பழியும் உன்னை மூடிச் சூழும்" எனக்கூறும் போதும் முன் னரைப் போன்ற அச்சுறுத்தும் தொனி இதிலிருக்கிறது.

இவ்வேண்டுதலைக் கேட்ட இறைவன், அவரைத் திருநல்லூருக்கு வருமாறு கூறியருளி, அத்தலத்தில் தன் திருவடிகளை அவரது சென்னியிற் சூட்டினார்.

இவ்வாறெல்லாம் வேண்டியவர் "ஒரு பற்றிலாமையும் கண்டிரங்காய் கச்சியேகம்பனே" என்பதையொத்த வேண்டுதல்களையும் செய்துள்ளார். "கருவாய்க் கிடந்துன் கழலே நினையுங் கருத்துடையேன்" என ஆரம்பித்து, கருவாயிருந்த காலம் முதலே உன்னை நினைத்திருக் கும் எனக்குத் "தருவாய் சிவகதி" எனப் திருப்பாதிரிப்புலியூர் அரனிடம் கோரியவருக்கு மற்றோர் ஐயுறவுந் தோன்றுகிறது. "சிலவேளைகளில் நானும் ஈசனை மறந்துவிடக் கூடுமோ" என்பதே அந்த ஐயம் மரணம் இருக்கிறதல்லவா? அது வந்து சேருங்காலம் மிகவுங் கொடியது. அதற்கு முன்வரும் மூப்பு, பிணி என்பன வரும்போதும் அப்படியே அதே போலத்தான் பசியும். பசி வந்திடப் பத்தும் பறந்து போம் என்பது பழமொழி. இவை வரும்போது இறைவனது நினைவு இருக்குமா? அதுமட்டுமல்ல. ஐம்புலன்களின் வசப்படும்போதும் இறைநினைவு இல்லாது போய்விடலாம். "இவற்றின் காரணமாக நான் உன்னை மறக்க நேர்ந்தாலும் என்னைக் குறியாகக் கொண்டு காத்தருள் புரி" என "வான்சொட்டச் சொட்ட" என்றாரம்பிக்கும் பதிகம் முழுவதும் வாகீசர் இரந்து நிற்பதைக் காணலாம். அப்பதிகத்திலுள்ள ஒரு தேவா ரத்தை மட்டும் இங்கு நோக்கலாம்.

*கண்டியிற் பட்ட கழுத்துடை*
*யீர்கரி காட்டில் இட்ட*
*பண்டியிற் பட்ட பரிகலத்*
*தீர்பதி வீழிகொண்டீர்*
*உண்டியிற் பட்டினி நோயில்*
*உறக்கத்தில் உம்மை ஐவர்*
*கொண்டியிற் பட்டு மறக்கினும்*
*என்னைக் குறிக்கொள்மினே*

"உருத்திராக்க மாலையணிந்த கழுத்துடையவரே, சுடலையிலே கிடக்கும் மண்டை யோட்டைப் பாத்திரமாகக் கொண்டவரே, திருவீழிமிழலையை இருப்பிடமாகக் கொண்டவரே, நான் உண்ணும் போதும், பசித்திருக்கும் போதும், நோயுற்றிருக்கையிலும் உறக்கத்திலும் ஐம்புலன் வசப்படுகையிலும் உம்மை நான் மறந்தாலும் என்னைக் குறிக்கொண்டு அருள் புரியுங்கள்" என மேற்கண்ட தேவாரத்திலே பிரார்த்தித்துள்ளார்.

பிறர் துயர் தீர்க்கவும், தன் துன்பம் போக்கவும், ஆன்ம ஈடேற்றத்திற்காகவும், அதன் பொருட்டான தன் விருப்பங்களை நிறைவேற்றவுமெனப் பலவகைப்பட்ட வேண்டுதல்களை நாவுக்கரசர் செய்துள்ளார்

உ

திருவாசக ஆராய்ச்சியுரை — தொடர்ச்சி



# சிவபுராணம்

- சங்க நூற் செல்வர் பண்டிதர் சு. அருளம்பலவனார் அவர்கள் -

ஈசனடி போற்றி யெந்தை யடிபோற்றி

தேசனடி போற்றி சிவன்சே வடிபோற்றி

நேயத்தே நின்ற நிமல னடிபோற்றி

மாயப் பிறப்பறுக்கு மன்ன னடிபோற்றி

சீரார் பெருந்துறைநந் தேவ னடிபோற்றி

***பதவுரை:*** 11-16 ஈசன் அடி போற்றி - ஐசுவரியத்தையுடையவனது திருவடிக்கு வணக்கம்; எந்தை அடி போற்றி - எமது தந்தையினது திருவடிக்கு வணக்கம்; தேசன் அடி போற்றி - ஞான ஒளிவடிவையுடைய பரமாசாரியனது திருவடிக்கு வணக்கம்; சிவன் சே அடி போற்றி - சிவபெருமானது சிவந்த திருவடிக்கு வணக்கம்; நேயத்தே நின்ற நிமலன் அடி போற்றி - அன்பரது அன்பின்கண் அன்புருவாய் நின்ற மாசற்றவனது திருவடிக்கு வணக்கம், மாயம் பிறப்பு அறுக்கும் மன்னன் அடி போற்றி - மாயையினாலுண்டாகும் பிறவியை வேரோடறுக்கும் அரசனது திருவடிக்கு வணக்கம்; சீர் ஆர் பெருந்துறை நம் தேவன் அடி போற்றி - சிறப்புப் பொருந்திய திருப்பெருந்துறையின்கண் பரமசாரியராய் எழுந்தருளிய நமது கடவுளது திருவடிக்கு வணக்கம்; ஆராத இன்பம் அருளும் மலை போற்றி - தெவிட்டாத இன்ப அருவியை ஈந்தருளும் மலையை ஒப்பவனுக்கு வணக்கம்.

ஈசன் - ஐசுவரியத்தையுடையவன். ஈண்டு ஐசுவரியம் என்றது வீடுபேறாகிய உயர்திருவினை. இத்திருவினை "உத்கிருட்ட லகஷ்மி' என உபநிடதம் கூறும். தேசு - ஒளி. தேசன் - ஒளிவடிவினன். தேசன் என்பது ஈண்டு பரமாசாரியத் திருவுருவை உணர்த்தியது.

சிவன் - செம்பொருளாதலின் அவன் திருவடி சேவடியாயிற்று. சேவடி - சிவந்த திருவடி. மாயம் - மாயை. மாயையினாலேயே தனு கரண புவன போகமாகிய பிரிவுகளையுடைய பிறப்பு உண்டாகின்றது. அதனால் மாயப் பிறப்பு என்றார். அறுக்கும்

என்ற வினையினால் பிறவியை மரமாகக் கொள்க. "சீரார்" என்னும் அடை தேவனுக் காய்ப் பின்னர் அவன் எழுந்தருளியிருக்கும் பெருந்துறையாயிற்று. இறைவன் திருப்பெருந் துறையில் குருந்தமர நீழலிற் பரமாசாரியனாக அமர்ந்து தம்மை ஆட்கொண்டமையின் 'நம் தேவன்' என்றார்.

உலகியல் இன்பங்கள் அனுபவித்த அளவில் தெவிட்டுந் தன்மையன. இறை வன் அருளாற்பெறும் இன்பமோ என்றும் தெவிட்டாவியல் பிற்றாதலின் அதனை 'ஆராத இன்பம்' என்றார். இறைவனை மலையென ஏகதேசவுருவகஞ் செய்தமையால், என்றும் வற்றாது இறைவனருளால் உண்டாகும் இன்பம் அருவி நீராகக் கொள்ளப்பட்டது

***ஆராத வின்ப மகுளுமலை போற்றி***

***சிவனவனென் சிந்தையு ணின்ற வதனால்***

***அவனரு ளாலே யவன்றாள் வணங்கிச்***

***சிந்தை மகிழச் சிவபுரா ணந்தன்னை***

***முந்தை வினைமுழுது மோய வுரைப்பனியான்***

***பதவுரை:*** 17-22 கண் நுதலான் - அழற்கண் அமைந்த நெற்றியையுடைய இறைவன், எண்ணுதற்கு எட்டாத எழில் ஆர் கழல் இறைஞ்சி - நினைத்தற்கும் எட்டா அழகுபொருந்திய வீரக்கழல் அமைந்த திருவடிகள் அருமையில் எளியவாய்ப் பூமியில் தாழ்ந்து, வந்து எய்தி - திருப்பெருந்துறையின்கண் பரமாசாரியனாய் வலிய எழுந்தருளி வந்து, தன் கருணை கண் காட்ட - தனது அருட் பார்வையாகிய நயனதீக்கையினைச் செய்து ஞானோபதேசஞ் செய்தலால், அவன் சிவன் என் சிந்தையுள் நின்ற அதனால் - அக்கண்ணுதலானாகிய சிவபெருமான் என் மனத்தில் நீங்காது நிலைபெற்ற அத் தன்மையினால், அவன் அருளாலே அவன் தாள் வணங்கி - அவனது திருவருளினாலே அவனது திருவடிகளை வணங்கி, முந்தை வினை முழுதும் ஓய - முற்பிறப்பிற் செய்தவினை முழுவதும் வலிகுன்றிப் போகவும், சிந்தை மகிழ - மனம் மகிழ்ச்சியடை யவும், சிவபுராணம் தன்னையான் உரைப்பன் - சிவனது பழமையான முறைமையினை அடியேன் கூறுவேனாயினேன்.

கண் நுதலான் - கண்ணமைந்த நெற்றியையுடைய இறைவன் "கண் சுமந்த நெற்றிக் கடவுள்" (திருவா. அம்மானை 8) "கண்ணுதலான் ஒரு காதலின் நிற்கவும்" (திருமந். 11) எனப் பிறாண்டும் வருவன காண்க. கண்ணுதலான் என்பதற்கு நெற்றிக் கண்ணையுடைய இறைவன் எனினுமாம்.

எண்ணுதற்கும் என உம்மை விரிக்க. எண்ணுதற்கு என்றமையால் சொல்லு தற்கும் காண்டற்கும் எட்டாமையும் கொள்ளப்படும். எழில் என்பதற்கு எழுச்சியெனினுமமை யும். கழல் ஆகு பெயராய்த் திருவடியை உணர்த்தியது. இறைஞ்சி - தாழ்ந்து,

"எல்லை செல்ல வேழுர் பிறைஞ்சி" (குறிஞ்சி 215) என்புழியும் இப்பொருட்டாதல் காண்க. கழல் இறைஞ்சி என்பதற்குத் திருவடிகளை வணங்கி" எனப் பொருள் உரைக்கும் "அவன் னருளாலே யவன்றாள் வணங்கி" (18) எனக் கூறப்படுதலிற் கூறியது கூறலாம்; ஆதலால் திருவடிகள் அருமையில் எளியனவாய்ப் பூமியிற்றாழ்ந்து எனப் பொருள் உரைக்கப்பட்டது. இறைஞ்சி என்னும் சினைவினை வந்தெய்தி என்னும் முதல் வினையோடு முடிந்தது. இனி, கழலிறைஞ்ச வந்தெய்தி எனச் செயவெனச்சமாக்கி முடிப்பினுமமையும். "கண்ணுதலான் தன் கருணைக் கண்காட்ட வந்தெய்தி, எண்ணுதற் கெட்டா வெழிலார் கழலிறைஞ்சி, விண்ணிறைந்து மண்ணிறைந்து மிக்காய் விளங்கொளியாய். எண்ணிறந்தெல்லை யிலாதானே" எனக் கிடந்தவாறே கூட்டிப் பொருளுரைக்கின் 'கண்ணுதலான்' என்னும் படர்க்கையும் 'மிக்காய்' 'விளங்கொளியாய்' 'எண்ணிறந்தெல்லை யிலாதானே' என்னும் முன்னிலைகளும் தம்முளியையாமையின், கண்ணுதலான் (21) எண்ணுதற்கெட்டா எழிலார் கழல் இறைஞ்சி (22) வந்தெய்தி தன் கருணைக்கண் காட்ட (21) என மாறிக் கூட்டிப் பொருளுரைக்கப்பட்டது.கருணைக் கண் காட்டல் - நயனதீக்கை செய்து உபதேசஞ் செய்தல், காட்ட என்னும் செயவெனெச்சம் ஏதுப் பொருளில் வந்தது. காட்ட (21) நின்றவதனால் (17) என இயையும்.

அவன் சிவன் என மாறிக்கூட்டி அவன் என்றது கண்ணுதலானைச் சுட்டியதாகக் கொள்க. தன் கருணைக் கண்காட்டலின் பேறாக இறைவன் சிந்தையுள் நின்றமையின் 'சிவனவனென் சிந்தையுள் நின்ற அதனால்" என்றார். அவனருளாலே அவன்றாள் வணங்கி என்றது சிவனது திருவருளினாலே அவனது திருவடிகளை வணங்கி என்றவாறு, "நித்தனருள் பெற்று அவர் பாதம் நினைக்கும் நியமத் தலைநின்றார்" எனப் பெரியபுராணத்தும் (பெருமிழலைக் குறும்பனார் செய். 4) வருதல் காண்க.

உயிர்க்குயிராய் இறைவன் உண்ணின்று இயக்குகின்றமையால் தம் செயலெல்லாம் அவன் அருள்வழிச் செய்யும் செயல்களாதலின் 'அருளால் வணங்கி மகிழ ஓய யான் புராணந்தன்னை உரைப்பன்' என்றார். சிவபுராணத்தை உரைப்பதன் பயன் முந்தை வினைமுழுதும் ஓய்தலும் சிந்தை மகிழ்தலுமாகும். முந்தை - முன், முந்தை வினையென்றது. முற்பிறப்பிற் செய்த சஞ்சிதகன்மங்களை, வினைமுழுதும் ஓய என்றது சஞ்சித கன்மங்கள் முழுவதும் நுகர்வுக்கு வாராமல் வலிகுன்றிப்போக என்றவாறு, ஓய - நுணுக; என்றது வலிகுன்ற என்றபடி. ஓய்தல் என்பது நுணுக்கமாகிய குறிப் புணர்த்தும் . என்பது. "ஓய்தலாய்த நிழத்தல் சாஅய், யாவயினான்கு முள்ளத நுணுக்கம்" (தொல். உரி 34) என்பனாலுமறிக.

இதுவரையுங் கூறிய இருபத்திரண்டு அடிகளில் முதற்பத்து அடிகளால் வாழ்த்தும், பின்னர் ஆறு அடிகளால் வணக்கமும், அதன் பின்னர் ஆறு அடிகளால் வரு பொருளுரைத்தலுமாகிய தற்சிறப்புப்பாயிரம் கூறியருளினார். ஆறுமுதல் பத்து அடி வரை 'வெல்க' என மற்றொரு பொருள் கூறியது என்னையெனின், 'வெற்றி பெறுக' என்பதும் வாழ்த்தாகவே அமைதலினென்க.

# "கல்லெறிந்த காதல்"

- ஆ. மகேசு அவர்கள் -

ஒரு தாய் தனது குழந்தையிடம் செலுத்துவது அன்பு. ஒரு காதலன் தன் காதலியிடம் செலுத்துவது காதல். இவ்வாறே ஒரு பக்தன் இறைவனிடம் செலுத்துவதும் காதல். இதனையே திருஞானசம்பந்தர் தமது தேவாரப் பதிகத்திலே பின்வருமாறு பாடியுள்ளார்.

*"காதலாகிக் கசிந்து கண்ணீர் மல்கி*
*ஓதுவார் தமை நன்னெறிக்குய்ப்பது*
*வேதம் நான்கினும் மெய்ப்பொருளாவது*
*நாதன் நாமம் நமச்சிவாயவே"*

இங்கே "காதல்" என்ற சொல் எடுத்தாளப்பட்டுள்ளது. அதாவது உண்மையான ஒரு பக்தன் இறைவனிடம் அளவிறந்த அன்பு செலுத்துவதைக் காதல் எனக் கூறலாம். இதன் பின்னணியில் "கல்லெறிந்த காதல்" என்ற தலைப்பினை வாசகர்களுடன் பகிர்ந்து கொள்ளலாம் என எண்ணுகின்றேன்.

"இறைவனை மறவாதிருப்பதே பிறவாமைக்குரிய வழியாகும்" மீண்டும் பிறப்புண்டேல் உம்மை என்றும் மறவாமை வேண்டும்" என்று காரைக்காலம்மையாரும், "மறவாதிரு மனமே இது காண் நல் மருந்து" என்று பட்டினத்தடிகளும், "தினைத்துணைப் பொழுதும் மறந்துய்வனோ" என அப்பரடிகளும், "எத்தால் மறவாதே நினைக்கின்றேன் மனத்துன்னை" எனச் சுந்தரரும், "கமலமலரடி கனவிலும் நனவிலும் மறவேனே" என அருணகிரியாரும், "இணையடிகள் மறவாத மனமொன்று மாத்திரம் ஏழையேற்கருளு கண்டாய்" என இராமலிங்க அடிகளும் அருளியிருக்கின்றார்கள். இத்தனை பெரியார்களும் அருளாளர்களும் தம் சிரமேற்கொண்ட இச்சிறப்பியல்பாகிய இறைவனை மறவாமையை உறுதியாகக் கொண்டு ஒழுகியவர் அறுபத்து மூன்று நாயன்மார்களுள் ஒருவராகிய சாக்கிய நாயனார்.

*"எந்நிலையில் நின்றாலும்*
*எக்கோலம் கொண்டாலும்*
*மன்னியசீர் சங்கரன் தாள்*
*மறவாமை பொருளென்றே*
*துன்னிய வேடந்தன்னைத்*
*துறவாத தூய சிவம்*
*தன்னைமிகும் அன்பினால்*
*மறவாமை தலை நிற்பார்"*

என்ற சாக்கிய நாயனார் சரித்திரம் சிந்தனைக்குரியது. வந்தனைக்குரியது, நம் நினைவுக்கு நெடுந் தொலைவில் நிற்பது.

தளர்ச்சியறியாத வளர்ச்சியுடைய மக்கள் வாழ்கின்ற சங்கைமங்கை என்ற ஊரிலே சாக்கியநாயனார் அவதரித்தார். கல்விகேள்விகளிலே சிறந்து விளங்கிய அவர் எல்லா உயிர்கள் மீதும் அருளுடையவராகி ஒழுகிவந்தார். ஒழியாமல் மாறி மாறிவரும் பிறப்பு இறப்பு

என்னும் நோயைத் தவிர்க்க வேண்டும் என்னும் கருத்துடையவராக வாழ்ந்து வந்தார்.

மதில் சூழ்ந்த காஞ்சி நகரை அடைந்த அவர் நல்ல ஞானம் பெறுவதற்குப் பல வழிகளையும் நாடுவாராயினார் உய்வுநெறி கருதிச் சாக்கியமதஞ் சார்ந்து, அம்மத நூல் களையெல்லாம் ஓதியுணர்ந்து ஈசனருள் கூட்ட சிவநெறியே தவநெறியெனக் கருதினார். ஏனைய சமயங்கள், வினை ஒன்று உண்டு. அவ்வினை செய்தானைத் தானே வந்து சாரும் என்றும், வினைப்பயனைக் கூட்டுவிக்க ஒரு முதற்பொருள் வேண்டாம் என்றும் கூறுகின்றன.

ஆனால், சைவம் சொல்வது என்ன? வினை என்பது சடம், ஆதலின் செய்தவனைத் தானே வந்து சாராது ஆன்மா சித்தாயினும், சிற்றறிவும் சிறுதொழிலுமுடையது. ஆதலினால் ஆன்மாவும் தான் செய்த வினையைத் தானே ஏற்றுக்கொள்ளாது. சிறு குழந்தை தானே பாலை எடுத்துப் பருகாது பாலுந் தானே போய்க் குழந்தை வாயிற் புகாது குழந்தைக்கும் பாலுக்கும் இடையே, தாய் காலமறிந்து, இடமறிந்து புகட்டுவதுபோல, கருணை நிறைந்த இறைவன் ஆன்மாக்களுக்கு அவரவர் செய்தவினையைப் பக்குவமறிந்து ஊட்டுவான். நோய்வாய்ப்பட்ட குழந்தைக்கு வேப்பங்கொழுந்து அரைத்து ஊட்டுவது போல, தீவினை செய்த ஆன்மாக்களுக்கு இறைவன் நல்வழியைக் காட்டுவான் என்கின்றது சைவ நெறி.

*"ஊட்டுவிப்பானும் உறங்குவிப்பானும்*
*இங் கொண்றோ டொன்றை*
*மூட்டுவிப்பானும் முயங்குவிப்பானும்*
*முயன்ற வினை*
*காட்டுவிப்பானும் இருவினைபாசக்*
*கயிற்றின் வழி*
*ஆட்டுவிப்பானும் ஒருவனுண்டேதில்லை*
*அம்பலத்தே"*

என்பது பட்டினத்தடிகளின் வாக்கு. எனவே வினை, வினைசெய்தவன், வினைப்பயன், காலம், இடம் அறிந்து ஊட்டுபவன் என்ற இந்த நான்கும் இருந்தே தீரவேண்டும். இவற்றைத் தெளிவாக எடுத்துரைப்பது சைவ சிந்தாந்தம். இதனை உணர்ந்த சாக்கிய நாயனார் சிவமே பரம்பொருள் என்று கொள்ளலானார். எந்த நிலையிலே நின்றாலும் எந்த வடிவங்கொண்டாலும், நிலைபெற்ற சிவபிரானுடைய திருவடியை மற வாமையே பொருள் எனக் கருதிய அவர் சாக்கிய மதக் கோலத்தை மாற்றாமல், சிவபிரானை மிகுந்த அன்பினால் இடையறாது சிந்தித்துக் கொண்டிருந்தார். இவர் சிவபக்தி மேற்கொண்ட வராயினும் புறக்கோலம் புனையவில்லை என்பதால் புறக்கோலம் வேண்டியதில்லைஎன்பது பொருளல்ல. சிவபக்திக்கு புறக்கோலமும் இன்றியமையாதது. அரசாங்க சேவகர்கள் சில அரச அடையாளங்களை (இலச்சினைகளை) அணிவதுபோல சிவனடியார்கள் திருநீறும் உருத்திராக்கமும் அணிதல் வேண்டும். எனினும், இவர் சாக்கிய மதத்தில் நின்றார் ஆத லின், அவ்வேடத்திலிருந்தபடியே சிவனை மறவாது வணங்கி வந்தார்.

அருவுக்கும் உருவுக்கும் காரணமாக விளங்குவது சிவலிங்கம். மாலும் அயனும் பிணங்கியபோது, இடையில் சோதி வடிவாய் நின்ற குறிப்பும் சிவலிங்கத்தையே குறிக்கின்றது. இறைவன் சோதி வடிவானவன். சோதி மேல் நோக்கி நிற்கின்றது. அது ஆன்மாவில் உயிருக்குயிராய் விளங்குகின்றது. ஆன்மா அறிவுப் பொருள். ஆன்மாவுக்கும் சிவத்துக்கும் இடையில் அருள் ஒளிர்கின்றது. ஆன்மசோதி, அருட்சோதி, சிவசோதி என்ற இம்மூன்றும்

ஒருங்கு கூடியதே சிவலிங்கம். சிவலிங்கத்தின் அடிவட்டம் ஆன்மசோதி, சிவலிங்கத்தினைச் சூழ்ந்திருக்கின்ற ஆவுடையார் அருட் சோதி, மேல் நோக்கியிருக்கின்ற சிவலிங்கம் சிவசோதி. இந்த மூன்றும் சேர்ந்து நமக்குச் சிவலிங்கமாகக் காட்சி தருகின்றது.

சிவலிங்க வழிபாடு எல்லாவழிபாடுகளிலும் தலையாயது என்று தெளிந்த சாக்கிய நாயனார், நாள்தோறும் சிவலிங்கத்தைக் கண்ணுற்ற பின்னரே, உணவு உண்ண வேண்டுமென்ற நியதியை மேற்கொண்டார். அருகில் ஒரு வெட்ட வெளியில் சிவலிங்கம் இருந்தது. அதைக் கண்டு மிகக் களிப்புற்று அக்களிப்பின் மிகுதியால் இன்னது செய்வதென்று அறியாதவராய், அங்கிருந்த ஒரு கல்லை எடுத்துச் சிவலிங்கத்தின் மீது எறிந்தார். நெடு நாட்களாக மறவாது சிவனை நினைந்து நினைந்து நெஞ்சம் மகிழும் நியமம் பெற்றிருந்த சாக்கிய நாயனார் புரிந்த கல்லெறிந்த தொண்டினை இறைவன் மிகவும் இனிமையாக ஏற்றுக் கொண்டார். குழந்தைகள் அன்பின் மிகுதியால் தாய் தந்தையரின் தலைமுடியைப் பிடித்து ஈர்த்தல், காதில் விரல் விட்டுக் குடைதல் முதலிய அநுசிதங்களைச் செய்கின்றபோது, குழந்தைகளின் அன்பு ஒன்றையே நினைத்து, அவர்களுடைய இச்செயல்களைக் கருதாது பெற்றோர் மகிழ் வதுபோல் சாக்கிய நாயனார் ஒப்பற்ற அன்பினால் எறிந்த கல்லெறியைக் கண்ணுதற் கட வுள் ஏற்றுக் கருணை புரிந்தார்.

*"அகம் நிறைந்த பேருவகை*
*அடங்காத ஆதரவாய்*
*மகவுமகிழ்ந் துவப்பார்கள்*
*வண்மை புரி செயலினால்*
*இகழ்வனவே செய்தாலும்*
*இளம்புதல்வர்க் கின்பமே*
*நிகழுமது போலதற்கு*
*நீள் சடையார் தாம் மகிழ்வார்"*

என்று கூறி இக் கருத்தைக் கூறி அமைதி செய்கின்றார் சேக்கிழார்.

செயலுக்கு ஒன்றும் தகுதியில்லை. செயல்புரிந்தார் உள்ளத்தில் நிகழும் அன்பு நிலைக்கே தகுதியுண்டு. அன்பிலாதார் புகழுரையைக் காட்டிலும், தமது நலங் கருதுவோர் இகழுரை நமக்கும் இன்பம் பயக்கின்றது.

மன்மதன் இறைவன் மீது மலர் சொரிந்தான். அவன் கணையென்றுவிட்டது மலர்கள் தான். ஆனால், இறைவன் அவனை எரித்து விட்டார். மன்மதன் மலர் எறிந்த செயல் நன்றே யாயினும், அவன் உள்ளம் இறைவனை மயக்க வேண்டும் என்று துணிந்தது. அதனாலே அச்செயல் தீமையாயிற்று. ஆனால் சாக்கிய நாயனார் கல்லெறிந்தாலும், இறைவன் மீது எல்லையற்ற அன்புடன் திருவருளையே தாரகமாகக் கொண்டு செயலறியாது கல்லெறிந்தார். ஆகவே இவருடைய செயல் இறைவனுக்கு உகந்ததாக ஆயிற்று.

மறுநாள் உணவு உண்ணுமுன் சாக்கிய நாயனார் சிவலிங்கத்தைத் தரிசிக்க வந்தார். நேற்று நிகழ்ந்த குறிப்பினை உணர்ந்து, "நான் அப்போது அவ்வாறு செய்தது இறைவன் திருவருளே" என நினைந்து அதுவே என்றும் செய்யத் துணிந்தார். எல்லாம் சிவன் செயல் என்று உறுதியாக தெளிந்தவர் ஆதலினால் கல்லெறிதலையும், சிவந்த ஆடையுடுத்தலையும் தவிராதவராய் நின்றார்.


அன்பு நெறி வழக்கினால் தொண்டர்கள் புரியும் கருமம் இறைவனுக்குப் பூசனையே! வனவேடராகிய கண்ணப்பர் செருப்படியை இறைவன் விரும்பியது போல, இவருடைய கல்லெறிதலையும் விரும்பி ஏற்றுக் கொண்டார். மற்றவர் கல் என்றாலும் சிவனார்க்கு அது மலராகவே ஆயிற்று.

*"கல்லாலே எறிந்ததுவும்*
*அன்பான படி காணில்*
*வில்வேடர் செருப்படியும்*
*திருமுடியின் மேவிற்றால்*
*நல்லார் மற் றவர் செய்கை*
*அன்பாலே நயந்ததனை*
*அல்லாதார் கல்லென்பார்*
*அரனார்க் க ஃ தலராமால்*

ஒருநாள் சிறிது மறதியாக உணவு உண்ண அமர்ந்தார். சாக்கிய நாயனார். ஆ! ஆ! கெட்டேனே! எங்கள் பெருமானைச் சேவிக்காமல் அமர்ந்தேனே என்று கூறித் துணுக்குற்று எழுந்தார். பொங்கியெழுந்த காதலுடன் மிகவிரைந்து புறப்பட்டு அரனார் திருமுன்பு சென்றார். கல்லெடுத்துக் குறிதவறாமல் எறியும் பொருட்டு உணவை ஒழித்து வேட்கையுடன் ஓடிவரும் திருத்தொண்டர் முன், கண்ணுதற்கடவுள் விண்ணிடை உமாதேவியாருடன் தோன்றியருளினார். தேவரும் காணாத முழுமுதற் கடவுளைக் கண்குளிரக் கண்ட சாக்கிய நாயனார் தணியாத காதலுடன் பலமுறை பணிந்தார். இறைவன் கடைக் கண்ணால் நோக்கியருளிச் சாக்கிய நாயனாருக்கு சிவலோகப் பெருவாழ்வு கொடுத்தருளினார்.

ஆகவே, சாக்கிய நாயனாருடைய வாழ்க்கையின் மூலம், நாம் கற்றுக் கொள்ள வேண்டிய படிப்பினை என்ன? அதாவது திரிகரண சுத்தியோடு நியமந்தவறாமல் அளவிறந்த பக்தியோடு இறைவனை வழிபாடு செய்து வந்தால், இறைவன் எமக்கு கருணை காட்டுவான் எனத் திடமாக நம்புவோமாக.

---



# கர்ப்பூரம், கொளுத்துவது பயனளிக்குமா?

பொதுவாகப் பூஜைகளுக்கு கர்ப்பூரம் கொளுத்திச் சுற்றிப் போடுவது வழக்கம். இதையும் மூடநம்பிக்கையாகவே பலரும் கருதி வருகின்றனர். பலரும் இதைப் பூஜையின் பாகமாக இறையருளுக்காகச் செய்வதாகவே கருதுகின்றனர். ஆனால் கர்ப்பூரம், சாம்பிராணி முதலியவை கொளுத்தும்போது அதன் புகைசென்று சேருமிடமெல்லாம் பாசிடிவ் சக்தி பரவுகின்றது. மேலும் சூழ்நிலையிலுள்ள விஷ அணுக்களை அழிக்கவும் இந்தப் புகைக்கு சக்தியுண்டு. இதனால் இறையருளும் கிடைக்கப்பெறும். இந்த உண்மைகளை அன்றே அறிந்திருந்தனர் நம்முன்னோர்கள்.

# பைந்தமிழின் பின்சென்ற பச்சைப் பசுங்கொண்டல்

- திருமதி. சிவனேஸ்வரி பாலகிருஷ்ணன் அவர்கள் -

அவதாரந் தோறும் அறமார்க்கத்தினின்றும் மாறுபட்ட அவுணர்களையழித்து தருமத்தை நிலை நாட்டுபவரானபடியால் எட்டுத் திசைகளிலும் திருமால் புகழ்கொண்டுள்ளார். நாராயணமூர்த்தி அமுதினும் சிறந்த தமிழ் மொழியின் இனிமையில் அன்புடையவரானபடியால் செந்தமிழ்ப் பாடல்களைக் கேட்க அவர் அடியார் பின்னே திரிகின்றார். விஷ்ணு ஆலயங்களில் வீதி வலம் வரும்போது வடமொழி வேத பாராயணம் தொடர்ந்துவர, அவருக்கு முன் நாலாயிரத் திவ்ய பிரபந்த பாராயணம் போக, அதனைத் தொடர்ந்து நாராயணர் செல்லுகிறார். இறந்த மகனை உயிர்பெறச் செய்ததும் எலும்பைப் பெண்ணாக்கியதும், அனலிலும், புனலிலும் தழைத்திருந்ததும் இத்தமிழ் மொழியல்லவா? முருகப் பெருமானே தந்தைக்குப் பிரணவப் பொருளை கொஞ்சிக் கொஞ்சிச் செந்தமிழ் மொழியால் பகர்ந்தாரென்றால் தமிழின் பெருமையை யார் உரைக்கவல்லார்!

திருமழிசையாழ்வார் காஞ்சி வரதராஜப் பெருமாள் அருளால் கணிகண்ணன் என்ற புத்திரனைப் பெற்றார். ஒருநாள் கணிகண்ணர் வரதராஜரைச் சேவித்து திரும்பும் போது ஓர் கிழவி வயது சென்று உடல் தள்ளாடி நடுக்குற்றிருந்தும், வரதருடைய திருவாலயஞ் சென்று, கண்ணும் கருத்துமாக சுவாமி கைங்கரியம் செய்து வருவதைக் கண்டு கணிகண்ணருக்கு கருணை மேலிட்டது. இக்கிழவி உடல் தளர்ந்து துன்புறுகிறாளே. இளமைப் பருவத்தையடைந்தால் இன்னும் பகவத் கைங்கரியத்தில் ஈடுபடுவாள் என எண்ணி, காஞ்சி புரத்தில் எழுந்தருளியுள்ள "கமலக்கண்ணா! இவ்விருத்தைக்கு நின் திருவருள் உண்டாக வேண்டும்" என்று கூறி, தமது அருமைத் திருக்கரத்தால் கிழவியின் முதுகைத் தடவினார். உடனே அவள் கிழத்தன்மை மாறி, கட்டிளங் குமரியானாள். கரத்திலிருந்த ஊன்று கோலை எறிந்தாள். கணிகண்ணரை வாயார வாழ்த்தினாள். அங்கிருந்தோர் இவ்வதிசயத்தைக் கண்டனர். கிழவியைக் கணிகண்ணர் குமரியாக்கின செய்தி ஊரெங்கும் விரைந்து பரவியது.

பல்லவராயனுக்கு இச்செய்தி தெரிந்தது. கணிகண்ணரையழைத்து, "எனக்கு கிழத் தன்மையடைந்திருக்கிறது. அதனை நீக்கி குமரனாகச் செய்யும்" என்றார். கணிகண்ணர் நகைத்து, "மன்னா, கிழத் தன்மையகற்றி இளமைப் பருவத்தையளிக்க என்னாலாகாது" என்றார். மன்னன், "ஐயா! ஆலயத்திலே ஒரு கிழவியை நீ முதுகைத் தடவி குமரியாகச் செய்தாய் என்று நகரமெங்கும் கூறுகின்றனர். என்முதுகையும் தடவி மூப்புத் தன்மையை நீக்கி இளமைப் பருவத்தையளிப்பாய்" என்றனன். கணிகண்ணர் அரசே! "இக்கிழவியை நானா குமரியாக்கினேன். என்னால் அணுக்கூட அசையாது. எல்லாம் ஈசன் செயல், வரதனுடைய கருணையால் அது நடந்தது. நீயும் அப்பெருமானை வேண்டுதல் புரிந்து நின் விருப்பத்தைப் பெறுவாயாக" என்றனர். அதனைக் கேட்ட பல்லவராயன் முனிவுற்று,

என்னே! நின்செருக்கு? பிச்சை எடுத்துத் திரியும் உனக்கு இத்தனை அகங்காரமா? இக் கணமே இந்நகரத்தைவிட்டுச் செல்லுதி" என்றனன்.

கணிகண்ணன் முறுவல் புரிந்து, அறிவிலியே! உன்னை நம்பியோ என்னைக் கட வுள் படைத்தார்? இந்நகரம் ஒன்றில்லையேல் நான் உயிர்வாழ முடியாதோ? இக்கணமே உன் நகரைவிட்டு நீங்குகிறேன் என்று கூறி தனது குருநாதராகிய திருமழிசையாழ்வார் பால் வந்தார். திருவடிமேல் வீழ்ந்தார். நிகழ்ந்தவற்றைக் கூறி, அடியேன் இந்நகரைவிட்டு நீங்குகிறேன். அனுமதிக்க வேண்டும் என விடைபெற்றுப் புறப்பட்டார். தம் சீடர்சென்றவுடனே பிரிவாற்றாத திருமழிசை ஆழ்வார் காஞ்சி வரதரைக் கண்டு,

*"கணிகண்ணன் போகின்றான் காமரு பூங்கச்சி*
*மணிவண்ணா நீ கிடக்க வேண்டா - துணிவொன்றிச்*
*செந்நாப் புலவோன் யான் செல்கின்றேன் நீயுமுன்றன்*
*பைந் நாகப் பாய் சுருட்டிக் கொள்"*

என்ற திருப்பாசுரத்தை அருளிச் செய்தார். உடனே வரதராஜப் பெருமாள் ஆழ்வார் கூறிய வண்ணம் ஆதிசேடனாகிய பாயலைச் சுருட்டிக்கொண்டு அவர் பின் சென்றார். பெருமாள் செல்ல பின் மகாலட்சுமியும் சென்றார். காஞ்சிபுரத்தில் மூதேவி வந்து சேந்தனல். மக்கள் அரசன் பால் கணிகண்ணர் போனபடியால், ஆழ்வாரும் போனார். அவர் பின்னே கச்சிவரதரும் போனார். வரதர் பின்னே வரலட்சுமியும் சென்றார். காஞ்சிமா நகருக்கே அழிவு தேடினை என்று ஓலமிட்டனர். அது கேட்டு அர சன் அஞ்சி நடுங்கி பெரியோரிடத்தில் பிழை செய்தோமே என்று வருந்தி மந்திரிமாருடன் சென்று வரதரையும் சீதேவியையும் தொழுது வணங்கித் திரும்பி வரும்படி வேண்ட, ஆழ்வார் திரும்பினாலொழிய நாம் திரும்போமென்றனர். அரசன் ஆழ்வாரின் பாதமலரில் வீழ்ந்து வணங்கி கருணை கூர்ந்துவரும்படி வேண்ட, அவர் நகைத்து நம் சீடன் வந்தாலன்றி நாம் திரும்போம் என்றார். மன்னன் கணிகண்ணர் கால்மேல் வீழ்ந்து, அடியேன் புரிந்த பிழையை மன்னித்து நகரத்திற்கு எழுந்தருள வேண்டுமென்றான். கணிகண்ணர் கருணை கூர்ந்து குருநாதர் பால்வந்து மன்னனை மன்னிக்க வேண்டும் என்று கூறி நகரத்திற்கு திரும்பினர். உடனே ஆழ்வார் பெருமானை நோக்கி வெண்பாவைத் திருப்பி பாடினார்.

*கணி கண்ணன் போக்கொழிந்தான் காமரு பூங்கச்சி*
*மணிவண்ணா நீ கிடக்க வேண்டும் - துணிவொன்றிச்*
*செந்நாப் புலவோன்யான் செலவொழிந்தேன் நீயுமுந்தன்*
*பைந்நாகப் பாய் விரித்துக் கொள்.*

என்று பாடியவுடனே பெருமாள் சீதேவியுடன் சென்று ஆலயத்தில் பன்னாகப் பாயலை விரித்தமர்ந்தனர். இதனால் பெருமாளுக்குச் "சொன்னவண்ணஞ் செய்த பெருமாள்" என்ற திருநாமம் வழங்குகிறது. எம்பெருமான் பக்த வத்ஸலன், அடியார்க் கெளியவன், தொண்டர்க்கினியவன் ஆழ்வார் சொன்ன வண்ணம் செய்து பைந்தமிழின் பின் சென்று ஆழ்வாரின் பக்தியை, பெருமையை உலகுக்கு உணர்த்தினார். நாமும் அந்தப் புண்ணிய மூர்த்தியை, புவனியைக் காப்பவனை, விண்ணவர் கோமானை, வேய்ங்குழல் வித்தகனை, உபநிடதங்கள் போற்றும் உத்தமனை, வைகுந்தவாசனை அருமறை நாயகனை, ஆழி

மாயவனை, கருமுகில் வண்ணனை, கமலக்கண்ணனை, திருமகள் நேசனை, திருப்பாற்கடல் வாசனை சங்கு சக்ரதாரியை இதயக் கமலத்தில் இருத்தி, அவன் திவ்ய நாமத்தை ஓதி அவன் அருள் பெறவேண்டும்.

பைந் நாகப் பாம்பணையைச் சுருட்டிக்கொள் என்ற அடியார் பின் சென்ற பெருமானை, ஆனையின் துயர்தீரப் புள்ளூர்ந்த அருளாளனை, பாஞ்சாலி சேலை களைந்திட்டபோது கோபாலா, கிருஷ்ணா எனக் கூப்பிட்ட மங்கை குறை தீர்க்க வந்திடாமல், தொண்டர்க்கு அருள் செய்யும் தூயவன் பாதமேதுணையென்று சரணம் சொல்லி துதித்த பின்னரே துயர் நீக்கிய அநாதரட்சகனை, அண்டமே காத்திடும் அச்சுதனை, ஆதிமூலத்தை, ஆயர் கொழுந்தை, ஆனந்தக் கிருஷ்ணனை சரணாகத வத்ஸலனைச் சரணமடைந்து பேரின்பப் பெருவாழ்வு பெறுவோமாக.

---

# செல்வச் சந்நிதிக் கந்தன்

## கழற்கோர் கவிமாலை (6)






சரண மாகி உனைவ ணங்கி சதிர தாடி யறிவ ழிந்து
உருவ தேறி நிலையி ழந்து - வெறியாட
சகல நோயு மழிய வென்று தருமுன் நீறு தனைவ ழங்கி
சகச மாக வரம லர்ந்து - அருள்வோனே!
கருணை கூரு விழிதி றந்து கதியி லாத நிலைய றிந்து
கவின தாக அருள்வ ழங்கு - வடிவேலா
கழல தேயென் துணைய தென்று கதறு நாயன் மனமி ருந்து
கவலையோட வுளமி ரங்கி - அருளாயோ?
வருண னாக வருள்சு ரந்து மழைய தாக புவிபொ ழிந்து
வளம தாக அமைய வென்று - மருள்கோனே
வளரு மாயை வலைவி ழுந்து வகையி லாத துயரு ழன்று
வழியி லாது வுனைய டைந்து - அழவேநீ
தருண மீதில் மயில மர்ந்து அயிலி னோடு கடுகி வந்து
தமிய னேனுள் மகிழ வென்றுங் - காவாயோ?
தமர தாகு மடியர் நெஞ்சுள் நினையு யோக மருள விச்சந்
நிதியை நாடி யமரு கந்தப் - பெருமானே!



- இராசையா குகதாசன்,
நாயன்மார்க்கட்டு.



# சிறுவர்கதைகள்

## பஞ்சதந்திரக் கதைகள்

### கழுதையும் நாயும்

வெகுகாலத்துக்குமுன் தமிழ்நாட்டின் தென்பகுதியில் நல்லூர் என்ற சிறிய கிராமம் ஒன்று இருந்தது. அந்தக் கிராமத்தைச் சுற்றி மலைகளும், மரங்கள் அடர்ந்த சிறிய காடுகளும், பச்சை நிறக்கம்பளம் விரித்தாற் போல் வயல்களும் இருந்தது. நல்லூரைச் சுற்றி இருந்த கிராமங்களில் வசித்து வந்த மக்கள், நல்லூர்க் கிராமத்தைப் பார்க்கும் போது, தங்கள் கிராமம், நல்லூரைப் போல் இயற்கை அழகு நிறைந்ததாக இல்லையே என்று தங்கள் மனதுக்குள், ஏங்கித் தவிப்பார்கள்.

நல்லூர்க் கிராமத்தில் நல்லான் என்னும் பெயருடைய ஒரு குடியானவன் வசித்து வந்தான். அவனுக்கு நிறைய வயல்களும், தோட்டங்களும் இருந்தன. அவன் தன் வயலிலும் தோட்டத்திலும் விளையும் தானியங்களையும் காய்கனிகளையும் அருகில் இருக்கும் சந்தைக்கு எடுத்துச் செல்ல தன் வீட்டில் ஒரு கழுதையை வளர்த்து வந்தான். வீட்டுக் காவலுக்காக ஒரு நாயும் அவனுடன் இருந்தது. இரண்டு பிராணிகளும் நல்லானுக்கு எல்லா வகையிலும் உதவி செய்து வந்தன. கழுதை, அதன் முதுகில் ஏற்றும் நெல் மூட்டைகளையும், காய், கனி மூட்டைகளையும் சுமந்து சென்று சந்தையில் இறக்கிவிட்டு, தன் எஜமானன், சந்தையிலிருந்து தன் வீட்டுக்குத் தேவையான பொருட்களை வாங்கி, மூட்டைகளாகக் கட்டி அதைக் கழுதையின் மேல் வைத்தால், கழுதையும், எஜமானன் தன்னுடன் வராவிட்டாலும், தன் முதுகின் மேல் உள்ள சாமான்களை பத்திரமாக, எஜமானனின் வீட்டில் கொண்டு போய் சேர்த்து விடும்.




நல்லான் வளர்த்து வந்த நாய் எப்போதும் அவன் வீட்டில் காவலுக்கு இருக்கும். அது நல்லான் வெளியே செல்லும்போது அவனை அன்புடன் பார்த்து, அவன் மேல் தாவிக் குதித்து விளையாடும். அதேப்போல், அவன் வெளியே சென்று விட்டு வீட்டுக்குத் திரும்ப வரும்போது, தன் வாலை பலமாக அசைத்துக் கொண்டு அவனை அன்புடன் பார்க்கும். அவனும் நாய்க்குத் தீண்பண்டங்கள் கொடுத்து நாயை அதன் முதுகில் தட்டிக் கொடுப்பான்.

நீண்ட நாட்களாக, நாய் தன் எஜமானனிடம் நெருங்கிப் பழகுவதைக் கண்ட கழுதை, தானும் நாயைப் போல் எஜமானனிடம் தன் கால்களைத் தூக்கி எஜமானனின் மார்பில் உதைத்து விளையாட வேண்டும் என்று ஆசைப்பட்டது.

நல்லானும், தன் நாயிடம் எவ்வளவு அன்பு செலுத்தி வந்தானோ, அதே அளவு சற்றும் குறையாமல், தான் வளர்க்கும் கழுதையிடமும் செலுத்தினான். கழுதையால் நல்லானுக்கு பல வகைகளில் பலன் இருந்தது. அவன் பல சமயங்களில், கழுதையுடன்

சந்தைக்குச் செல்ல முடியாது. காரணம், அவனுக்கு வயல்களிலும், தோட்டங்களிலும் நிறைய வேலை இருக்கும். அந்த நேரங்களில் மூட்டைகளை கழுதையின் மேல் ஏற்றிவிட்டால் அது நேராக சந்தைக்குச் சென்று, தன் எஜமானன் சொல்லும் இடத்தில் மூட்டைகளை இறக்கி வைத்து விட்டு தன் எஜமானன் வீட்டிற்குத் திரும்ப வந்து விடும். அதனால் நல்லானுக்கு தன் கழுதை மேல் எப்போதும் ஒருவித பாசமும் பரிவும் இருந்து வந்தது. ஆனால் கழுதைக்கு மட்டும் தன்னால் தன் எஜமானன் மேல் நாயைப் போல் விளையாட முடியவில்லையே என்ற ஏக்கம் இருந்து வந்தது.

ஒருநாள் கழுதை சீக்கிரமாக சந்தையில் இருந்து வீட்டிற்கு வந்து விட்டது. நல்லானும், தன் வயலில் வேலைகளை முடித்துக்கொண்டு வீட்டுத் திண்ணையில் அமர்ந்திருந்தான். அந்த நேரத்தில் நல்லான் வளர்க்கும் நாய் வெளியில் எங்கோ சென்றிருந்தது. இதுதான் சமயம் என்று எண்ணிய கழுதை வேகமாக, தன் எஜமானன் அமர்ந்திருந்த இடத்திற்குச் சென்றது. கழுதை தன்னிடம் வருவதை கவனித்த நல்லான் சற்று ஒதுங்கி உட்காரவும் கழுதை உடனே தன் முன்னங்கால்களைத் தூக்கி நாய் செய்வது போல் எஜமானனின் மார்பில் உதைத்தது. இதைச் சற்றும் எதிர்பார்க்காத நல்லான், அதிர்ச்சி அடைந்தான். மேலும், கழுதையின் கால் குளம்புகள் நல்லான் மார்பில் பட்டு வலியை ஏற்படுத்தியது. வலியால் துடித்த நல்லான் கழுதையைத் தள்ளிப் போகும்படி விரட்டினான். ஆனால் கழுதை தன் எஜமானனின் வார்த்தைகளை காதில் வாங்கிக் கொள்ளாமல் மீண்டும் மீண்டும் தன் கால்களைத் தூக்கிக் கொண்டு எஜமானனிடம் சென்றது. கழுதையின் செய்கையை நீண்ட நேரம் பொறுத்துக் கொண்ட நல்லான், பொறுமை இழந்து, அருகில் கிடந்த ஒரு பெரிய கொம்பை எடுத்து கழுதையை அடிக்க ஆரம்பித்தான். கழுதையும் வலி பொறுக்க முடியாமல் தாவிக் குதித்துக் கொண்டு ஓடியது.

கழுதை தன்னைப் பற்றி சரியாக புரிந்துகொள்ளாமல், தன் எஜமானனிடம் தன்னுடைய தகுதிக்கு மீறி நடந்து கொண்டதால் அடிவாங்கி அவதிப்பட்டது.



# தவமுனிவனின் தமிழ் மந்திரம் (கட்டுரைத் தொடர் - 34)

- சிவத்தமிழ் வித்தகர் சிவ. மகாலிங்கம் அவர்கள்-

காமம், வெகுளி, மயக்கம் ஆகிய மூன்றும் ஆன்மாவிற்குப் பெருங்கேடு விளைவிப்பனவாக உள்ளன. ஆன்மாவிடம் மெய்யுணர்வு ஏற்படுவதற்கு இம்மூன்று குற்றங்களில் இருந்தும் ஆன்மா விடுபடல் வேண்டும். ஒவ்வொரு மனிதனிடமும் குடிகொண்டிருக்கும் ஆசை, சினம், அறியாமை ஆகிய மூன்றின் பெயரும்கூட இல்லாமல் அவற்றை அடியோடு அழிப்பவனுக்கு அவனுடைய துன்பங்கள் அனைத்தும் நீங்கும் என்பதை

*காமம், வெகுளி, மயக்கம் இவை மூன்றன்*
*நாமம் கெடக்கெடும் நோய்*

எனத் தமிழ் மறையாகிய திருக்குறள் கூறுகிறது. காமம், வெகுளி, மயக்கம் ஆகிய மூன்று குற்றங்களும், ஆன்மாவிற்கு என்றும் துன்பத்தையே தருவன. இதனால் உயிர்கள் தங்கள் உண்மைச் சொருபத்தை அறியாது மாயா காரியமாகிய இருளில் மயங்கிக் கிடந்தன. இம்மூன்று குற்றங்களில் இருந்தும் விடுபட்டவர் பிறப்பு இறப்புக்களை விட்டு நீங்கியவராவர். இவற்றிலிருந்து நீங்காதவர் அம் முக்குற்றங்களின் காரியமாகிய மாயையால் துன்பப்பட்டு அழிபவரேயாவர்.

*மூன்றுள குற்ற முழுது நலிவன*
*மான்றிருள் தூங்கி மயங்கிக் கிடந்தன*
*மூன்றினை நீக்கினர் நீக்கினர் நீங்காதார்*
*மூன்றினுட் பட்டு முடிகின்றவாறே*

ஒருவர் யாரிடமும் பேசாமல் மௌனமாக இருக்கலாம். ஞானத்தை அறிந்த யோகி போல இருக்கலாம். யோகம் செய்து கொண்டும் இருக்கலாம். நாட்டைத் துறந்து காட்டிலே போய் வாழலாம். ஆயினும் உள்ளத்திலே தூய்மையில்லாதவர்களாயிருந்தால் பயன் எதுவும் இல்லை. உள்ளத்திலே குற்றங்களுக்கு ஊற்றுக் குழியான ஆசையை வைத்துக் கொண்டு இருப்பவர்கள் நாட்டிலிருந்தாலும் காட்டிலிருந்தாலும் ஒரே தன்மை உடையவர்களாகவே இருப்பார்கள். இவர்களுடைய மனப்பாசியாகிய அழுக்கு ஒரு காலமும் நீங்காது. இவர்கள் அன்பையோ அறிவையோ பெறமாட்டார்கள். உண்மையான அறிவான இறைவனைக் காணவும் மாட்டார்கள்.

உள்ளத்தில் தூய்மை உள்ளவர்கள் மனமாசு அற்றவர்கள், மௌனமாக இருந்து ஞான நெறியிலே நடப்பவர்கள். உண்மையாளர்கள் ஆவார்கள். இவர்களே யோகிகள், ஞானிகள் என்று போற்றுதற்குரியவர்கள். இவர்கள் உயிர் நோயாகிய பிறவி நோய்

நீங்கப் பெற்றவர்கள். இக் கருத்தினைச் சித்த புருஷராகிய சிவவாக்கியரின் பின்வரும் பாடல் தெளிவாக விளக்குகிறது.

*மனத்து அகத்து அழுக்கு அறாத மவுன ஞானயோகிகள்*
*வனத்து அகத்து இருக்கினும் மனத்து அகத்து அழுக்கு அறார்*
*மனத்து அகத்து அழுக்கு அறுத்த மவுனஞான யோகிகள்*
*முலைத் தடத்து இருக்கினும் பிறப்பு அறுத்து இருப்பாரே*

ஆருயிராகிய அணுவும், அவ்வுயிரினைச் சிவத்துடன் கூட்டுவதாகிய பரமாகிய திருவருளும் ஒன்றாகக் கலந்த நிலையில் எவ்வகைத் தடையுமின்றி இயங்கும் சிவனும் இணைந்தால் பால், தேன், அமுது ஆகிய மூன்றும் கலந்த கலவையை ஒத்த இனிமை நிலை ஆன்மாவில் ஏற்படும். இத்தகைய இனிப்பு என்றும் தெவிட்டாது விளங்கும். இந்நிலையில் வாய் பேசாது மௌனமாகி விடும். ஆன்மா சிவத்தோடு கலந்திருக்கும் பேரானந்த நிலையை விளக்க முடியாது. வாய் பேசா மௌன நிலையில் இருக்கும்.

*அணுவும் பரமும் அசிபதத் தேய்ந்து*
*கணு வொன்றில்லாத சிவமுங் கலந்தால்*
*இணையறு பால்தேன் அமுதென இன்பத்*
*துணையது வாயுரையற்றிடத் தோன்றுமே.*

ஆன்மா சிவத்தோடு கலந்திருக்கும் இன்பத்தினை அனுபவத்தினால் உணரலாமே ஒழிய வாயினால் கூற முடியாது.

உலகியற் பற்றுக்கள் நீங்கவேண்டுமாயின் ஆன்மா இறைவனின் திருவடிகளை இறுகப் பற்ற வேண்டும். பற்றுக்களுக்கெல்லாம் அப்பாற்பட்டவனாகிய நிர்மலனாகக் காட்சி தருபவன் இறைவன். அவனிடம் பற்றினை வளர்த்தால் உலகியற் பற்றுக்கள் அனைத்தும் தானாக நீங்கி விடும் என்பதனைப்

*பற்றுக பற்று அற்றான் பற்றினை அப்பற்றைப்*
*பற்றுக பற்று விடற்கு*

எனச் செந்நாப் போதரும் திருக்குறள் செப்புகிறார்.

தடத்த நிலையில் ஆன்மாவின் தலைவனின் பெயர் பதி; சொருப நிலையில் சிவம். தத்துவங்களின் பற்று நீங்க அது இலயமடையும் பொருளாகிய சிவனைப் பற்றில் விஞ்ஞான கலர் நிலையை அடைந்து ஆன்மாக்கள் சதாசிவராகிவிடுவர். நாத சொருபமாக இருப்பது சிவனுடைய அறிவு. பற்றுக்கள் நீங்கிவிட்டால் நாத சொருபமான சிவத்தின் அறிவே ஆன்மாவின் அறிவாகிவிடும். சீவபோதம் கெடச் சிவப்பற்று மேலோங்கி நிற்கும்

நிலையில் ஆன்மா சிவத்துடன் கலந்து இறவா இன்ப நிலையை எய்தும்.

*பற்றறப் பற்றிற் பரம் பதியாவது*
*பற்றறப் பற்றிற் பரனறிவே பரம்*
*பற்றறப் பற்றினில் பற்ற வல்லோர்கட்கே*
*பற்றறப் பற்றிற் பரம்பரமாமே*

சிவன் ஆதியும் அந்தமும் இல்லாதவர். ஆதியும் அந்தமுமில்லா அரும்பெரும்சோதி என மணிவாசகப் பெருமான் சிவனைத் திருவாசகத்தின் திருவெம்பாவைப் பாடலில் குறிப்பிடு கின்றார். பிரம விஷ்ணுக்கள் சிவனின் முடியையும் அடியையும் தேடிக் காணமுடியாத பொழுது அவர் சோதி வடிவாகத் தோன்றினார் என்பதை

"இங்குற்றே னென்று இலிங்கத்தே தோன்றினான்"

என அப்பர் பெருமானின் பாடல் கூறுகிறது.

"எண்ணுவார் நெஞ்சில் நண்ணுவார் ஈசன்" என்ற

வாக்கிற்கு அமைய தன்னை நினைந்து வழிபடுகிறவர்களுக்கு திருவருளை இறைவன் வாரி வழங்குவான்.

முதலும் முடிவும் இல்லாத மேலான தலைவராகிய சிவன் சோதிவடிவாய் பார்க்கு மிடமெங்கும் நீக்கமற நிறைந்துள்ளார். எங்கும் நிறைந்திருந்தும் நல்லோர்க்குத் தோன்றியும் அல்லார்க்குத் தோன்றாதும் செம்மையோடு இறைவன் பிரகாசிப்பார். இத்தகைய சிவஞானத்தை அவ்வாறு உணர்வில் பெற்றவர் புண்ணியம் உடையவர் ஆவார். ஆதியும் அந்தமும் இல்லாத அரும் பெரும் சோதியை அகத்திலே உணர்ந்தவர்கள் பக்குவம் உடையவர்களாகத் திகழ்வார்கள்.

*ஆதியும் அந்தமும் இல்லா அரும்பதி*
*சோதிப் பரஞ்சுடர் தோன்றத் தோன்றாமையின்*
*நீதியது ஆய் நிற்கும் நீடிய அப்பரம்*
*போதம் உணர்ந்தவர் புண்ணியத்தோரே*

ஆத்மாவின் உள்ளே சிவம் பிரகாசிப்பதைச் சீவஒளி என்பர். சீவ ஒளி ஆன்மாவில் பிரகாசிக்கும் நிலை துரிய நிலை எனப்படும். யோக சாதனையிலே துரிய நிலையில் உணர் வினைச் செலுத்தினால் ஆன்மாவின் உள்ளே சிவமணம் கமழும் ஆன்மீக சாதனைகளிலும் சோதனைகள் இடையிடையே ஏற்படும். தொடர்ந்து முயற்சி செய்தால் சோதனைகளைத் தாண்டிப் பல சாதனைகளைச் செய்யலாம் இறைவனின் சிவ துரியாதீதத்தை ஆன்மா பற்று வதற்குத் தொடர் முயற்சி வேண்டும். தொடர்ந்து முயன்றால் இறையருளினால் அந்நிலை யினை அடையலாம். இவ்வாறு முயன்றும் முடியாவிடில் இறைவனை அடையும் நெறியினை உணர்த்தும் ஞான, நூல்களைக் கற்றல்வேண்டும். ஞான நூல்களுடன் இணக்கம் வைத்தால்

பல், நா, உதடுகள் பொருந்திச் சொல்வதற்கு மேற்பட்ட சிவ தத்துவம் நாத வடிவாய் அகத்திலே பொருந்தும்

*தொட்டேயிருமின் துரிய நிலத்தினை*
*எட்டாது எனினும் நின்று எட்டும் இறைவனைப்*
*பட்டாங்கு அறிந்திடின் பல் நா உதடுகள்*
*தட்டாது ஒழிவதோர் தத்துவமாமே*

ஆன்மா இறைவனோடு இணைந்திருக்கும் பேரின்ப நிலையான முத்தி நிலையைச் சீவமுத்தி, பரமுத்தி, சிவமுத்தி என மூன்று வகையாகத் திருமந்திரம் குறிப்பிடும் பாசம் கடந்து நிற்றல் சீவன் முத்தி என்றும், தன் செயலின்றி அருளின் வழியே நிற்றல் பரமுத்தி என்றும், சிவம் ஆன்மா என்ற இருமையற்று ஆனந்தமயமான நிலையில் நிற்றல் சிவமுத்தி என்றும் அழைக்கப்படும்.

ஆன்மா பிறப்புக்குரிய காரணத்தை விட்டு விட்டால் பிறக்க வேண்டிய காரியம் இல்லாமற் போகும் நிலை சீவன் முத்தி எனப்படும். உலகம் பொய் என்றும் அது தீமையைத் தருவது என்றும் ஆன்ம விசாரணையால் அறிந்து வைராக்கியத்தால் பிரபஞ்சப் பற்றி இருந்து விடுபட்டு நிற்கும் நிலை சீவன் முத்தி ஆகும். ஆன்மா பிறக்க வேண்டிய நியதியைக் கடந்து அறிவுருவாய் சிவத்தில் இலயம் அடையாமல் நிற்கும் நிலை பரமுத்தி என்று அழைக்கப்படும். மூவகை ஆன்மாக்களில் பிரளயாகலர், விஞ்ஞானகலர் இந்நிலையில் உள்ளவர் என்பர். உடலுள்ள போதே சிவானந்தத்தில் திளைத்து உடலை மறந்து வாழ்ந்து சிவத்துடன் ஒன்றாகி நிற்கும் நிலையே சிவானந்த முத்தி எனப்படும். இம் மூவகையினரும் உடலை விட்டவரே ஆவார்.

*சீவன் தன் முத்தி அதீதம்; பரமுத்தி*
*ஓயுபசாந்தம் சிவமுத்தி ஆனந்தம்*
*மூவயின் முச்சொருப முத்தி முப்பாலதாய்*
*ஓவுறு தாரத்தில் உள்ளும் நாதாந்தமே*

சைவ சித்தாந்த தத்துவம் மாயையை இறைவனின் வைப்புச் சக்தி அல்லது பரிக்கிரக சக்தி என்று கூறும். உயிர்களைத் தன் வயமாக்கி மயக்குவதால் மாயை என்ற காரணப் பெயரைப் பெற்றது. உடல், உலகம் என்பவற்றின் உற்பத்திக்கும் ஒடுக்கத்திற்கும் மூல காரணமாயிருக்கும் மாயை சுத்தமாயை, அசுத்தமாயை, சுத்தாசுத்த மாயை (பிரகிருதி மாயை) என மூன்று வகைப்படும். இவற்றிலிருந்தே முப்பத்தாறு தத்துவங்களும் தோற்றம் பெற்றன.

மும்மலங்களில் ஆணவம் அறிவை மயக்கும். மாயை அறிவை விளக்கும். மாயை விடியும் வரையும் இருளை ஒருவாறு போக்குவதற்குச் சிறு விளக்கு உதவுவது

போலச் சிவஞானம் ஆகிய பேரொளியைப் பெற்று ஆன்மா முத்தி, நிலையை அடையும் வரையும் ஆணவத்தைப் போக்கக் கூடிய அறிவைக் கொடுக்கும்.

*விடிவா மளவும் விளக்கனைய மாயை*

*வடிவாதி கன்மத்து வந்து*

என்று மேற்கூறிய உண்மையைத் திருவருட் பயன் விளக்குகிறது.

சகலர், பிரளயாகலர், விஞ்ஞானகலர் ஆகிய மூவர்கள் வாழ்கின்ற இடம் பிரகிருதி மாயை, அசுத்த மாயை, சுத்தமாயை என்பன ஆகும். இந்த வகையான மூன்று மாயையில் இருந்துமே முப்பத்தாறு தத்துவங்களும் தோன்றியுள்ளன. இம் மூன்று மண்டலங்களிலும் ஊடுருவி நிற்கும் ஆத்மசோதியைக் கண்டதும் உயிரின் பிறவி வட்டம் முடிவு பெறும்.

*மூன்று உள மாளிகை மூவர் இருப்பிடம்*

*மூன்றினின் முப்பத்தாறும் உதிப்பு உள*

*மூன்றி னினுள்ளே முளைத்து எழும் சோதியைக்*

*காட்டலும் காயக் கணக்கு அற்றவாறே*

மனித உடம்பில், மூலாதாரம், சுவாதிட்டானம், மணிபூரகம், அநாகதம், விசுத்தி, ஆஞ்ஞை என்று ஆறு ஆதாரங்கள் உள்ளன. மூலாதாரத்தில் உறைந்திருக்கும் குண்டலினி சக்தியை ஆறு ஆதாரங்களின் ஊடாக யோகிகள் மேலே எழுப்புவர். இது யோக சக்தியாக மாறி உச்சியில் அமிர்தத்தைச் சொரியும். இதனை ஞானிகள் உச்சியில் பிச்சையெடுத்தல் எனக் கூறுவர். குதம்பைச் சித்தர் இதனை மாங்காய்ப் பால் என்று குறிப்பிடுகின்றார். குண்டலினி சக்தியை உலகியல் இன்பங்களை அனுபவிக்கும் சக்தியாக மாற்றினால் அது போக சக்தி யாக மாறிவிடும். இதனைத் தேங்காய்ப் பால் எனக் கூறுகின்றார்.

*மாங்காய்ப்பால் உண்டு மலை மேல் இருப்போர்க்குத்*

*தேங்காய்ப்பால் ஏதுக்கடி? குதம்பாய்*

*தேங்காய்ப்பால் ஏதுக்கடி?*

என்பது குதம்பைச் சித்தரின் பாடல் ஆகும்.

ஒளியையுடைய கண்ணின் பார்வையை மேலும் ஒளி பெறுமாறு செய்து, ஓம் என்ற பிரணவ மந்திரத்தை தியானிப்பதால் மூலாதாரத்திலிருந்து கனவை குண்டலினி சக்தியை மேலே எழுப்புதல் வேண்டும். சந்திர கலை, சூரியகலை ஒன்றாகுமாறு சுழு முனையிலே சேர்த்துச் சிரசுக்கு மேல் சகஸ்ரதள வெளியில் பொருத்தினால் கனலும் காற்றும் இணைந்து சிவ ஒளியாகப் பிரகாசிக்கும் தியானத்தின் முதிர்வு நிலையில் சிவபதம் தானாகவே அமையும்.

*ஒளியையொளி செய்து வோமென்றெழுப்பி*

*வளியை வளி செய்து வாய்த்திட வாங்கி*

*வெளியை வெளி செய்து மேலெழ வைத்துத்*

*தெளியத் தெளியும் சிவபதந் தானே*



# திருவிளையாடல்

## மாயாதுகந் தீர்த்த படலம்

**- ஆறுமுகநாவலர் -**

**படலம் - 26**

குலோத்துங்க பாண்டியன் அரசியற்று நாளிலே, "அலந்தி" நகரத்திலே ஒரு பிராமணன் இருந்தான். அவன் மனைவியோ இரதியையும் வென்ற அழகுடையவள். அவளுக்கு ஒரு மகன் பிறந்தான். அவன் வளர்ந்து வாலிபப்பருவம் எய்தும் நாளில் காம மிகுதியினாலே தன் மாதாவையே விரும்பினான். அவளும் அதற்கு உடன்பட்டாள். அம் மாபாவி மாதாவைக் கலந்திருந்த நாளிலே, இதனைப் பிதா குறிப்பினால் அறிந்தும், பிறருக்குத் தெரியாதவாறு தன் உள்ளத்தே அடக்கி வைத்திருந்தான். ஒரு நாள் இரவில் தந்தையானவன் வெளிப்படையாகக் கண்டும் யாதொன்றும் பேசாதிருந்தான். அதனைக் கண்டுகொண்ட மகன், தாய் எவ்வளவோ சொல்லித் தடுத்தும் கேளாமல், ஒரு மண்வெட்டியை எடுத்துத் தன் தந்தையை வெட்டிக்கொன்றான்.

அப் பாதகன், இரவோடிரவாக தந்தையைத் தகனம் செய்துவிட்டு தாயையும் கூட்டிக்கொண்டு கைக்கடங்கிய பொருளோடும் காட்டுக்குள் புகுந்துகொண்டான். இவர்களைக் கண்ட வேடர்கள் கைப்பொருளையும் பறித்தெடுத்துத் தாயையும் தம்மோடு கூட்டிப் போயினர். "தான் ஒன்று நினைக்கத் தெய்வம் வேறொன்றெண்ணியது" என்னும் பழமொழி அவனளவில் சரியாகப் பலித்தது. செய்த பாவமானது பேயுருவாய் வந்து அவனைப் படாதபாடுபடுத்தியது. அது "ஐயோ" என்றழும், "பாவம்! பாவம்!!" என்று புலம்பும். நிழல்போல அவனைவிடாது துரத்தும். புண்ணிய தீர்த்தம் - புண்ணிய நதி - பெரியோர் வாசல் போகவிடாமற் செய்யும் சிவ நாமம் - சிவகீர்த்தியினைக் கேட்கமுடியாமற் தடுக்கும். எங்கே திரும்பினாலும் தடுத்து நிறுத்தி பின்னோக்கி இழுக்கும். இவ்வாறு உழன்று அலைந்து திரிந்தான். சிவபெருமானுடைய திருவருளினாலே தன் பாதகம் நீங்கும் நாள் நெருங்க அவன் மதுரையை அணுகினான்.

அப்பொழுது கருணைக் கடலாகிய சோமசுந்தரக் கடவுள் வேடுவ வடிவங்கொண்டு, வேடுவிச்சி வடிவம் கொண்ட மீனாட்சியம்மையாரோடும் திருக்கோபுரத்தின் வெளியே சூதாடிக் கொண்டிருந்தார். பெருந் துயரத்துடன் அங்கே வரும் பாதகனது வருகையைக் கண்டனர். மீனாட்சி அம்மையாரை நோக்கி எம்பெருமான் பின்வருமாறு விளக்குகின்றார்:

"காமத்தில் விழுந்தவனுடைய மனமானது எந்தப் பேதமும் அறியாது. குலமும் குணமும் ஒழுக்கமும் பாராது. அறிவைக் கெடுப்பது கள்ளுங் காமமுமே. அவற்றுள்ளும் காமமானது நினைப்பினும் காணினும் கேட்பினும் அறிவைக் கெடுத்துவிடும். கள் உண்டபோது மாத்திரமே கெடுக்கும். கொலைகளுக்கெல்லாம் காரணம் காமமேயாகும்" என இறைவன்

திருவாய் மலர்ந்தருளினார். தம்மை நெருங்கி வந்த அவனிடம் "அடப்பாவியே! நீ வருந்தி மெலிவதென்னை?" என்று கேட்டார் இறைவன். தான் செய்த பாவங்கள் அனைத்தும் தன்னைத் துரத்துவதாக அனைத்தையும் கூறி நின்றான் அவன். வேடுவனான சிவபெருமான், "இங்கேயன்றி வேறு எங்கேயும் நீ போய் இந்தப் பாவத்தை நீக்க முடியாது. ஒரு வழி சொல்கிறேன், கேள்; "சூரியன் உதிக்கு முன்பே நித்திரைவிட்டெழுந்து அறுகம்புல் பறித்துப் பசுக்களுக்குக் கொடுத்து, முக்காலமும் கோயிற் புறத்தே ஸ்நானம் செய்து சிவனை நூற்றெட்டுமுறை அங்கப் பிரதட்சணை செய்து, பிச்சையேற்று ஒருவேளை பூசிக்கக்கடவாய். நீ இந்தத் தவநெறியிலே தொடர்ந்து நின்றாயாயின் இப்பாவம் நீங்கும்" எனத் திருவாய் மலர்ந்தருளி தேவியோடும் மறைந்தருளினார். அவன் இதுகண்டு ஆச்சரியப்பட்டு வேடனான சிவபெருமான் அருளியபடியே அனைத்தையும் கடைப்பிடித்து, மாபாதகம் நீங்கித் தெய்வப் பிராமண வடிவமானான். சோமசுந்தரக் கடவுளுடைய திருவடிகளிலே பற்பல வடமொழி தோத்திரங்களை பக்தியோடு சாத்தி, தானும் அத்திருவடிகளிற் சேர்ந்து பேரின்பமுற்றான்.

## அங்கம் வெட்டின படலம்

படலம் – 27

குலோத்துங்க பாண்டியன் செங்கோலோச்சு நாளிலே வேறு தேசத்திலுள்ள முதிர்ந்த வயதுடைய ஒருவன் மதுரையில் வந்திருந்து வாள்வித்தை பயிற்றுவித்து சீவித்து வந்தான். அவன் நாள்தோறும் சோமசுந்தரக் கடவுளை வழிபடும் நியமம் பூண்டான். அவனை வழிபட்டு வாள்வித்தை கற்கும் மாணவர்களுள் "சித்தன்" என்பானும் ஒருவன். அவன் இவ்வித்தையை நிரம்பக் கற்றுத் தெளிந்து தன் ஆசிரியருக்கு மாறாக ஒரு வித்தியாகூடம் அமைத்து தன்னாசிரியனை விடக் கூடுதல் வருமானம் பெற்று வந்தான். ஆசிரியரிடம் கற்கும் மாணாக்கர்களையும் தன்பால் இழுத்து எல்லா வருமானமும் தனக்கு மட்டுமே கிடைக்கும்படி செய்ததுடன் நாள்தோறும் அவ்வாசிரியருக்குப் பல இடையூறுகள் செய்து வந்தான். தன் ஆசிரியர் இல்லாத வேளையில் தினமும் அவர் வீட்டுக்குப் போய் மனைவியிடம் தகாத வார்த்தைகள் சொல்வான். ஒருநாள் அவள் கையைப் பிடித்திழுக்க கைகளை உதறிவிட்டு வீட்டுக்குள்ளே ஓடிச்சென்று தன் கற்பினைக் காத்துக்கொண்டாள். இந்தச் சம்பவத்தைத் தன் கணவனுக்கும்கூட தெரியப்படுத்தாமல், சோமசுந்தரக் கடவுளின் சந்நிதானம் சென்று நடந்ததைக் கூறி அழுது உள்ளம் நொந்திருந்தாள்.

சோமசுந்தரக் கடவுள் வாள் வித்தை பயிற்றுவிக்கும் அவ்வாசிரியன் போல வேடங் கொண்டு சித்தனிடத்தே போய், "காளையாகிய நீயும் மிகுந்த மூப்படைந்த நானும் வாட் போர் செய்து நமது வலிமையைக் காண்பிப்போம். பட்டணத்தின் புறத்தே நாளை வா! நாமும் வருவோம்!" என்றார். சித்தனும் மகிழ்ந்து அதற்கு உடன்பட்டான்.

மறுநாட்காலை சித்தன் வாட் போருக்குத் தயாரான நிலையில் உரிய இடம்வந்து சேர்ந்தான். வாளாசிரிய வேடங்கொண்ட சிவபெருமான் வீபூதி தரித்து வாட்போருக்கான ஆயத்தங்களுடன் மைதானத்துக்கு வந்தார். மைதானத்தைச் சுற்றிப் பலரும் கூடியிருக்க இருவரும் வாட்போர் புரிந்தனர். உன் குருபத்தினியை நினைத்த நெஞ்சினையும், அவள் குறித்துப் பேசிய நாக்கையும், தொட்ட கையையும், பார்த்த கண்களையும் எல்லாவற்றுக்கும்

சேர்த்து உன் தலையை வெட்டி வீழ்த்துகிறேன் என்று சொல்லி தலையை வெட்டி வீழ்த்தி விட்டு மறைந்தருளினார்.

மாணாக்கர்கள் ஆசிரியரைப் பல இடமும் தேடிக் கண்டுபிடித்து அவரது திறமையை மெச்சிப் பாராட்டினர். தான் அந்த இடத்தில் நிற்கவில்லை என்றும், அவன் தலையைத் தான் கொய்யவில்லை என்றும், இது இறைவனின் திருவிளையாடலே எனத் தெளிந்து, "எம்பெரு மானே! அடியேன் பொருட்டு உன் திருவடிகள் இப்பூமியில் பட்டதோ" எனச் சொல்லிச் சொல்லி நிலத்தில் விழுந்து வணங்கி நின்றான்.

குலோத்துங்க பாண்டியனும் மதுரை நகரத்துள்ளோரும் சிவபெருமானுடைய திரு விளையாடலை நினைந்து ஆனந்தக் கூத்தாடி வணங்கித் துதித்தார்கள். குலோத்துங்க பாண்டி யன் வாளாசிரியனையும் அவன் மனைவியாகிய மாணிக்கமாலையையும் யானை மீதேற்றி நகர்வலம் செய்வித்தான். பின்பு தன் புத்திரன் அனந்த குணபாண்டியனுக்கு முடிசூட்டித் தன்னரசை அவனிடம் ஒப்படைத்து, சில காலத்தின் பின்னர் குலோத்துங்க பாண்டியன் சிவனு டைய திருவடி நிழலைப் பிரியாத பேரின்பமாகிய பரகதியை அடைந்தான்.

---




ஞானச்சுடர் மலரில் சிறப்பான கட்டுரைகள் வருகின்றன என்பதை யிட்டு எங்கள் பாராட்டுக்களை வெளியீட்டில் பங்கு பற்றும் அனைவருக்கும் அன்புடன் தெரிவிப்பதோடு, தொடர்ந்து சிறப்பாக வெளிவரவேண்டுமென்று முருகப் பெருமானை பிரார்த்திக்கின்றேன்.

உங்கள் விபூதிப் பிரசாதத்தையும் தொடர்ந்து அனுப்பி வைக்கும்படி கேட்டுக் கொள்கின்றேன்.

இலங்கையில் அவதியுறும் மக்களுக்கு தங்கள் ஆச்சிரமத்தினூடாக சிறந்த சேவைகள் ஆற்றிக் கொண்டிருப்பது சகலராலும் வரவேற்கப்படு கின்றது.

- சி. கந்தசாமி
U.K.

# இராமகிருஷ்ணரின் குட்டிக் கதைகள்



**- கு. நவரத்தினராஜா அவர்கள் -**

இவ்வுலகில் அவதரித்த மாமனிதருள் மனிதராய் விளங்கிய மூன்று முத்துக்கள் தான் பகவான் ஸ்ரீ ராமகிருஷ்ண பரமஹம்சரும், தூய அன்னை சாரதா தேவியும், சுவாமி விவேகானந்தரும் ஆவார். பகவான் ஸ்ரீ இராமகிருஷ்ண பரமஹம்சரின் பிரதம சிஷ்யர்கள்தான் தூய அன்னை சாரதா தேவியும், சுவாமி விவேகானந்தரும் என்றால் அது மிகையாகாது. பகவான் ஸ்ரீ ராமகிருஷ்ணர் நமக்கருளிய உபதேச மொழிகளும், குட்டிக் கதைகளும் மிகவும் பயனுள்ளவை. அவரது சிறுகதைகள் ஒவ்வொன்றும் மனிதனது சிந்தனையைத் தூண்டி மக்களின் வாழ்க்கையை மிக நல்ல வழியிலே செலுத்தி வாழ வைப்பவை. நிச்சயம் நாங்கள் ஒவ்வொருவரும் அவரது குட்டிக் கதைகளைப் படித்துப் பயனடைவோமாக.

## பெண்ணாசை என்பது!

ஜெய்பூரில் கோவிந்தஜி என்கின்ற ஒரு விஷ்ணு கோயில் இருந்தது. அதில் உள்ள பூசாரிகள் முதலில் பிரமச்சாரிகளாக இருந்தனர். இதனால் அவர்களுக்குள் ஆத்ம பலம் என்பது மிகுதியாக இருந்தது.

இந்த நேரத்தில் ஜெய்ப்பூர் அரசன் அவர்களைத் தன்னிடம் வரச் சொல்லிக் கூப்பிட்டு அனுப்பினான்.

ஆனால் அவர்கள் அரசனிடம் போகவில்லை. தங்களை அரசன் வந்து சந்திக்கட்டும் என சொல்லிவிட்டனர்.

சில காலங்களுக்குப் பிறகு அவர்கள் திருமணம் செய்து கொண்டனர். அதன் பிறகு அர்ச்சகரை அழைக்க வேண்டிய வேலை ராசாவுக்கு ஏற்படவில்லை. அவர்களே அரசரை நோக்கிச் செல்ல வேண்டியதாயிற்று இப்படிப் பல விஷயங்களுக்கு அவர்கள் செல்ல வேண்டிய நிலைமை ஏற்பட்டது. இந்த நிலைமைக்குப் பிறகு அடிமையாக இருந்து வேலை செய்வதினால் உண்டாகின்ற அவமானம் ஆகும். இந்த அவமானத்திற்கு எல்லாம் என்ன காரணம். பெண்ணாசைதான் பிரம்மச்சாரியாக இருந்தபோது அவர்கள் அடிமையாக வாழவில்லை. பெண்ணாசை வந்து திருமணம் ஆனதும், அவர்கள் இந்த அவமானங்களைப் பெற வேண்டி வந்துவிட்டது. இவைகளே பெண்ணாசை என்பதின் பலன் ஆகும்.

## பெண்ணாசையே காரணம்

ஒரு ஊரில் ஓர் ஏழைப் பிராமணன் ஒருவன் இருந்தான். அவனுக்கு எந்த வேலையும் கிடைக்காததால் வறுமையிலும் துன்பத்திலும் உழன்றான். இந்த நிலையில் ஒரு கம்பெனி மனேஜரை அணுகி தனக்கு வேலை போட்டுத் தருமாறு நாள்தோறும் வேண்டிக் கொண்டிருந்தான். மனேஜரும் அவ்வப்போது தம்மை வந்து பார்க்குமாறு கூறினார். ஆனால் எதிர்பார்த்த பலன் எதுவும் கிடைத்த பாடாக இல்லை. இப்படியே பல நாட்கள் உருண்டோடியது. தன் சிரமங் களை எல்லாம் தனது நண்பன் ஒருவனிடம் சொல்லி வருத்தப்பட்டான் அந்தப் பிராமணன். நீ செய்தது முட்டாள்த் தனமான காரியம். மனேஜரிடம் நடந்ததைவிட நான் சொல்லும் ரோஜாமணியிடம் செல் உடனே உனக்கு வேலைக்கு ஏற்பாடு ஆகிவிடும் என்று கூறினான். உடனே அவன் வார்த்தைக்கு கட்டுப்பட்டு ரோஜாமணியிடம் சென்றான். ரோஜாமணி என்பவள் வேறுயாருமில்லை. மனேஜரின் ஆசைநாயகியே அவள் ஆவாள். ரோஜாமணி பிராமணனின் நிலைமையை உணர்ந்து அவனுடைய வேலைக்கு சிபார்சு செய்து வைத்தாள். என்ன சொக்குப் பொடி போட்டாளோ தெரியாது. மறுநாள் காலையே மனேஜரின் ஆள் பிராமணன் வீட்டிற்கு ஓடிவந்து பிராமணனை கம்பெனிக்கு அழைத்துப் போனான். வேலையும் அவனுக்கு கிடைத்து விட்டது. ஆண்களுக்கு பெண்களின்பால் உள்ள கவர்ச்சியின் வேகம் இப்படிப்பட்டதாக ஆகிவிட்டது. ஏன் இந்த உலகம் முழுமையுமே பெண்ணாசையில்த்தான் மயங்கிக் கிடக்கின்றது. பிராமணனுக்கு வேலை கிடைத்ததும் மனேஜரின் பெண்ணாசையே காரணமாக அமைந்தது.

## எல்லாம் மனைவியால்

ஒரு ஏழைப் பிராமணனுக்குப் பெரிய பணக்கார ஜவுளி வியாபாரி ஒருவர் சீட னாக இருந்தார். ஜவுளி வியாபாரி பரமலோபி கஞ்ச மகாப் பிரபுவாக இருந்தான்.

தனது பாகவதப் புத்தகத்திற்கு உறைபோட நினைத்தார். ஏழைப் பிராமணர். எனவே தமது சீடரிடம் சென்று ஒரு சிறிய துண்டு துணி வேண்டுமெனக் கேட்டார். அவனோ தற் சமயம் அந்தத் துணி தன்னிடம் இல்லை என்றும் தான் நினைவில் வைத்திருந்து அதைப் பின்னர் தருவதாகவும் கூறினான். அதே சமயம் தனக்கு அதை அவர் ஞாபகப்படுத்த வேண்டும் என்றும் கூறினான்.

பிராமணர் வெறுங்கையோடு திரும்பினார். இவர்கள் இருவருக்கும் இடையே நடந்த சம்பாசனையை ஜவுளி வியாபாரி மனைவி தெரிந்து, எனவே ஏமாற்றத்துடன் வெறுங்கையோடு திரும்பிய பிராமணனை அழைத்து விஷயம் கேட்டாள். அவரும் விவரமாகக் கூறினார்.

அவள் கவலையை விட்டுச் செல்லுங்கள். உங்களுக்கு வேண்டிய துணிகள் உங்கள் வீட்டிற்கு நாளை வந்து சேரும் என ஆறுதல் கூறி அனுப்பினாள். அன்றிரவே தனது கடையில் இருக்கும் விலையுயர்ந்த துணியில் இரண்டைக் கொண்டு வருமாறு சொன்னாள். அவ்வாறே அவனும் மறுக்காமல் செய்தான். காலையில் துணிகளை பிராமணன் வீட்டிற்கு அனுப்பி வைத்ததோடு, அவருக்கு ஏதாவது வேண்டுமெனில் இனி தன்னைக் கேட்குமாறும் தான் தருவதாகக் கூறி அனுப்பினாள். எல்லாம் மனைவியால்த்தான் அமையும் என்பதை பிராமணன் உணரத் துவங்கினார்.

# விஞ்ஞானமும் மெய்ஞ்ஞானமும்

- பொ. சோமசுந்தரம் அவர்கள் -

## உலக அமைப்பில் மெய்ஞ்ஞானமும் விஞ்ஞானமும்

உலக அமைப்பு பற்றி ஆராய்ந்த தொடக்க நிலையில் எல்லாப் பொருட்களும் 92 மூலகங்களினால் ஆக்கப்பட்டுள்ளதெனக் கண்டார்கள். பொருட்கள் யாவும் உண்டாவதற்கு அணுக்கள்தான் காரணம். அணுக்களின் செறிவும் எண்ணிக்கையும் ஒவ்வொரு பொருட்களிலும் வித்தியாசப்படும். பொருட்களிலே வெவ்வேறு சக்திகள் காணப்படுகின்றன. உதாரணமாக வெப்பசக்தி, ஒளிச்சக்தி, காமாக்கதிர்கள், X கதிர்கள் போன்றன. இக்கதிர்கள் எல்லாம் மின் காந்த அலைகளாகும். இவற்றைத் தவிர ஈர்ப்புசக்தியும் உள்ளது. இவ்வாறு உலக அமைப்பை ஆராய்ந்தால், அடிப்படையாக உள்ளது வெவ்வேறு செறிவில் உண்டாக்கப்பட்ட அணுக்களினாலான பொருட்கள் அண்ட வெளி, நேரம், சக்தி, ஈர்ப்புச் சக்தி மட்டுமேதான்.

மேற்கூறிய கருத்தை உறுதிப்படுத்துவற்கு மனிதனின் ஐம்புலன்களை ஆராய வேண்டும். ஐம்புலன்களாகிய மெய், வாய், கண், மூக்கு, செவி ஒவ்வொன்றிற்கும் விடயங் களை அறிவதற்கு எல்லைக்கோடு உண்டு என்பதை பல உதாரணங்களால் விளக்க முடியும். எமது கண்களால் பார்க்க முடியாதனவற்றை இலத்திரன் நுணுக்குக்காட்டி பார்த்து படங்களாக எமக்குத் தருகிறது. எனவே இலத்திரன் நுணுக்குகாட்டியினாலும் X கதிர்களி னாலும் பெறும் காட்சியினை சாதாரண எமது கண்கள் பார்க்குமாயின் நாம் தற்பொழுது காணும் உலகிலிருந்து மிக வேறுப்பட்ட உலகினையே காண்போம். எமது இதய ஒலி, மிகக் குறைந்த சக்தி ஒலிகள், கூடிய ஒலிகளைக் கேட்கமுடிந்தால் பல தொல்லைகள் உண்டாகும். உடல் அதிக அமுக்கத்திலும் மிக குறைந்த அமுக்கம் உடைய இடங்களிலும் வாழ முடியாது.

ஐம்புலனினால் பெறப்பட்ட அறிவு மூளையென்று கருதப்படுமிடத்தில் கணனிப் பதிவு போல் பதியப்பட்டுள்ளது. மனம் எனப்படும் திடப் பொருளல்லாத உணர்வினால் மட்டும் முந்திய பதிவுகளை நாங்கள் திரும்பப் பெறுவதால் உலகைப் பற்றிய அறிவு உண்டாகிறது. ஐம்புலப் பதிவும் மனம் என்பதும் இல்லாவிட்டால் உலகில் மிஞ்சுவது வெறுமை. இக் கருத்தை அயன்ஸ்ரைன் எவ்வாறு கூறுகிறார் எனப் பார்த்தால் -

The only world man can Truly know is the world created for him by his senses of the expunges all the imperrims which they translate and memory stotes, nothing is left.

மெய்ஞ்ஞானிகள் உலக அமைப்புப்பற்றி விளக்கியுள்ளார்கள் அவர்களின் விளக்க மும் விஞ்ஞானிகளின் விளகத்திலும் தொடக்க மாவெடிப்புநிலையில் சக்தியைப் பற்றியு

விளக்கமே முக்கியமானது. விஞ்ஞானத்தில் மிக நெருக்கமாக திரவ அல்லது திண்ம நிலையில் சக்தி இருந்துள்ளது. அவ்விடத்தில் ஏற்பட்ட விபத்தின்போது சக்தி சிதறி வேக மாக வெளியேறும் வேகம் குறையக்குறைய இந்த அண்டம் பல நட்சத்திரங்களையும் கோள்களையும் பல பொருட்களையுடையதாகவும் மாறியது எனக் கருதுகிறார்கள். அக்கருத் தையே அருணந்தி சிவாச்சாரியாரும் தனது சிவஞான சித்தியாரில் இரண்டாம் சூத்திரத்தில் 3ஆம் அதிகாரத்தில் விளக்கியுள்ளார். அவரின் கருத்துப்படியும் மாயை என்பதும் ஓர் சக்தி எனவும் அந்த மாயா சக்தியே உலகிற்கு முதற்காரணம் எனவும் அம் மாயையின் இலக்கணங் களையும் கூறியுள்ளார்.

ஆசிரியர் மாயையைப் பற்றிக் கூறும்பொழுது அது ஓர் நிரந்தரமான உருவமற்ற சடப்பொருளினால் உண்டாகியது என விளக்கியுள்ளார். உலகமும் யாவும் உண்டாவதற்கு வித்து நிலையிலுள்ள மாயை காரணமாகும். விமலன் மாயை எனப்படும் சக்தியை உப யோகித்து சங்கற்பிப்பதனால் உலகம் தோற்றம் அடைகிறது. ஆன்மாக்கள் உய்யும் பொருட்டு தனு கரண புவன போகங்களையும் உண்டாக்கியுள்ளார். மாயை மனிதனிற்கு விளக்க முடியாத சில மயக்கங்களையும் செய்யவல்லது.

*நித்தமாய் அருவாய் ஏக நிலையதாய் உலகத்திற்கோர்*
*வித்துமாய் அசத்தாய் எங்கும் வியாபியாய் விமலனுக்கோர்*
*சத்தியாய் புவன போகந் தனுகரணமும் உயிர்க்காய்*
*வைத்ததோர் மலமாய் மாயை மயக்கமும் செய்யுமன்றே*

உலக அமைப்பை விஞ்ஞான ரீதியாகவோ மெய்ஞ்ஞான ரீதியாகவோ ஆராய்ந்தால் ஒரு சக்தி மாற்றமே காணப்படுகிறது. அயன்ரைன் கூறியபடி $E=MC^2$ என்ற சமன்பாட்டில் சக்தி பொருளாக மாறலாம். பொருள் எப்பொழுதும் சக்தியாக மாறலாம். அண்டம் முழுவதும் வெவ்வேறு செறிவிலுள்ள அணுக்களே பன்மையான தோற்றத்தைக் கொடுக்கிறது மெய்ஞ்ஞானிகளின் அறிவிலும் பன்மையான தோற்றத்தைக் கொடுக்கிறது. மெய்ஞ்ஞானிகளின் அறிவிலும் விமலன் உபயோகித்த மாயா சக்தி பன்மையான பொருட்களும் ஒரு தோற்றமே எனக் கூறலாம். மாயையினால் உண்டாகிய எமது உடல் (தனு) அந்தக் கரணங்கள் புவனங்கள் போகப் பொருட்கள் யாவும் ஒரு முக்கிய காரணத்திற்காக இறைவன் உண்டாக்கினான். அது என்னவெனில் ஆன்மாக்கள் தமது பிறவிப் பிணியை (மன்னுபவம் தீர்க்கும் மருந்து) நீக்குவதற்கு இந்த மாயாவுலகில் வாழ்ந்து வெறுப்புற்று அதனால் இறைவன் அடி சேரு வதற்காகும்

### உலக அமைப்பில்பிரமிக்கத் தக்க செய்திகள்

உலக அமைப்பில் விஞ்ஞான ரீதியாகவும் மெய்ஞ்ஞான ரீதியாகவும் பார்க்கும் பொழுது வேறு உச்ச நிலையிலுள்ள அறிவுப் பொருள் சம்பந்தப்பட்டதைக் காணலாம். அவ்வறிவுப் பொருள்தான் அண்டத்தின் காணப்படும் திரள். திரள் நிலையான நட்சத்திரங்களை யும் Galax சூரியனைச் சுற்றும் கோள்களையும் ஓர் திட்டமான கட்டமைப்பில் இருக்கக் கூடியதாக அமைந்திருக்க வேண்டும். அப்படி இல்லாவிட்டால் எங்களால் அடுத்த சூரிய கிரகணமோ சந்திர கிரகணமோ எப்போ நடக்குமெனத் துல்லியமாகக் கணக்கிடமுடியாது.

அறிய முடியாத மாபெரும் சக்தியின் தரவுகளையும் கோட்பாடுகளையும் அடிப்படையாகக் கொண்டே அண்டம் உருவாகியுள்ளது. இவ்வுருவாக்கத்தின் பின் அச்சக்தி நிர்வாகம் செய்கிறதா இல்லையா என்பதைத் திட்டமாக நிறுவ முடியாதுள்ளது. அண்டத்திலுள்ள பொருட்களின் அமைப்பை ஆராயலாம். ஆனால் அவை ஏன் உண்டாயின அவற்றின் இயற்கை மாற்றம் ஏன் நடைபெறுகிறது என்பதற்கு விடை காணமுடியாது.

ஒரு கருக்கட்டிய முட்டையில் ஓர் ஆண் கருவும் ஓர் பெண் கருவும் சேர்ந்த நிலையில் காணப்படுகிறது. அந்த முட்டையிலிருந்து ஓர் குஞ்சு வெளியேறும் கருக்கட்டிய முட்டை பிரிவடையும் போது லட்சக்கணக்கான ஒரே மாதிரியான கலங்கள் உண்டாகும் பின்பு அக் கலங்கள் கூட்டம் கூட்டமாகப் பிரிந்து வெவ்வேறு உறுப்புகளை உண்டாக்கும். அதற்குக் காரணம் கருவிலுள்ள (Gene) ஜீன் எனக் கூறலாம். ஆனால் ஒவ்வொரு ஜீனிற்கும் ஒவ்வொரு உறுப்பை உண்டாக்கும் இயல்புக்குக் காரண கர்த்தா யார் என்பது விஞ்ஞானிக்கோ கோழிக்கோ தெரிவதில்லை. இது மனிதனின் உற்பத்திக்கும் பொருந்தும் மனிதன் ஒவ்வொருவரும் ஒரு கருக்கட்டிய முட்டையிலிருந்தே தோன்றுகின்றான்.

(தொடரும்...

---

# தோல்வி!

தோல்வி குறித்து மனமே, நீ துயரடையாதே, தோல்வியினின்று நீ கற்றுக்கொள்ள வேண்டிய தனிப் பாடம் ஒன்றுண்டு தோல்வியினின்று நீ பெறுகின்ற ஞானத்தையும் நல்லறிவையும் வேறு யாருமே உனக்கு வழங்கமுடியாது. தோல்வியை நீ துருவி ஆராய்ந்தால் உன்னுடைய வீழ்ச்சியை நீ விசாரித்துப் பார்த்தால் மெய்யறிவு என்னும் பொக்கிஷத்தை அதனுள் நீ காண்பாய். இப்பொழுது தோல்வியாகத் தென்படுவது நாளை வரும் வெற்றிக்கு வித்தாகும்.

**- சுவாமி**
**சித்பவானந்தர்**



உ


# தினம் தினம் ஆனந்தமே....

– சத்குரு ஜக்கி வாசுதேவ் அவர்கள்–

## வாழ்வைத் தொலைக்காதீர்கள்

தன் வாழ்வில் ஆனந்தத்தையே உணராத மனிதர் என்று யாராவது இருக்கிறார்களா? அப்படி ஒருவர் இருக்க சாத்தியமே இல்லை.

உலகத்திலேயே மிகவும் துயரமான மனிதன்கூட, தன் வாழ்வில் ஆனந்தமான கணங்களை அனுபவித்து இருக்கிறான். அவனால் ஆனந்தமாக இருக்க முடியவில்லை என்று சொல்லமுடியாது. எப்படி அவனால் துக்கமாக இருக்க முடிகிறதோ, அதேபோல் ஆனந்தமாகவும் இருக்க முடியும்.



ஆனந்தத்தைத் தக்க வைத்துக்கொள்ள முடியவில்லை என்பதே அவனுடைய பிரச்சினை. அவன் துயரமாக இருப்பதற்கு காரணமே, ஆனந்தத்தைத் தொலைத்துவிட்டதுதான். மக்களிடம் துயரம் அதிகமாக இருப்பதற்குக் காரணமே, 'நேற்று அற்புதமாக இருந்தது. இன்று என்ன நடந்தது என்றே புரியவில்லை' என்று நினைப்பதுதான்.

இது அவர்களின் துயரத்தை பன்மடங்கு அதிகரிக்கிறது. ஆக, ஆனந்தத்தை உணராதவர்கள் என்று யாருமே கிடையாது. ஒரு கணமாவது ஆனந்

த்தை எல்லோருமே உணர்ந் திருக்கிறோம்.

நீங்கள் உங்களை ஆனந்தமாகவும் வைத்துக் கொள்ள முடியும்; துக்கமாகவும் வைத்துக்கொள்ள முடியும். ஒரு கணத்திற்கு, நீங்கள் உங்களை ஆனந்தமாக வைத்துக் கொள்ள முடியும் என்றால், ஒவ்வொரு கணமுமே உங்களை நீங்கள் ஆனந்தமாக வைத்துக் கொள்ள முடியும்.

ஆனந்தத்தை உங்களுக்குள்ளேதான் உணர முடியும். வெளியே அல்ல. இதைப் புரிந்து கொண்டால்த்தான் ஆனந்தமாக இருக்க முடியும்.

## மனதிற்குள்ளேயே ஆனந்தம்!

சில பேர் என்னிடம், "உள்ளார்ந்த ஆனந்தத்தை எப்படிப் பெறுவது?" என்று கேட் கின்றனர். நான் உங்களைக் கேட்கிறேன்... நீங்கள் ஆனந்தத்தை எப்போது வெளியில் அனுபவித்தீர்கள்? நீங்கள் மது அருந்தும் போது ஆனந்தமாக இருந்திருக்கலாம். ஆனால் அந்த ஆனந்தத்தையும் உங்கள் உள்ளேதானே உணர்ந்தீர்கள். நீங்கள் எதைச் செய்தாலும் சரி, ஆனந்தம் எப்போதுமே உங்களுக்குள்ளேதான் நிகழ்கிறது; உங்களுக்கு வெளியே அல்ல.

இப்போது உங்கள் துயரத்திற்குக் காரணமே, நீங்கள் ஆனந்தத்திற்கு திரும்பி வராமல், அதைத்தேடி வெளியே அலைந்து கொண்டிருப்பது தான். ஆனந்தம் உங்களுக்குள்ளே தான் இருக்கிறது என்பதை உணராமல், அது ஏதோ வெளியே தொங்கிக்கொண்டு இருப் பது போல அலைந்து தேடிக்கொண்டு இருக்கிறீர்கள். உங்கள் சக்தியை விரயம் செய்து கொண்டு இருக்கிறீர்கள்.

நீங்கள் இப்போது ஆனந்தமற்று இருப்பதே, உங்களை விட்டு நீங்கள் விலகிச் செல்ல முயற்சிப்பதால்த்தான். உங்கள் இயல்பே ஆனந்தமாக இருக்கும்போது, அதை உணராமல் அதனை விட்டு விலகி, ஆனந்தத்தை தெருவிற் தேடிக்கொண்டு அலைகிறீர்கள். ஆனந்தத்தை விட்டு விலகிச் செல்கிறீர்கள்.

ஆக, ஆனந்தமாக இருக்கும் தகுதி அனைவருக்கும் உள்ளது. ஆனால், அதை உங்களால் சில கணங்களுக்குத்தான் உருவாக்க முடிகிறது. மீதி நேரம் முழுவதும் துயரமான கணங்களை உருவாக்குகிறீர்கள்.

ஒரு கணத்தை நீங்கள் விரும்பிய விதத்தில் உங்களால் ஆனந்தமாக உருவாக்க முடியும் என்றால், அடுத்தடுத்த கணங்களையும் நீங்கள் விரும்பிய விதத்தில் ஆனந்தமாக உருவாக்க உங்களால் நிச்சயம் முடியும். முழு வாழ்க்கையே இப்படி ஒவ்வொரு கணங் களாகத்தான் உங்களிடம் வருகிறது. நல்லவேளை ஒரு நேரத்திற்கு ஒரு கணம் தான். அவை தனித்தனியாகத் தானே வருகின்றது? கணங்கள் கட்டுக்கட்டாக உங்களிடம் வருவதில்லை. இந்தக் கணத்தில் ஆனந்தமாக இருக்கத் தெரிந்தால் போதும், உங்கள் வாழ்வே ஆனந்தமாகி விடும். ஆனால் இது தெரியவில்லை என்றால், நீங்கள் நிரந்தரமாக உங்களை தொலைத்து விடுவீர்கள்.

**(ஆனந்தம் இன்னும் வரும்)**



# சிவராத்திரி விரதம் அனுஷ்டிக்கு முறை

## சிவமகா புராணத்திலிருந்து....

- ஸ்ரீ விசுவாம்பா விசாலாட்சி மாதாஜி அவர்கள் -

சிவபெருமான் விஷ்ணுவை நோக்கி, 'விஷ்ணுவே! உத்தமமானதொரு விரதத்தை உனக்குச் சொல்கிறேன், வேதங்கள், ஸ்மிருதிகள், புராணங்கள், தர்ம சாஸ்திரங்கள், இவைகளிலெல்லாம் சொல்லப்பட்டுள்ள இரகசியங்களில் அதி ரகசியமான விஷயத்தை நான் உனக்குச் சொல்கின்றேன். உலகத்தில் முத்தி அளிக்கத்தக்கவை நான்கு. அவை சிவார்ச்சனை, உருத்திர பராயணம், அஷ்டமி சோமவாரம், கிருஷ்ண பட்ஷத்து சதுர்த்தசி (பிரதோஷம்). இந்த மூன்று நாள் உபவாசம் காசி ஷேத்திரத்தில் மரணம் என்பவையாம். இந்த நான்குமே முத்தி அளிக்கத் தக்கவை. இந்த நான்கிலும் சிவராத்திரி விரதமே மிகவும் உத்தமமானது. ஆகையால் பத்தி முத்திகளை விரும்புவோர் இந்த சிவராத்திரி விரதத்தை அனுஷ்டிக்கவேண்டும். இதைவிடச் சிறந்த விரதம் வேறு ஒன்றுமில்லை.

அப்போது திருமால் சிவனை நோக்கி, பிறைசூடிய பெருமானே! அந்தச் சிவராத்திரி விரதம் பற்றி எளியேனுக்குச் சொல்லவேண்டும். எந்த மாதத்தில் எந்த விதிப்படி எப்படி பூசிக்க வேண்டும். இதை உலக நன்மைக்காகக் கேட்கின்றேன். எவ்வளவு காலம் இந்த விரதத்தை அனுட்டிக்க வேண்டும் மற்றத் திதிகளைவிடச் சதுர்த்தசி திதி எப்படித் தங்களுக் குப் பிரியமதாயிற்று? அதைச் சொல்ல வேண்டும் என்றார்.

சிவபெருமான் கூறலானார். "இந்த விரதம் யாவருக்குமே தர்ம சாதனமானது. நான்கு வருணத்தினரும் பிரமச்சாரிய முதலிய ஆச்சிரமத்தினரும் மங்கையரும் குழந்தைகளும் இந்த விரதத்தை அனுஷ்டிக்கலாம். மாசி மாதத்தில் வருகின்ற கிருஷ்ண பட்ச சதுர்த்தசியின் நள்ளிரவு பதினான்கு நாழிகையானது கோடி பிரமஹத்திகளை நசிக்கச் செய்யும். ஆகையால் அந்தத் தினத்தில் செய்யத்தக்க செயல்களைச் சொல்லுகின்றேன்.

"அன்று காலையில் எழுந்து மகிழ்ச்சியுடன் மானிடப்பிறவி எடுத்தல் அரிது. அந்த மானுடப் பிறவியை இந்த விரதத்தால் பயன்பட செய்வேனென்று உறுதி செய்து அயலில் இருப்பவர்களையும் இந்த விரதத்தை அனுஷ்டிக்கச் செய்ய வேண்டும். பின்பு காலைக் கடன்களை முடித்துப் புண்ணிய தீர்த்தத்தில் நீராடி நித்திய கர்மானுஷ்டானங்களை முடித்து நைமித்தியானுஷ்டானம் செய்ய வேண்டும். பின்னர் சிவாலயம் சென்று சிவபூசை முடித்து வணங்கி வாமதேவா மகாதேவா! சதாசிவா நீலகண்டா! உமது கருணையால் சிவராத்திரி விரதம் அனுஷ்டிக்க வேண்டுமென ஆவல் கொண்டேன். ஆயினும் அது விக்கினமின்றி இந்த விரதம் முடியும்வரை காமம், பொறாமை, மதுபானம் அருந்துதல், வீண் பொழுது போக்கல்,

முதலிய தீயவை விலக அருள வேண்டும் என வேண்டிக் கொண்டு, பின்னர் பூசா திரவியங்களைச் சேகரிக்க வேண்டும். பின்பு தன் இல்லத்திற்கருகே உள்ள சிவன்கோவிலுக்குச் செல்ல வேண்டும். பூசிக்கத் தக்க சிவலிங்கத்தின் தென்திசையிலே அல்லது ஆசமனம் முதலியன செய்த பின் ஆகமங்களில் கூறப்பட்டபடி பார்த்திப லிங்கத்திற்கு மந்திர பூர்வமான பூசை செய்ய வேண்டும். மந்திரம் இல்லாது பூசித்தல் கூடாது. பின்பு கீதம், நிருத்தம், வாத்தியம் இவற்றைப் பக்தியுடன் சமர்ப்பிக்க வேண்டும். இவ்வாறு முதல் சாமத்தில் லிங்கபூசை செய்ய வேண்டும்.

பின்பு, சிவபெருமான் தன்னிடம் தயை வைக்கும் படி பலவித சிவஸ் தோத்திரங்களால் தியானம் செய்தல் வேண்டும். சில மகிமைகளைப் பிறர்க்குச் சொல்ல வேண்டும். இவ்வாறு நான்கு சாமங்களிலும் நான்கு பார்த்திவ லிங்கங்கள் செய்து ஆவாஹனாதி விசர்ஜனாதி பூசை முதலியன செய்து முடித்து ஸ்தாபித லிங்கத்தை பூசை செய்வித்து நித்திரை இல்லாமல் உத்ஸவம் முதலிய சிவப்பணிவினைச் செய்துகொண்டே இரவைக் கழித்து விடியுமுன்பு மீண்டும் ஸ்தாபித லிங்கத்திற்குப் பூசை செய்வித்து ஸ்நானம் செய்து சந்தியா வந்தனம் முதலியவற்றை முடித்து, "எம்பெருமானே உம் கிருபையால் நான் விரும்பி சிவராத்திரி விரதத்தை முடித்தேன் என் சக்திக்கு ஏற்ப நான் செய்த தவத்திற்கு தேவரீர் மகிழ்ந்து தக்க பயன் அருளவேண்டும் என மலராஞ்சலி செய்து பார்வதி தேவியையும் வணங்கித் தான் செய்த பூசைப் பயனைச் சிவப்ரீதி செய்து ஜலபானம் செய்து அவ்விரத நியமத்தைவிட வேண்டும்.

## சிவராத்திரி அனுஷ்டிப்பதால் கிடைக்கும் பயன்

## வேடன் கதை

ஒரு காட்டில் மிகவும் பலம்கொண்ட வேடன் ஒருவன் இருந்தான். அவன் பாவங்கள் நீக்கிய ஒரு கதை பூர்வீகத்தில் உண்டு. அவ் வேடன் பெரும் குடும்பஸ்தன். அவன் காட்டில் வேட்டை ஆடுவதோடு வழிப்பறி செய்தும் பிழைத்து வந்தான். அவன் பிறந்த நாள் தொட்டு நற்செயல் செய்யாது கொடூரமான தீயசெயல்களையே செய்து வந்தான். அவன் பெயர் குருத்ருஹன். இவன் இவ்வாறு இருக்க, ஒரு சமயம் சிவராத்திரி சம்பவித்தது. அது அந்த வேடனுக்குத் தெரியாது. சிவராத்திரியன்று அந்த வேடனைப் பார்த்து பெற்றோரும் சகோதரரும் இன்று எப்படியாவது உணவு கொண்டு வந்து தரவேண்டுமென வற்புறுத்தினார்கள். அப்படி உணவுக்கு இறைச்சி முதலியன கொண்டுவராவிட்டால் இறந்து விடுவோம் என்றனர்.

உடனே வேடன் வில்லை எடுத்துக்கொண்டு காட்டிற்குச் சென்றான். பகல் முழுதும் வேட்டைக்கு ஒரு மிருகமும் கிடைக்கவில்லை. இது தெய்வத்தின் சித்தமாகும். மாலையாகி இருளும் சூழ்ந்துவிட்டது. உணவு இல்லாது வீட்டிற்குச் சென்றால் வீட்டில் உள்ளவர்கள் இறந்துவிடுவார்களென அஞ்சினான். அதனால் நீர் நிறைந்த குளத்தின் அருகில் இருந்த வில்வமரத்தில், தண்ணீர் நிறைந்த குடுவையுடன் ஏறி இருந்தான். தண்ணீர் விடாயினால் நீர் அருந்தவரும் விலங்கினத்தை நம்பி அதிக பசியினால் வருந்தியபடி மரத்தில் அம்பு வில்லுடன் விழித்திருந்தான்.

முதல் ஜாமத்தில் பெருந்தாகத்தோடும் பயத்தோடும் பெண்மானொன்று தண்ணீர் குடிக்க அங்கு வந்தது. அதைக் கண்டதும் வேடன் மனம் மகிழ்ந்து அம்பை வில்லில் பூட்டினான். அவனது உடல் அசைவால் அவன் கையிலிருந்த பாத்திரத்தில் இருந்து சிறிது நீரும் வில்வமரத்திலிருந்து சில வில்வமிலைகளும், வில்வமரத்தின் அடியிலிருந்த

சிவலிங்கத்தின் மீது விழுந்தமையால் முதலாம் சாமப்பூசை செய்த பலனை அடைந்தான். இதனால் அவன் இதுவரை செய்த பாவங்கள் நசுக்கப்பட்டன.

வேடன் அம்புவில்லுப் பூட்டிய சத்தம் கேட்ட பெண்மான் "ஐயோ! எங்கே போவேன்? என்ன செய்வேன்? இந்த வேடன் எப்படியும் என்னைப் பாணத்தால் கொன்றுவிடுவான். ஆயினும் ஒரு உபாயம் செய்ய வேண்டுமென யோசித்து, "வேடா! நீ என்ன செய்ய நினைத்திருக்கிறாய்?" என்று கேட்டது. அப்போது வேடன் "மானே! நான் ஒரு பெரிய குடும்பஸ்தன். என் குடும்பம் முழுவதும் உணவில்லாமல் பெரிதும் துன்பப்படுகின்றது. ஆகையால் உன்னைக் கொன்று அவர்களுக்கும் எனக்கும் உணவாக்கப் போகிறேன்" என்று கூறினான். அப்போது அந்தப் பெண்மான் பாவியாகிய வேடனைப் பார்த்து அப்படியானால் நான் புண்ணியவதியானேன். பயனற்ற இந்த உடம்பின் இறைச்சி உனக்கும் உன் குடும்பத்திற்கும் சுகம் தருமேயானால், உன் இரக்கத்தால் உண்டாகும் புண்ணியத்தை நானும் அடைவேன். இந்தப் புண்ணிய பயன் பல பிறவிகள் எடுத்தாலும் கிடைக்காது. ஆனால் எனக்குச் சில குட்டிகள் இருக்கின்றன. அவற்றைப் பாதுகாக்க என் கணவனிடமும் இளையாளிடமும் ஒப்படைத்துவிட்டு உன்னிடம் வருவேன் என்று சத்தியம் செய்தது.

வேடனும் மானின் சொல்லை ஏற்று அதன் இருப்பிடம் செல்லவிட்டான். தன் மூத்தாள் நீர் பருகச்சென்று நேரமாகியும் வராமை கண்ட இளையமான் மூத்தாளைத் தேடிச் சென்று காணாமையால் இரைச்சல் இட்டபடி குளக்கரையை அடைந்தது. அதைக் கண்ட வேடன் ஆரவாரம் செய்தான். அப்போதும் அவனுடைய உடல் அசைவால் சிறிதளவு நீரும் வில்வமிலையும் கீழிருந்த சிவலிங்கத்தின் மீது விழுந்தன. இதனால் சிவராத்திரி இரண்டாம் சாமப் பூசை நிறைவேறிய பலனை வேடன் பெற்றான். அவ்வேடன் செய்த ஆரவாரம் இளையமான் கேட்கவே அது பயந்து, "ஓ வேடா! என்ன செய்யக் கருதினை" என்று கேட்டது. அதற்கு அவ்வேடன் முன்வந்த மூத்தமானுக்குக் கூறியது போலக் கூறினான். இளையமானும் மிக மிக மகிழ்ந்து நான் புண்ணியவதியானேன். அநித்தியமான இத்தேகம் பிறரை நன்மை அடையச் செய்யும் என்றால் என் தேகம் பலனடையும். ஆயினும் இருக்கின்ற சில இளைய குட்டிகளை என்கணவனிடம் ஒப்படைத்துவிட்டு நான் மீண்டும் சத்தியமாக வருவேன் என்றது. வேடன் அதன் சபதத்தை நம்பாமல், "உன் வார்த்தைகளை நம்ப மாட்டேன். உன்னைக் கொன்றே தீருவேன்" என்று கூறினான். அதற்கு மான், "வேடனே நான் திரும்பவும் உன்னிடம் வராவிட்டால் இற்றைவரை செய்த புண்ணியங்களை ஒரு பொய் கூறியவர்கள் அடையும் நரகத்தை நானும் அடைவேன். ஆதலால் போன கையுடன் திரும்பி வருவேன்" எனச் சத்தியம் செய்ய, வேடனும் நம்பி அந்த இளைய மானையும் அதன் இருப்பிடம் செல்ல விட்டான். மானும் தண்ணீர் பருகிவிட்டு இருப்பிடம் சென்றது.

அவ்விரு மான்களுக்கும் கணவனாகிய ஆண்மான் அவ்விரு மான்களையும் தேடி குளக்கரைக்கு வந்தது. அதனைக் கண்ட வேடன் முன்பு இருமான்களின் கூற்றை நம்பி அவை இருப்பிடம் போகவிட்டேன். அதனால் ஏமாந்தேன். இப்போது வந்த இந்தக் கொழுத்த ஆண்மானைக் கொல்ல வேண்டுமெனக் கருதி வில்லின் மேல் அம்பை வைத்துச் சத்தம் (ஒலி) செய்தான். இதனால் அவனுடைய உடல் அசைவால் குடுவையில் உள்ள நீரும் சில வில்வமிலைகளும் மரத்தின் கீழிருந்த சிவலிங்கத்தின் மேல் விழுந்தன. அதனால் வேடன் சிவராத்திரி காலத்தில் மூன்றாம் சாமம் செய்த புண்ணிய பலனைப் பெற்றான். பக்தி சிறுதுளியும் இல்லாமல் பசியுடன் கண்விழித்து அறியாது அவன் செய்த மூன்று சாமப்

பூசைகளை எல்லாம்வல்ல சிவபெருமான் ஏற்று கருணையும் இரக்கமும் கொண்டார்.

வேடன் செய்த நாணொலியைக் கேட்ட ஆண்மான் வேடனை நோக்கி "என்ன செய்ய கருதினை" என்று கேட்டது, அதற்கு வேடன் முன்பு வந்த இருமான்களுக்கும் கூறியது போலவே கூறினான். அதைக் கேட்ட ஆண்மான் மிகமிக மகிழ்ந்து இப்பொழுது நான் புண்ணியன் ஆனேன். பருத்திருக்கும் இவ்வுடலை உன்னைப் போன்றவர்கள் உண்டு திருப்தி அடைவதுபற்றிப் பெரும் பிரயோசனம் உள்ளவனானேன். ஒருவன் தன் தேகத்தைப் பரமார்த்தமாகப் பிறருக்கு உபகாரம் செய்யாவிட்டால், அவன் பெற்றுள்ள பேறு வீணாகிவிடும். கெட்டிக்காரனாக இருந்தும் பிறர்க்கு உதவாதவனின் சுகங்கள் கெட்டுவிடும். ஆதலில் என் உடலால் உனக்கும் உன் குடும்பத்திற்கும் தடையின்றி திருப்தி உண்டாகும். ஆயினும் எனக்குக் குட்டிகள் இருப்பதால் அவற்றை எனது பெண்மான்களிடம் ஒப்புவித்துச் சிலநல்ல வார்த்தைகள் சொல்லிவிட்டுச் சத்தியம் தவறாது திரும்பி வருவேனென்று கூறியது. "ஓ! மிருகமே இதுவரை வந்த இருமான்களும் உன்னைப் போலவே கூறி என்னை நம்பவைத்து தப்பிச் சென்றுவிட்டவை. அவை என்னை வஞ்சித்துவிட்டன' எனக் கூறி "உன்னையும் போகவிடமாட்டேன். கொல்லுவேன்" என்றான்.

வேடன் ஆண்மானையும் அம்பால் எய்ய எத்தனித்தபோது அவனின் உடல் அசைவினால் நீரும் சில வில்வமிலைகளும் லிங்கத்தின்மீது விழுந்தன. இதனால் வேடன் சிவராத்திரியின் மூன்றாம் லிங்கபூசை செய்த பயனும் கிட்டியது. என்னை நீ தடையின்றிக் கொல்லலாம். ஆனால் இரண்டு பெண் மான்களும் சில குட்டிகளும் என்னிடம் உண்டு. அவைகளுக்கு ஆறுதலும் நீதிமொழிகளும் கூறிவிட்டு உன்னிடம் திரும்பி வருவேன் என்று சத்தியம் செய்தது. அப்போது வேடன் அதைக் கேட்டு "ஓ! மிருகமே இதுவரை இங்கு வந்த மிருகங்கள் உன்னைப் போலவே கூறி வஞ்சித்துவிட்டுப் போயின. ஒன்றேனும் திரும்ப வரவில்லை. அப்படியே நீயும் பொய்யுரைத்துப் போய்விட்டால் எனக்கும் எனது குடும்பத்திற்கும் எவ்வாறு உணவு கிடைக்கும்" என்று கூறினான்.

அப்போது ஆண்மான், "ஓ! வனராசா என்னிடம் பொய் என்பது துளியும் இல்லை. சத்தியத்தினாலேயே சராசரப் பிரமாண்டம் முழுவதும் விளங்குகின்றது. பொய் பேசுகிறவன் பூர்வீகத்திற் செய்த புண்ணியம் முழுவதையும் கண நேரத்தில் நாசப்படுத்துகின்றான். இவ்வாறு பல அறமும் நீதியும் நிறைந்த மொழிகளை ஐந்தறிவுள்ள மான் கூறியது. இவற்றைக் கேட்ட வேடன் மானின் வார்த்தைகளைப் பூரணமாக நம்பினான். மானும் நீர் அருந்திவிட்டுத் தன் இருப்பிடம் சென்றது. அப்போது பெண்மான்களிரண்டும் வந்துசேர்ந்தன. மூன்று மான்களும் தங்களுக்கு நடந்தவற்றைக் கூறி வேடனிடம் செல்ல எத்தனித்தன. அதன்படியே தம் இளம்குட்டி மான்களை மற்றைய மான்களிடம் ஒப்படைத்துவிட்டு, மூன்று மான்களும் வேடன் இருக்கும் இடத்திற்கு வந்தன. குட்டி மான்களும் எமது பெற்றோருக்கு நேர்ந்த துன்பம் எமக்கும் எப்பவோ ஒருநாள் வரத்தான் செய்யும் என்று நினைந்து அவைகளும் பெற்றோர்களுடன் இணைந்து வேடனிடம் வந்தன.

வேடன் மான்களைக் கண்டு ஆச்சரியப்பட்டான். சந்தோஷம் அடைந்தான். இவைகள் சத்திய பாசத்திற்குக் கட்டுப்பட்டு வந்தாலும் ஏதாவது சொல்லித் தப்பித்து விடுவார்கள் என நினைத்து மீண்டும் நாணொலி செய்தான். அப்போது குடுவையிலுள்ள நீரும் சில வில்வமிலைகளும் மரத்தின் கீழிருந்த சிவலிங்கத்தின் மீது வீழ்ந்தன. அதனால் அவன் சிவராத்திரி காலத்தில் நான்கு சாமப் பூசை செய்த பயனைப் பெற்றமையால் அவனுடைய

பாவங்கள் அவனை விட்டு ஒழிந்தன. இதற்குள் அந்த மூன்று மான்களும், "ஓ! வனராசா' எங்கள் மாமிசங்களை விரைவில் உனக்கு உணவாக்கிக் கொண்டு எங்களை புண்ணிய ஆத்மாவாக்க வேண்டுமெனக்" கூறின.

வேடன் அவைகளின் வார்த்தைகளைக் கேட்டு வியப்படைந்தான். அன்றைய தினம் அறியாமற் செய்த சிவபூசைப் பலத்தினால் வேடன் திவ்விய பூரணமான ஞானம் அடைந்து, "ஆகா! அறிவுக் குறைவுள்ள இந்த மிருகங்கள் தங்கள் தேகத்தால் அன்னியருக்கு உதவி செய்து புண்ணியம் அடைகின்றன. நான் மனிதப் பிறவியெடுத்து என்ன புண்ணியம் சம்பாதித்தேன், பிறரை துன்புறுத்தி என் உடலையும் என் குடும்பத்தையும் வளர்த்தேன். பிறரை வருத்தி வாழ்ந்த எனக்கு என்ன கதி கிடைக்குமோ? நான் என்ன நரக துன்பங்கள் அனுபவிக்கப் போறேனோ? இந்த உடலால் பல பாவங்களைச் சம்பாதித்து இப்போது துக்கப்படுகின்றேனே. இனிமேல் அம்புவில்லால் உயிர்களை வதைக்க மாட்டேனென்று" சபதம் செய்து அம்பு வில்லை எறிந்து விட்டு, "ஓ உத்தம மிருகங்களே! நீங்கள் பரோபகாரம் செய்து வந்தமையால் தன்யர்களாக இருக்கிறீர்கள். உங்களைக் கொல்லமாட்டேன். இனி நீங்கள் இருப்பிடம் போங்கள்" என்று கூறினான். அப்போது மிகவும் கோடூரமாக இருந்த வேடன் சிவராத்திரியென்று அறியாமல் பசியிருந்து, நான்கு சாமங்களிலும் வில்வமிலை நீரினால் செய்த பூசைக்கு சிவபெருமான் மகிழ்ந்து தரிசனம் கொடுத்து மறுபிறவியில் உயர்ந்த பதவிகளையும் அளித்து, எல்லோரும் இச் சிவராத்திரியை அனுட்டித்து ஞானவான்களாக விளங்க அருள்வரமும் கொடுத்தார்.

பின்னர் சிவபெருமானின் தரிசனம் அந்த மான்களுக்கும் குட்டிகளுக்கும் கிடைத்தது. சிவதரிசனத்தால் அம்மிருகங்கள் திவ்விய தேகம் பெற்று அங்கு வந்த விமானத்தில் ஏறிச் சுவர்க்கலோகத்தை அடைந்தன.

ஆகையால் அறியாமையாலேயே சிவராத்திரி விரதம் அனுட்டிப்பவர்கள் சிவாயுச்சியத்தை அடைவதனால் ஞானவான்களாய் பக்தியோடு அவ்விரதத்தை அனுசரிப்பவர்கள் சிவரூபத்தை அடைவார்கள் என்று சொல்ல வேண்டிய அவசியமில்லை. சுருங்கக் கூறின் எல்லா விரதங்களிலும் சிவராத்திரி விரதமே மிகமிகச் சிறந்ததாகும்.

---

கேள்வி? பதில்!

## சிரார்த்தம் போன்ற விசேட நாட்களில் உணவு மீதமானால், என்ன செய்வது?

"சிரார்த்தம்" நமது கடமை என்பதால் தர்மசாஸ்திரப்படியே செயற்பட வேண்டும். சிரார்த்த உணவை பங்காளிகளுக்கு (உறவினர்களுக்கு) பகிர்ந்தளிக்க வேண்டும். அன்றைய உணவு முன்னோர்களுக்காகவே தயாரிக்கப்பட்டது. அன்று மிச்சமாகும் உணவு நமக்குரியவை அல்ல. முன்னோருக்கு உரியது.

எனவே, அவர்களது அனுமதியைப் பெற்ற பின்னரே நாம் உணவை ஏற்க வேண்டும். மிச்சம் இருப்பதைப் பெற்றுக்கொண்டு கௌரவிக்க வேண்டும். இதையே சாஸ்திரமும் விரும்புகிறது. ஆகவே சிரார்த்தத்தில் மிஞ்சிய உணவை முன்னோரது அனுமதியுடன், பங்காளிகளுக்கு (உறவினர்களுக்கு) பகிர்ந்து கொடுத்து, முன்னோர்களது அருளைப்பெற வேண்டும்.

உ

வாரியார் பக்கம் :

# "இயமலோகம் செல்லும் வழி"



**- வாரியார் சுவாமிகள் -**

**அழலினிகர் மறலியெனை யழையாதே:**

(திருப்புகழ்)

தீவினையைச் செய்த பாவிகளை இயமதூதர்கள் வடவா முகாக்கினிபோற் கொதித்துப் பாசக்கயிற்றால் இறுக்கிக் கட்டிக் கொண்டு தமது இயமபுரம் கொண்டுபோய்த் துன்புறுத்து வார்கள். புண்ணியஞ் செய்தவர்களை இயமதூதுவர்கள் உப சரித்து, சுகமான வழியில் கொண்டு போவார்கள்.

யமலோகத்திற்கும் மனிதலோகத்திற்கும் இடையிலுள்ள வழி எண்பத்தாறாயிரம் யோசனை தூரமாகும். அவ்வழியானது காடாகவும், கோரமாகவும், நாற்புறங்களிலும் தண்ணீர் இல்லாத வெளியாகவும் இருக்கும். அந்த வழியில் மரங்களின் நிழல் கிடையாது; தண்ணீருமில்லை; களைப்படைந்தவனும் இளைத்தவனுமான மனிதன் இளைப்பாறத்தக்க வீடுகளுமில்லை. யமனுடைய கட்டளையைச் செய்கின்ற யமதூதர்களால் ஆடவரும், மகளிரும், பூமியிலுள்ள மற்றவைகளும் அந்த வழியில் பலாத்காரமாகக் கொண்டு போகப்படுகிறார்கள். எந்த மனிதர் கள் ஏழைகளுக்கு வண்டி, வாகனம் கொடுத்து உதவி செய்கிறார்களோ அந்த வாகனங்களின் மேல் அந்த வழியில் துன்பமில்லாமற் செல்கிறார்கள். குடையைத் தானம் செய்தவர்கள் குடை யினாலே வெய்யிலைத் தடுத்துக் கொண்டு செல்கிறார்கள். அன்னதானஞ் செய்தவர்கள் அந்த வழியில் அன்னத்தைப் புசித்துக் கொண்டு பசியின்றிச் செல்கிறார்கள். வஸ்திரங்களைத் தானமாகக் கொடுத்தவர்கள் வஸ்திரம் உள்ளவர்களாகவும், வஸ்திரம் கொடாதவர்கள் நிர்வாண மாகவும் செல்கிறார்கள். பொன்னைக் கொடுத்தவர்கள் அலங்கரிக்கப்பட்டவர்களாக சுகமாகச் செல்கிறார்கள். பூதானம் செய்தவர்கள் விரும்பிய எல்லாவற்றையும் அடைந்து இன்புற்று இனிதே செல்கிறார்கள். தானியங் கொடுத்த மனிதர் துன்பமின்றிச் செல்கிறார்கள். வீட்டைத் தானம் செய்கிற மனிதன் விமானங்களில் மிக்க சுகமாகச் செல்கிறான். தண்ணீரைத் தானஞ் செய்தவர்கள் தாகமில்லாதவர்களாகவும் மிக மகிழ்ந்த மனமுள்ளவர்களாகவும் செல்கிறார்கள். விளக்குதானஞ் செய்தவர்கள் பிரகாசமுள்ள வழியில் பிரகாசமுள்ள உருவத்துடன் செல்கிறார் கள். கோதானஞ் செய்தவர்கள் எல்லாப் பாவங்களாலும் விடுபட்டு சுகமாகச் செல்கிறார்கள். ஒரு மாதம் உபவாசம் இருப்பவர்கள் அன்னப்பறவை பூட்டிய விமானத்தின் மீது செல்கிறார்கள். ஆறு நாளைக்கொருமுறை உபவாசம் இருப்பவர்கள் மயில்கள் பூட்டிய விமானங்களின்மேல் செல்வார்கள். எந்த மனிதன் ஒரு வேளை சாப்பிட்டுக்கொண்டு, இடைவேளைகளில் உணவு எதுவுமின்றி மூன்று இரவுகளைக் கழிக்கிறானோ அவனுக்கு அழிவற்ற லோகங்கள் கிடைக் கின்றன. தண்ணீர்ப் பந்தல் வைத்து கோடை காலத்தில் தாகத்தால் வாடும் மக்களுக்கு தண்ணீரும் மோரும் கொடுத்து உதவிய உத்தமர்களுக்கு அந்த யமலோகத்தில் புஷ்

போதகை என்ற நதியை உண்டாக்கிக் கொடுப்பார்கள். அந்த நதியில் அவர்கள் அமிர்தம் போன்ற குளிர்ந்த தண்ணீரைக் குடித்துக்கொண்டு சுகமாயிருப்பார்கள். மாமிசங்களைத் தின்றவர்கள் யமலோகத்தில் தமது மாமிசத்தைத் தாமேயுண்டு தங்கள் உடம்பில் வடியும் உதிரத்தைக் குடித்துக் கொண்டு தீவாய் நரகத்தில் மல்லாக்கப் படுத்தவண்ணமாக பெருந்துய ரத்தை அனுபவித்துக் கொண்டிருப்பார்கள். இவற்றையெல்லாம் உணர்ந்து நாம் நல்வழிப்படுமாறு நமது பரம குரு மூர்த்தியாகிய அருணகிரிநாத சுவாமிகள் நம் மீதுள்ள பெருங்கருணையால் உபதேசிக்குமாறு காண்க.

*கிழியும் படியடற் குன்றெறிந் தோன்கவி கேட்டுருகி*
*இழியுங் கவிகற் றிடாதிருப் பீரெரி வாய்நரகக்*
*குழியுந் துயரும் விடாய்படக் கூற்றுவ னூர்க்குச் செல்லும்*
*வழியுந் துயரும் பகரீர் பகரீர் மறந்தவர்க்கே*

- அலங்காரம் (56)

---

# தவத்திரு வே. முருகேசு சுவாமிகள் அவர்களின் 13ஆம் ஆண்டு குருபூசை தினம்



**மேற்படி சுவாமி அவர்களின் குருபூசை 24.03.2010 புதன் கிழமை காலை ஸ்ரீ செல்வச்சந்நிதி ஆலயத்தில் இடம்பெற்ற விசேட அபிஷேக பூசை வழிபாடுகளுடன் ஆரம்பமாகி திரு க. ஆனந்தராசா (அன்னைதாசன்) அவர்களது இசைச் சொற்பொழிவுடன் அறுபத்து மூவர் குருபூசை நிகழ்வோடு சந்நிதியான் ஆச்சிரம மண்டபத்தில் நிறைவு பெற்றது.**

உ




"ஈதல் இசைபட வாழ்தல்" என்கிறார் வள்ளுவப் பெருந்தகை. "ஈதல் அறம்", என்கிறார் ஔவைப்பிராட்டியார், "ஐயமிட்டுண்", என ஆத்திசூடி மொழிகிறது. "உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தோரே", என மணிமேகலையில் கூறப்படுகிறது. "பசித்தோர் முகம் பார்" என்கிறார் பட்டினத்தார்.

அன்னதானம் செய்வதால் சமுதாயம் நலம் பெறமுடிகிறது. உலகில் செல்வந்தர்களும் உண்டு, வறியவர்களும் உண்டு. இது உலகின் யதார்த்த நிலை. உடையவர்கள் இல்லாதவர்களின் பசியைப் போக்க வேண்டும். வறியவர்களுக்குக் கொடுத்து அவர்களின் பசியைப் போக்குவதே ஈகை எனப்படுவது. உள்ளவர்கள், உடையவர்களுக்கு விருந்து வைப்பது, பயனை எதிர்பார்த்து கொடுக்கும் தன்மையது. அது ஈகை அன்று; அறமும் அன்று.

"தானத்தில் சிறந்தது அன்னதானம்", "பசித்தோர் வயிற்றை உணவளித்து நிரப்பு. அதுதான் மிகச் சிறந்த சேமிப்பு வங்கி" என்கிறது வள்ளுவம்.

"அற்றார் அழிபசி தீர்த்தல் அஃதொருவன்
பெற்றான் பொருள்வைப் புழி".

வறியவர்களின் அறிவை அழிக்கின்ற பசிப்பிணியைத் தீர்க்குக. அவர்களின் வயிற்றில் நிதியைச் சேமிப்புச் செய்க. அது பொருளைப் பெற்றவன், மறுமையில் வேண்டும் போது எடுத்துக்கொள்ள, பொருளைப் போட்டு வைக்கும் நம்பிக்கையான வங்கி.

"யாவர்க்குமாம் உண்ணும்போது ஒரு கைப்பிடி" இது திருமந்திரம் தரும் செய்தி. உண்ணும் உணவில் ஒரு பிடியை பசித்து வருவோருக்கு வழங்குதல் எல்லோருக்குமே இயலக்கூடிய காரியம்.

வருமானத்தில் பத்தில் ஒரு பங்கைத் தருமம் செய்யவேண்டும் என்று கூறப்படுகிறது.

இன்று தானதருமங்கள் செய்வோர் தொகை குறைந்து கொண்டே வருகின்றது. தேவைகள், ஆசைகள் பெருகிவிட்டதால் தருமம் செய்யும் மனப்போக்கும் மக்களிடையே

குறைந்துவிட்டது. இப்பிறப்பில் செய்யும் தானதருமங்கள் மறுபிறவிகளிலும் உதவும். அவரவர் புண்ணிய பாவங்களுக்குத் தக்கபடிதான் பிறவிகள் தோறும் இன்பதுன்பங்கள் அமைகின்றன. இதுவே கன்மவிதியாகும். கன்மவிதிக்கேற்பவே வாழ்க்கைப் போக்கும் அமையும் என்பது சைவநெறியின் நிலைப்பாடு. இப்பிறவியில் நாம் செய்கின்ற தான தர்மங்கள் எங்கள் மறுபிறவியிலும் துணை வந்து காப்பாற்றும். இவ்வுண்மையை நாம் உணர வேண்டும்.

சமய குரவர்கள், ஞானிகள், மகான்கள் - இவர்களது பிறந்த தினங்களிலும், நினைவு தினங்களிலும் அன்னதானம் இடம்பெற்று வருகிறது. ஆலயங்களில், மகோற்சவ காலங்களிலும், விசேட தினங்களிலும் அன்னதானம் செய்யப்படுகிறது. அன்னசத்திரங்கள், குருபூசை மடங்கள், அன்னதான மடங்கள், ஆலயங்களுக்கு அருகாமையிலும், சில ஊர்களிலும் அமைக்கப்பட்டு அன்னதானம் நடைபெற்றமைக்கு சான்றுகள் உள்ளன. தாக சாந்திசெய்வதற்கெனத் தண்ணீர்ப் பந்தல்கள் இருந்தன. பசி, தாகம் என்பவற்றைப் போக்குதல் புண்ணியகாரியம் என உணர்ந்தவர்கள் மடங்கள், சத்திரங்கள், ஆலயங்களில் அன்னதானம், தாகசாந்தி என்பவற்றை செய்து வந்தார்கள். பின்னர் சில காலம் தான தர்மங்களில் ஈடுபடுவோர் தொகை குறைந்து வந்தது.

ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் வீடுகள் தோறும் பிடியரிசி பெற்றுக் கஞ்சித் தொட்டித் தருமம் நடத்தினார்.

இன்று, அன்னதானத்தின் தேவை உணரப்பட்டு வருகிறது. தற்காலத்தில் சூழ்நிலை காரணமாக, செல்வர்களும் ஏழைகளாகி வருவதைக் காண்கிறோம். அகதிகள், ஆதரவற்றவர்கள் தொகை பெருகிவருகின்றது. எனவே, இத்தகைய கடவுளின் குழந்தைகளை ஆதரிக்க வேண்டிய கடப்பாடு எமக்கு உண்டு. அன்னதானத்துடன் ஆடைதானமும் அவசியமாக உள்ளது. சைவநெறி அன்னதானம் செய்வதை ஊக்குவிக்கிறது. ஞானசம்பந்தப் பெருமானும், அப்பரடிகளும் திருவீழிமிழலையில் இறைவனிடம் படிக்காசு பெற்று பஞ்சத்தால் வாடிய மக்களுக்கு உணவளித்த வரலாறு சைவத்தின் சமூக நோக்குக்குச் சான்று பகர்கின்றது.

இன்றைய சூழ்நிலையில் அன்னதானம், ஆடைதானம் என்பவற்றின் முக்கியத்துவத்தையும் தேவையையும் நாம் உணர்ந்து கொள்ளுதல் வேண்டும். அப்போதுதான், உண்மைச் சைவர்களாக நாம் விளங்க முடியும்.

அன்பர்களே, உங்கள் பிறந்த நாள்; திருமணநாள்; உங்கள் பிள்ளைகளின் பிறந்த நாட்கள்; உங்கள் தாய், தந்தையர் மறைந்த நினைவுநாள்; மற்றும் நல்ல நாள் பெருநாள்களிலும் அனாதை இல்லங்கள், ஆதரவற்றோர் இல்லங்கள், முதியோர் இல்லங்கள் மற்றும் அகதி முகாம்கள் ஆகியவற்றில் வதிவோர்களுக்கு முடிந்த அளவுக்கு அன்னதானம் செய்யுங்கள், ஆடைதானம் செய்யுங்கள், வேறு தொண்டுகள் செய்யுங்கள், மருத்துவ சேவை செய்யுங்கள். சிரமதானம் செய்யுங்கள். அதனால் மாபெரும் புண்ணியம் உண்டு. உங்கள் வாழ்வும் வளம் பெறும்.

க.பொ.த. (உயர்தர) மாணவரின் மேலதிக வாசிப்பிற்குரியது

# நாலாயிரம் திவ்விய பிரபந்தமும் பெரியாழ்வாரும்

- ச.லலீசன் அவர்கள் -

## நாலாயிரம் திவ்விய பிரபந்தம்

ஓர் அறிமுகம்



ஞானச்சுடர் விளக்கேற்றி நாரணர்க்குச் சொல் மாலை சூட்டிய ஆழ்வார் பெருமக்கள் பன்னிருவர் ஆவர். பொய்கை ஆழ்வார், பூதத்தாழ்வார், பேயாழ்வார், திருமழிசையாழ்வார், நம்மாழ்வார், குலசேகர ஆழ்வார், தொண்டரடிப்பொடியாழ்வார், மதுர கவியாழ்வார், பெரியாழ்வார், ஆண்டாள், திருமங்கையாழ்வார், திருப்பாணாழ்வார், ஆகியோரே இப்பன்னிருவருமாம். இவர்கள் திருமாலைப் பாட்டுடைத் தலைவனாகக் கொண்டு பாடியதேன் தமிழ்ப் பாடல்களே நாலாயிரம் திவ்வியப் பிரபந்தம் எனப் போற்றப்படுகின்றன. ஆழ்வார்களது காலம் கி.பி. ஆறாம் நூற்றாண்டுக்கும் ஒன்பதாம் நூற்றாண்டுக்கும் இடைப்பட்டதாகும். நாலாயிரம் திவ்விய பிரபந்தத்தை நாதமுனிகள் தொகுத்தார்.

நாலாயிரம் திவ்விய பிரபந்தத்தில் உள்ள பாடல்களின் எண்ணிக்கை 3892 ஆகும். (பாடல் எண்ணிக்கை குறித்துக் கருத்து வேறுபாடுகளும் உண்டு. 3776 என்போரும் உளர்.) பிற்காலத்தில், இராமானுஜரின் சமகாலத்தவரான திருவரங்கத்தமுதனார் பாடிய இராமானுஜ நூற்றந்தாதியின் 108 பாடல்களையும் சேர்த்து நாலாயிரம் என்ற எண்ணிக்கையைச் சமன் செய்தனர்.

திருமாலை முழுமுதற் கடவுளாகக் கொண்டு வழிபடுவோர் வைணவர் ஆவர். இவர்கள் கொள்ளும் பக்தி நெறி பிரபக்தி அல்லது பரபக்தி என அழைக்கப்படும். வைணவ நெறியில் அவதாரக் கோட்பாட்டுக்கு அதிக முக்கியத்துவம் உண்டு. (அவதாரம் - கீழ் இறங்குதல்) கிணற்றில் விழுந்தவனைத் தூக்க வெளியே நிற்பவனும் கிணற்றுள் விழுந்து அவ

னுடன் அனுபவங்களைச் சந்தித்துக் கரையேற்றுவதற்கு இக்கோட்பாட்டை ஒப்பிட்டுப் பார்ப்பர். அடியவருடைய இன்ப துன்பங்களில் பங்கேற்பவராகத் திருமாலைக் கண்டு தெளிந்து அவருடைய பெருமைகளை வெளிப்படுத்தும் வகையில் ஆழ்வார்கள் பாடல்களைப் பாடினர்.

திருமாலை மிகவும் உரிமையோடு போற்றியும் நிந்தாஸ்துதி செய்தும் ஆழ்வார்கள் பக்திப் பாடல்களைப் பாடினர். சைவ நாயன்மார்கள் சிவன் மீது காட்டிய உறவு உரிமையை விட ஆழ்வார்கள் திருமாலிடம் உரிமையைச் சற்று அதிகமாகவே காட்டினர். பெரியாழ்வார் தம்மை யசோதையாகவும் பரம்பொருளாகிய திருமாலை மகனாகவும் பாவனை செய்து பாடிய பாடல்கள் பெரியாழ்வார் திருமொழி ஆகும்.

தன்னைத் தாயாகவும் இறைவனைப் பிள்ளையாகவும் கருதி வழிபடும் மார்க்கத்தை வைணவர்கள் வாத்ஸல்ய மார்க்கம் என்றும் குறிப்பர். இது சைவர்களின் சற்புத்திர மார்க்கத்துடன் ஒப்பிடக்கூடியது.

**பெரியாழ்வார்**

பாண்டி நாட்டில் ஸ்ரீ வில்லிபுத்தூரில் கலியுகம் உருத்ரோதன வருடம் ஆனி மாதம் சுவாதி நட்சத்திரத்தில் வேதியர் குலத்தில் பெரியாழ்வார் அவதரித்தார். கருடனின் அம்சமாக இவர் கருதப்படுகின்றார். இவரது தந்தை முகுந்தாச்சாரியார். தாய் பதுமையார். இளமைத் திருநாமம் விஷ்ணுசித்தர் என்பதாகும். பன்னிரு ஆழ்வார்களுள் ஒருவராகிய ஸ்ரீ ஆண்டாள், பெரியாழ்வாருடைய புதல்வி என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கதாகும்.

பெரியாழ்வாரது காலம் கி.பி. 9 ஆம் நூற்றாண்டு என்பர். திருமாலுக்கு மலர்மாலை சாத்தி வழங்கவென்று திருநந்தவனம் அமைத்து அந்தப் பணியே தனது குறிக்கோளென வாழ்ந்தவர் பெரியாழ்வார். இவரது காலத்தில் பாண்டி நாட்டை வல்லப தேவன் என்ற பாண்டிய அரசன் ஆண்டு வந்தான். அவன் ஒரு நாள் இரவு நகரச் சோதனை செய்து வரும்போது ஒரு வீட்டுத் திண்ணையிலே அந்தணன் ஒருவன் படுத்திருப்பதைக் கண்டான். அவனை யாரென விசாரித்தான். அதற்கு அவன், தான் கங்கையில் நீராடி வருவதாகத் தெரிவித்தான்.

"அப்படியா? சரி, எனக்கொரு பாடல் கூறுக" என்றான் அரசன்.

அதற்கு அவன் **"மழைக்காலத்திற்குத் தேவையானதை மற்றைய எட்டு மாதங்களிலும் தேடிப் பெறுக; இரவுக்கு வேண்டியதைப் பகலில் பெறுக; முதுமைக்கு வேண்டியதை இளமையில் பெறுக; மறுமைக்கு வேண்டியதை இம்மையில் தேடுக"** என்று பொருள்படும்படியாக வடமொழிச் சுலோகமொன்றைக் கூறினான்.

இதைக் கேட்ட அரசன் தன்னுள் ஒரு புத்துணர்வு ஏற்பட்டிருப்பதாக உணர்ந்தான். மறுமைக்கு வேண்டியதை இம்மையில் தேட வேண்டும் என உறுதி கொண்டான். தன் அரசவைக் குருவாக விளங்கிய செல்வநம்பியை அழைத்து "மறுமைக்குத் தேட வேண்டியவை யாவை?" என வினவினான்.

கல்வியிற் சிறந்த வல்லுநர்களே இவ்வினாவுக்குச் சரியான விடை தருவர் எனக்

கூறிய செல்வ நம்பி சரியான விடை கூறுபவருக்குப் பொற்கிழி பரிசாக அளிக்குமாறும் வழிப்படுத்தினான்.

செல்வநம்பியின் ஆலோசனை ஏற்றுக்கொள்ளப்பட்டது. விடயம் எல்லா இடத்திற்கும் அறிவிக்கப்பட்டது. பொற்கிழி மீதிருந்த கவர்ச்சி காரணமாகப் பன்னாட்டு அறிஞர்கள் பாண்டி நாட்டிற்கு வந்து திரண்டனர்.

விஷ்ணுசித்தருக்கு (பெரியாழ்வாருக்கு) அருள் சுரக்க எண்ணிய திருமால், அவரது கனவில் தோன்றி "நீர் போய் பொற்கிழியை அறுத்துக் கொண்டுவாரும்" என்றார். அதற்கு ஆழ்வார்,"சாத்திர ஞானம் இல்லாத அடியேன் எவ்வாறு இதனைச் செய்வது?" என்றார். "இதுகுறித்து உமக்கு ஏன் கவலை? எல்லாம் நான் பார்த்துக் கொள்கிறேன்" எனக் கனவில் விடை பகன்றார் திருமால்.

அரசவை நோக்கிச் சென்ற விஷ்ணுசித்தரை அரசனும் அரசவைக் குருவும் வரவேற்றனர். உரிய ஆசனத்தில் அமர்த்தினர். மறுமைக்குரிய நலங்களைப் பெறுவதற்கு ஒரே வழி திருமாலை முழு முதற்கடவுளாக வழிபடுவதே" என எடுத்துரைத்தார் ஆழ்வார். அப்போது கட்டி வைக்கப்பட்டிருந்த பொற்கிழியும் பெரியாழ்வாரை நோக்கித் தாழ்ந்து வந்தது. ஆழ்வார் பொற்கிழியைப் பெற்றுக் கொண்டார்.

அரசன் முதலானோர் பெரியாழ்வாரைப் பணிந்து வணங்கி யானை மீது ஏற்றி 'பட்டர் பிரான்' என்ற சிறப்புப் பெயர் வழங்கி நகர் வலம் வந்தனர். அதன் போது திருமால் தம் பிராட்டியாரோடு கருட வாகனத்தில் அமர்ந்தபடி காட்சி நல்கினார். இறைவனது திருக்காட்சியை எல்லோரும் கண்ணாரக் கண்டனர். எல்லோரும் இரசித்துப் பார்ப்பதால் இறைவனுக்கு கண்ணூறு ஏற்பட்டு விடுமோ எனப் பெரியாழ்வாரது ஏழை நெஞ்சம் நினைத்தது. உடனே இறைவனை வாழ்த்திப் பல்லாண்டு பாடினார்.

*பல்லாண்டு பல்லாண்டு பல்லாயிரத் தாண்டு*
*பலகோடி நூறா யிரம்*
*மல்லாண்ட திண்தோள் மணிவண் ணாஉன்*
*சேவடி செவ்விதிருக் காப்பு*

இவ்வாறாகத் தொடங்கிப் 12 பாசுரங்களில் 'திருப்பல்லாண்டை' அமைத்தார். பொற்கிழியைத் திருமால் கோவிலுக்கு அர்ப்பணித்து அழகிய கோபுரம் எழுப்பினார். பழையபடி நந்தவனத் திருத்தொண்டுக்கு மீண்டார்.

கண்ணன் மீது மிகுந்த பக்தி கொண்டு இவர் பாடிய 461 பாசுரங்கள் பெரியாழ்வார் திருமொழி எனப் போற்றப்படுகின்றன.

பெரியாழ்வாரால் மங்களாசாசனம் (பாடல் பெற்ற) செய்யப்பெற்ற திருத்தலங்களது எண்ணிக்கை 19 ஆகும்.

பெரியாழ்வார் திருமொழி பற்றியும் அதில் "நீராட்டல்' என்னும் தலைப்பில் அமைந்த பாடல்களுடைய சிறப்புக்கள் பற்றியும் அடுத்த இதழில் காண்போம்.

# செய்திச் சிதறல்கள்

- நல்லை திருஞானசம்பந்தர் ஆதீன ஸ்தாபகரான நல்லைக்குருமணி ஸ்ரீலஸ்ரீ சுவாமிநாத தேசிக ஞானசம்பந்தபராமாச்சார்ய சுவாமிகளின் 29ஆம் குருபூசைத் தினம் 23.03.2010 அன்று செவ்வாய்க்கிழமை ஆதீன குருமூர்த்தி ஆலயத்தில் விசேட அபிஷேக ஆராதனைகள், பூசை வழிபாடுகளுடன் நடைபெற்றது.

- திருமங்கலக்குடி அருள்தரு மங்கள நாயகி உடனாகிய அருள்மிகு பிராணநாத சுவாமி திருக்கோயில் பங்குனி உத்தரத்திருவிழா 19.03.2010 தொடக்கம் 29.03.2010 வரை இடம்பெறவுள்ளது.

- திருவாவடுதுறை ஆதீனத்தில் ஸ்ரீஸ்கந்த பரம்பரை சூரியனார் கோயில் ஆதீனம், 2ஆவது குருமூர்த்திகள் அருள்திருவீழிச்சிவாக்கிர யோகிகள் குருபூசை நிகழ்ச்சிகள் 19.03.2010 இடம்பெற்றது.

- உலக புவிதினத்தை முன்னிட்டு நல்லூர் பிரதேச செயலக காணி பயன்பாட்டுத் திட்டமிடல் பிரிவு "கோள் வெப்பமாதலும், காலநிலை மாற்றமும் நீரின் முக்கியத்துவம் சுற்றுச் சூழலை பாதுகாப்போம்" எனும் கருப்பொருளில் விழிப்புணர்வு போட்டிகளை நடாத்தவுள்ளது. அதற்கான ஆக்கங்களை 10.04.2010 முன்னர் அனுப்பி வைக்குமாறு கேட்டுள்ளது.

- தேரடி செல்லப்பா சுவாமிகளின் 95ஆவது குருபூசை தினம் 18.03.2010 வியாழக்கிழமை அன்று நல்லூரில் அமைந்துள்ள செல்லப்பா சுவாமிகளின் நினைவாலயத்தில் நடைபெற்றது.

- தவத்திரு வே. முருகேசு சுவாமிகளின் நினைவாக தொண்டைமானாறு ஸ்ரீ செல்வச்சந்நிதி ஆலயத்தில் வருடந்தோறும் நடைபெற்றுவரும் கும்பாபிஷேக தினம் 19.03.2010 வெள்ளிக்கிழமை ஆலயத்தில் வெகுவிமரிசையாக இடம்பெற்றது.

உ

பங்குனிமாதப் பூரணையன்று சுவாமிகளின் குருபூசை

# செம்மைவழி காட்டிய -------

# ----செல்லத்துரைசுவாமிகள்

- நீர்வை தி.மயூரகிரி அவர்கள் -

ஒரு சில கசப்பான சம்பவங்களையடுத்து இந்துக் குருமார்கள், இந்துத்துறவிகள் மீது கண்டபடி குற்றம் சுமத்த இந்துவிரோதிகளும் மதமாற்றச் சக்திகளும் மதங்களுக்கு எதிரான நாத்தீகவாதிகள் சிலரும் வருமானத்தையே ஒரே குறிக்கோளாகக் கொண்ட மீடியாக்களைச் சேர்ந்த சிலரும் தமிழகத்திலும் இலங்கையிலும் முனைப்போடு ஈடுபட்டு வருகின்றனர்

குறித்த ஒரு சிலர் இந்துத்துறவி வேடம் பூண்டு மக்களை ஏமாற்றியிருக்கலாம். ஆனால் காலகாலமாக நம்மிடையே உயரிய துறவிகள் அதிபரிசுத்தராக உலவியிருக்கிறார்கள். இன்றைக்கும் அவ்வாறான பல துறவற உத்தமர்கள் இந்த உலகில் வாழ்ந்து வருகிறார்கள் என்பதை விவரிக்க வேண்டிய அத்தியாவசியம் இப்போது ஏற்பட்டுள்ளது.

இந்த வகையில் மிக அண்மைக்காலம் வரை இப்பூவுலகில் வாழ்ந்த 'சிவத்தொண்டன் ஸ்ரீமத் செல்லத்துரை' சுவாமிகள் முக்கியமாகக் குறிக்கப்படவேண்டியவர். அன்னாருடைய நான்காவது ஆண்டு குருபூஜைத் திருநாள் எதிர்வரும் பங்குனிப்பூரணையில் அனுட்டிக்கப்படும் நிலையில் சுவாமிகளைப் பற்றிச் சிந்திப்பது பொருத்தமானதாகவிருக்கும் எனக் கருதுகிறோம்.

நீர்வேலியூரில் வரலாற்றுச்சிறப்புடைய அரசகேசரிப் பெருமான் கோவிற் சூழலில் 1914இல் 'ஆனந்தம்பிள்ளை' என்ற இயற்பெயருடன் பிறந்த சுவாமிகள் கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரியில் கல்விகற்று ஆங்கிலம், தமிழ்,சமஸ்கிருதம், சிங்களம் ஆகிய மொழிகளிலும் பயிற்சி பெற்றதுடன் கோப்பாய் ஆசிரிய பயிற்சிக்கலாசாலையில் ஆசிரிய பயிற்சியும் பெற்று தென்னிலங்கையில் ஆசிரியப்பணி புரிந்தார்.

நல்லாசிரியனாயிருந்த சுவாமிகள் பிரம்மச்சரியத்தையும் உறுதியோடு பேணிவந்தார். இந்த நிலையிலேயே யோகர் சுவாமியை ஒருமுறை கொழும்பில் தரிசித்தார். அப்போது யோகர் பெருமான் நம் செல்லத்துரை(சுவாமிகள்) அவர்களிடம் 'நீ உன்னை அறிந்திருப்பதை விட நான் உன்னை நன்கறிவேன்' ( I know you man better than you know you) என்று ஆங்கிலத்தில் குறிப்பிட்டார். அப்போது செல்லத்துரை தமக்கிருக்கும் துறவற நாட்டத்தை வெளிப்படுத்தினார். யோகரோ 'தம்பிமாரே இப்போது உத்தியோகத்தை மாத்திரம் விட்டு விடாதீர்' என்று கண்டிப்பாக அறிவுறுத்தி ஆசீர்வதித்தார். அப்போது செல்லத்துரை அவர்கள் நுவரெலியாவில் இறாகலையில் ஒரு கல்லூரி முதல்வராக இருந்தார்.

எனினும் தொடர்ந்தும் செல்லத்துரை அவர்கள் விடுமுறை நாட்களில் யோகர் சுவாமிகளிடம் ஆன்மீக சாதனை பெறுவதும் கதிரமலையிலும் செல்வச்சந்நிதியிலும் நல்லூரிலும் தியானம் செய்வதும் தொடர்ந்தது. இக்காலத்தில் பல அரிய ஆன்மீக அனுபவங்களை செல்லத்துரை சுவாமிகள் பெற்றிருக்கிறார்.

செல்வச்சந்நிதியில் ஒரு நாள் தியானம் செய்த போது செல்லத்துரை சுவாமி அவர்களுக்கு 'கடவுள் வழிபாடு என்பது சில வேளை முன்னோர் வழிவந்த மூடப்பழக்கமா? கற்பனை தானா?' என்ற எண்ணம் உருவாயிற்று. இந்த வேளையில் ஒரு மனிதன் அருகில் தாங்கொணாத வலியால் துடிதுடித்து விழுந்து அழுது புலம்பிக்கொண்டிருந்தது தெரிந்தது. உடனே அவரது வலியை இப்பொழுதே போக்க முடியுமாகில் அது கடவுள் உண்மைக்கு கண்கண்ட சாட்சியாயிருக்கும் என்ற எண்ணப்பாங்குடன் சந்நிதியானுடைய தீர்த்தக்குளத்தில் கைப்பிடி நீரெடுத்து அந்த நோயாளியருகில் சென்று குடிக்குமாறு கொடுத்தார். சற்று நேரத்தில் அந்த நோயாளி செல்லத்துரை சுவாமிகளின் காலில் விழுந்து 'தான் நீண்ட காலமாய் தீராத வயிற்று வலியால் மிகுந்த அவதிப்பட்டதாயும். தங்கள் அருளால் இப்போது பூரணசுகம் பெற்றேன்' என்றும் போற்றினார். இது போல சந்நிதிப் பெருமானுடைய திருத்தலத்தில் இருந்த காலத்தில் பல ஆத்மீக அனுபவங்கள் செல்லத்துரை சுவாமிக்கு கிட்டிற்று.



இறை இன்பத்தில் அதிக நாட்டங் கொண்ட சுவாமிகள் பாரதம் முழுவதும் யாத்திரை செய்தார். சிதம்பரத்தில் சிவகாமி அம்பாள் ஆலயத்துள் பிள்ளையார் சந்நிதியில் வழிபாடாற்றியபோது ஆச்சரியமாக ஒரு பெண் விநாயகருக்குப் பூஜை செய்து மோதகப்பிரசாதமும் வழங்கி மறைந்தார். (சிதம்பரத்தில் பெண்கள் கருவறையுள் செல்வதில்லை என்பதுடன் பூஜை செய்வதுமில்லை) தனக்கு அவ்வாறு அருளியவர் சிவகாமித் தாயாரே என்று அறிந்து மனம் நெகிழ்ந்தார்.

ரமணாச்சிரமத்தில் சில காலம் தங்கியிருந்து பின்னர் பனி

நிறை திருமலையான இமய மலைச்சாரலில் தவம் செய்யச் சென்றார். அங்கே ஒரு நாள் நேரடி யாகக் காட்சியளித்த யோகர் சுவாமிகள் 'come home immediately' (உடனே வீட்டிற்கு வா) என்று ஆணையிட்டு மறைந்தார். இதனால் யோககுரு நாதன் கட்டளைப்படி யாழ்ப்பாணம் வந்து யோகர்சுவாமிகளைச் சந்திக்க கொழும்புத்துறை சென்றார். இவரின் வரவை எதிர்பார்த்து இருந்த யோகர் "சிவத்தொண்ட னுக்கு நல்ல ஆள்" என்று கூறி பேரன்போடு வரவேற்றார்.

இக்காலத்தில் யோகர் பெருமானின் திருமுன்றலில் செல்லத்துரை சுவாமிகள் ஆன்மீகத்தில் வளர்ந்து வந்தார்.

*'நல்ல குருநாதன் நம்மை வருத்துவது கொல்லவல்ல கொல்லவல்ல*

*பொல்லா வினைகள் போக்குதற்கே'*

என்பதையுணர்ந்து கல்லூரி அதிபராய் சமூகமதிப்புப் பெற்றிருந்த சுவாமிகள், யோகர் சுவாமிகளின் கட்டளையை தலை தாங்கி சிறுதுண்டு இடையுடுத்தி வீதியில் பிச்சை ஏற்கவும் தயங்காத குருபக்தி மிக்கவராய் விளங்கினார்.

சிலகாலத்தில் செல்லத்துரை சுவாமிகள் பற்றும் பாசமும் பந்தமும் அகற்றி 'ஸந்நியாச தீட்சை' அளித்த யோகர், யாழ்ப்பாணத்திலும் மட்டக்களப்புச் செங்கலடியிலும் உள்ள சிவத்தொண்டர் நிலையங்களுக்குப் பொறுப்பாகவிருந்து பார்த்துக் கொள்ளுமாறு உத்தர விட்டார்.

இக்காலத்தில் செல்லத்துரை சுவாமிகள் நிலையத்திலிருந்து மாதம் தோறும் வெளியாகிற 'சிவத்தொண்டன்' இதழுக்கு ஆங்கிலத்திலும் தமிழிலும் அரிய பெரிய கட்டுரைகள் எழுதி வந்ததுடன் மொழிபெயர்ப்பு முதலாய பணிகளிலும் ஈடுபட்டார். அரசருள் அரசராய் ஆண்டியுள் ஆண்டியாய் (a king of the king beggar of begger) வாழ்ந்து காட்டினார்.

சமயப்பணிகளுக்கு அப்பால் சமூகப்பணிகளிலும் ஈடுபட்டு வந்த சுவாமிகள் மிகுந்த எளிமையானவர். புகழுரையை சிறிதும் விரும்பாதவர். இவரிடம் பல ஸ்ரீராமகிருஷ்ணமிஷன் துறவியரும் கிறிஸ்தவ அருட்தந்தையர்களும் மிக மரியாதையோடு வந்து ஆன்மீகம் பற்றிப் பேசி மகிழ்வர்.

தன்னைப் பற்றி பிரபலம் செய்ய இவர் எவருக்கும் அனுமதி தரவில்லை. 2002 இலிருந்து யாழ்ப்பாண சிவதொண்டன் நிலையத்திலேயே நிலையாய் அமர்ந்து ஆன்மீக அலை பரப்பிய இவ்வருள் முனிவர் தமது 92ஆவது வயதில் (2006இல்) சிறிது சுகவீனமுற்றார். தான் சமாதியடைய முன்னைய நாள் சுகவீனமுற்று படுக்கையிலிருந்த போதும் தன்னரு கிலிருந்தோரிடம் சிரித்தவாறே 'பக்கத்திலிருந்து எதால உயிர் போகுது எண்டு பாக்க வேணும்' என்று நகைச்சுவையோடு மரணத்தை விளையாட்டாகக் கருதிக் கூறினார்.

பங்குனி மாதம் முழுமதிநாளில் அத்தத் திருநாளில் சமாதிநிலை பெற்றார் சுவாமிகள். எனினும் இன்னும் சாவா மூவாச் சிங்கமாக சற்குருவாய் நின்று எல்லோரையும் நல்லாற்றுப்படுத்தி அனுக்கிரகிக்கிறார்.

உ

(தொடர்ச்சி...



# சந்நிதியான்

திரு. ந. அரியரத்தினம் அவர்கள்

பெயர் சு. சங்கரலிங்கம் வயது 59. சராசரி மனிதனுடைய உயரத்தைவிட சிறிது கட்டையான தோற்றம். தடித்த மீசை கறுத்த உடல் எந்த நேரமும் சாரம் அணிந்திருப்பார். அதே நேரம் இடுப்பில் அகலமான இடுப்புப்பட்டி கட்டியிருப்பார். பார்ப்பதற்கு சிறைச்சாலைப் பாதுகாப்பு பிரிவிலோ, அல்லது பொலிஸ் பிரிவிலோ சேவையாற்றி இருக்கக்கூடும் என்பது போன்ற சாயல் எப்பொழுதும் அவரிடம் தென்படும்.

ஆச்சிரமத்தில் தொண்டு செய்பவர்களில் ஒருவராக இவரும் கடமையாற்றிக் கொண்டிருந்தார். ஆச்சிரமத்தைக் கூட்டிப் பெருக்கிச் சுத்தமாக வைத்திருத்தல், அன்னதானச் செயற்பாட்டில் அடியார்களுக்கு அன்னதானம் வழங்கும் நேரம் குடிப்பதற்கு தண்ணீர் வசதிகளை செய்தல் இவற்றைவிட ஆச்சிரமத்தின் சுவாமிகள் அவ்வப்பொழுது சொல்லும் வேலைகளை செயற்படுத்துதல் என்பன பொதுவாக இவரின் பணிகளாகும். இவருக்கு இவ்வளவுதான் சம்பளம் என்று இல்லாவிட்டாலும் அவரது குடும்ப வாழ்க்கையை நடாத்துவதற்கு ஓரளவிற்கேனும் போதுமான கொடுப்பனவை தினமும் சுவாமிகள் வழங்கி வருவார்கள்.

திரு. சங்கரலிங்கம் அவர்கள் இவ்வாறு தனது காலத்தை போக்கிக் கொண் டிருக்கும் வேளையில் ஒருநாள் ஆச்சிரமத்தின் சுவாமிகளுடன் எதிர்பாராத விதமாக ஒரு சிறிய மனக்கசப்பு ஏற்பட வேண்டிய சூழ்நிலை இடம்பெற்றுவிட்டது. இவ்வாறு மனக்கசப்பு

ஏற்பட்டதினால் திரு. சங்கரலிங்கம் அவர்கள் ஆச்சிரமத்தில் தொழிலாகவும் தொண்டா கவும் செய்து கொண்டிருந்த அந்த செயற்பாட்டை நிறுத்திக் கொண்டார்கள். கட்டிட வேலை தொடர்பாக மேசன் தொழில், தச்சுவேலை உட்பட பல்வேறு வேலைகளைச் செய்யும் ஆற்றலுடைய சங்கரலிங்கம் அவர்கள் மேசன் தொழிலுக்குச் சென்று தனது சீவியத்தை நடத்துவதற்கு தீர்மானித்தார்கள். கடந்த காலங்களில் மூலப்பொருள் தட்டுப்பாடு, சுற்றாடல் நடமாட்டத்தில் உள்ள நெருக்கடி போன்றவற்றால் யாழ். குடாநாட்டு தொழிலா ளர்கள் எவ்வளவு கஷ்டங்களை எதிர் நோக்கினார்களோ அவ்வளவு கஷ்டங்களையும் திரு. சங்கரலிங்கம் அவர்களும் எதிர்நோக்க வேண்டியிருந்தது. ஆனாலும் அவர்கள் கிடைக்கின்ற சந்தர்ப்பங்களைப் பயன்படுத்தி தனது வேலையை திறமையுடனும் உற் சாகத்துடனும் செய்து வந்ததினால் நெருக்கடியான சூழ்நிலையிலும் ஓரளவு நிம்மதியுடன் வாழ்ந்து வந்தார்கள்.

இவ்வாறு வேலைத் தளத்தில் உற்சாகத்துடன் மேசன் வேலை செய்து கொண்டிருக் கும்பொழுது ஒருநாள் சங்கரலிங்கம் அவர்களுடைய வலது காலில் திடீரென வேதனை ஏற்பட்டு அதனை இயல்பாக நிமிர்த்தி நடக்கமுடியாத ஒரு தன்மையை உணர்ந்து கொண்டார் கள். இவ்வாறு ஏற்பட்ட அந்த வேதனை குறுகிய நேரத்திற்குள் சிறிது சிறிதாக அதிகரித்து அவர் தன்னுடைய வலது காலினை முழுங்காலுக்கு கீழ் அசைக்க முடியாத சூழ்நிலை ஏற்பட்டது. தொண்டைமானாறு வல்லை வீதியில் ஒரு வீட்டில் உற்சாகமாக மேசன் வேலை செய்து கொண்டிருந்த அவரால் அந்த வேலையை தொடர்ந்து செய்யமுடியாத நிலை ஏற்பட்டுவிட்டது. சங்கரலிங்கம் அவர்கள் தனது வேலையை ஏனையவர்களிடம் கையளித்து விட்டு மிகவும் கஷ்டப்பட்டு ஒரு காலால் துவிச்சக்கரவண்டியை மெதுவாகச் செலுத்தியபடி வீடு வந்து சேர்ந்தார்கள். இவ்வாறு வீட்டுவாசல் வரை அவர் எப்படியோ வந்து சேர்ந்துவிட்டா லும் ஒரு கால் செயற்படாத நிலையில் சைக்கிளை விட்டு இறங்க முடியாது தடுமாற்ற மடைந்து அப்படியே வீட்டு வாசலில் சைக்கிளுடன் விழுந்து விட்டார்கள். இவ்வாறு சைக்கி ளுடன் சங்கரலிங்கம் அவர்கள் விழுந்து கஷ்டப்படுவதை அவதானித்த அயலவர்கள் ஓடிச்சென்று அவரை வீட்டிற்குள் தூக்கிச்சென்று அவரது துணைவியார் வெளியில் சென்று விட்ட நிலையிலும் வேண்டிய முதலுதவிகளை அவருக்கு வழங்கி அவரை ஆறுதல்ப்படுத் தினார்கள்.

ஒரு சில நாட்களாக காலுக்குள் நோ இருப்பதாகக் கூறிக்கொண்டிருந்த கணவன் இவ்வாறு திடீரென மோசமான நிலைக்கு உள்ளானதால் இவரது துணைவியார் மிகுந்த வேதனையும் பதட்டமுமடைந்தார்கள். தனது கணவனை உடனடியாக யாழ்ப்பாணம் தனியார் வைத்தியசாலை ஒன்றுக்கு அழைத்துச் சென்று அங்கே வைத்தியம் செய்தார்கள். ஆனாலும் மடக்கமுடியாதிருந்த அவரது கால் தொடர்பான நிலமையில் குறிப்பிடக்கூடிய பெரிய முன்னேற்றம் ஏதும் ஏற்படவில்லை. அதுமட்டுமல்ல மருந்து பாவிக்கின்ற நேரங்களில் சிறிது வேதனை குறைவடைந்தாலும் ஏனைய நேரங்களில் அவரது காலில் காணப்படுகின்ற வேதனை காரணமாக தொடர்ந்தும் துன்பப்பட வேண்டியிருந்தது. இதனால் தொடர்ந்து வைத்தியசாலையில் இருக்கவிரும்பாது தமது வீட்டிற்கு திரும்பிவிட்டனர்.

இறை நம்பிக்கையும் இறை பக்தியுமுள்ள சங்கரலிங்கம் அவர்கள் சந்நிதி முருகனை உள்ளத்தில் நிறுத்தி வழிபாடு செய்தார்கள். அதுமட்டுமன்றி சந்நிதி ஆலயத்திற்கு ஏனையவர்களின் துணையுடன் சென்று ஆலயத்திலேயே பல மணிநேரம் தங்கி சந்நிதியானை மனம் உருகி வழிபாடு செய்ய ஆரம்பித்தார்கள். சந்நிதியானது தல விருட்சமான பூவரசு மரத்தின் கீழ் இருந்து நீண்ட நேரம் வழிபட்டதுடன் பழுத்து விழுந்த அந்தப் பூவரசு இலைகளை எடுத்து சந்நிதியானது மருந்தாக நினைத்து அதனை மென்று உட்கொள்ளவும் ஆரம்பித்தார்கள்.

இவ்வாறு தொடர்ச்சியாக சந்நிதி ஆலயத்திற்குச் சென்று தலவிருட்சத்தின் கீழ் நீண்ட நேரம் கண்ணீர் சிந்தி சந்நிதியானை மனமுருகி வழிபாடு செய்யலானார்கள். மேலும் தான் இவ்வாறு நீண்ட காலம் வேதனை அனுபவிக்காது தனது வருத்தம் குணமடைய வேண்டும். அல்லது தனது உயிர் பிரிவது தான் மேலானது எனவும் கண்ணீர் சிந்தி வழிபாடு செய்து சந்நிதியானது திருப்பாதங்களில் முழுமையாக சரணாகதி அடைந்தார்கள்.

இவருக்கு என்ன நடந்தது? இவரது வேண்டுதல் நிறைவேறியதா? என்பதை அடுத்த மலரில் அடியார்களுக்கு வெளிப்படுத்துகின்றோம்... (தொடரும்....



**மாசி மாத மலர் வெளியீட்டின் போது வாசகர் போட்டியில் வெற்றிபெற்ற மாணவி ஒருவருக்கு திருமதி நாச்சியார் செல்வநாயகம் அவர்கள் பரிசில் வழங்கி கௌரவிப்பதையும் அருகில் பேரவை உறுப்பினர்கள் நிற்பதையும் படத்தில் காணலாம்.**

தமிழகத் திருக்கோயில் வரிசை: தொடர்ச்சி...

# திருவெறும்பூர்

– வல்வையூர் அப்பாண்ணா அவர்கள்–

இந்திரனும் தேவர்களும் எறும்புருவாகி எம் பெருமானை வழிபட்ட திருத்தலமே **திருஎறும்பியூர்** ஆகும். எறும்பியூர் என்பது காலப்போக்கில் எறும்பூர் என்றாகி இன்று இன்னும் சற்று மருவி திருவரம்பூர் ஆகிவிட்டது.

திருச்சிக்கு கிழக்கே தஞ்சாவூர் பாதையில் 10 கி.மீ. தொலைவில் உள்ள திருக் கோயில் இது. அழகான சிறிய குன்றின் கிழக்கு அடிவாரத்திலுள்ள வாசலினூடாக உள்ளே நுழைகிறோம். மலையின் உச்சியில் திருக்கோயில் உள்ளது. சுமார் 95 படிகள் சற்றே வளைந்து, பின்னர் நேராகச் செல்கின்றன. ஆங்காங்கே இளைப்பாறவும் உட்கார்ந்து பேசுவதற் கும் ஏற்றபடி கருங்கல் மேடைகளும் திண்ணைகளும் உள்ளன. சிலர், படிகளைத் தாண்டிச் சென்று குன்றின் சரிவுகளில் உட்கார்ந்திருப்பதைக் காண முடிகிறது. இந்தப் பகுதி மக்க ளுக்கு மாலைநேர பொழுது போக்கிடம், கடற்கரை, பூங்கா எல்லாமே இங்கேதான் போலும்.

படிகளினூடாக குன்றின் சமதளப் பகுதியை அடைந்ததும், தெற்காகக் காணப்படும் ஒரு வாசலினூடாகச் சென்று இடதுபுறம் திரும்பினால் கொடிமரம், நந்தி, உட்கோயிலுக்குச் செல்லும் வழியும் காணப்படுகிறது. உள்ளே நுழைந்தால் நாம் இப்போது வந்திருப்பது கோயி லின் வெளிப்பிரகாரம். குன்றின் மீது அமைந்துள்ள கோயிலைச் சுற்றியுள்ள மதிற்சுவர்கள் ஒரு கோட்டையை ஒத்ததான அமைப்பைக் கொண்டிருக்கிறது. வெகு அழகாகவும் தூய்மை யாகவும் இருக்கிறது பிரகாரம்.

வெளிப் பிரகாரத்தில் சந்நிதிகள் ஏதுமில்லை. இருப்பினும், இங்கிருந்து பார்த்தால் தூரத்தே திருவரங்கம் கோபுரமும், மலைக்கோட்டைப் பிள்ளையார் கோயிலும் நன்றாகவே தெரிகின்றன. மதிற் சுவரின் குறித்த ஒரு சாளரம் வழியாகப் பார்த்தால் நாம் ஏறி வந்த படிக் கட்டுப்பகுதி தெரிகிறது. சற்று திரும்பி நடந்த பின் மூலவர் சந்நிதி அமைந்துள்ள உட் பிரகாரத்துக்கு வருகிறோம்.

உட் பிரகாரத்தை வலம் வருகிறோம். எல்லாப் பரிவார மூர்த்தங்களையும் வழிபட்டு கருவறைப் பகுதியினுள் நுழைகிறோம். மகா மண்டபத்தின் வலப்புறம் உற்சவ மூர்த்தங் களைப் பார்க்கிறோம். அவற்றைக் கடந்து அர்த்த மண்டபத்துள் நுழைந்தால், கருவறையில், அருள்மிகு எறும்பீஸ்வரர் லிங்கவடிவில், அழகான வட்டவடிவான ஆவுடையார் பகுதியுடன் கிழக்கு நோக்கி அமர்ந்துள்ளார்.

படியேறி வரும்போது இடையே வாசல் முகப்பிலே கீறப்பட்டிருந்த ஒரு படம் மன தில் நிழலாடுகிறது. மாலையணிந்த லிங்கபாணம் சற்று சாய்ந்திருக்க, அதன் மேல் நிறைய எறும்புகள் ஊர்ந்தபடியிருக்க, எறும்புகள் ஊர்ந்த தடங்கள் மேடும் பள்ளமுமாக இருப்பது

போன்ற படத்தையே நாம் பார்த்தோம். உள்ளே வந்து பார்த்தால் லிங்கபாணம் கவச இடப்பட்டிருந்தமை ஏமாற்றத்தையே கொடுத்தது. அர்ச்சகரோடு விபரம் கேட்க முற்பட்டு, ஈற்றில் எமது வேண்டுகோளுக்காக லிங்கபாணத்தின் கவசத்தை அகற்றிக் காண்பித்தார் அவர். ஆகா.... அற்புதக் காட்சி.... ஆனந்த தரிசனம். எறும்புகள் ஊர்ந்த தடங்களினால் உண்டான மேடு பள்ளங்களுடன், படத்தில் பார்த்தபடி பரமனார் வலது பக்கம் சற்றே சரிந்த திருமேனியுடன் உள்ள அருட் தோற்றம் கண்டு மெய்மறந்து நின்றோம்.

மீண்டும் உட்பிரகாரத்தின் கோஷ்ட மூர்த்தங்களைத் (கருவறைச் சுவரில் உள்ளவை) தரிசிக்கிறோம். மூலவருக்கு சரி பின்புறமாகக் காணப்படும் ஹரிஹர மூர்த்தம் நம்மைக் கவர்ந்திழுக்கிறது. வலது பாதி சிவனும், இடதுபாதி விஷ்ணுவுமாக, அவரவர்க்குரிய ஆயு தங்களுடன் அழகாகக் காட்சியளிக்கின்றனர். நிர்மால்ய நாயகரான ஸ்ரீசண்டேஸ்வரர் தனிச் சந்நிதியில் உள்ளார்.

கருவறைப் பகுதி குளிர்ச்சியாக இருக்கும் பொருட்டு ஆழமில்லாத அகழியில் நீர் நிறைந்தபடியே உள்ளது. மூலவர் சந்நிதிக் கட்டுமானம் அழகானது. மகாமண்டபம் - அர்த்த மண்டபப் பகுதியில், மேல் விதானம் வரை நீண்டு விதானத்தைத் தாங்கிக் கொண் டிருக்கும் யாளிகளின் அமைப்பு சிறந்த சிற்ப வேலைப்பாடுகளுக்கு எடுத்துக் காட்டாகும்.

உட்பிரகாரத்தில் நின்ற எம்மை அர்ச்சகர் மடைப்பள்ளிப் பக்கமாக அழைத்துச் சென்றார். அங்கே சுரங்கம் போன்று சிலபடிகள் கீழே இறங்குகின்றன. சில படிகள் கீழ் இறங்கினால் ஒரே இருள்மயம். அப்பாதை இரு பக்கமாகப் பிரிந்து, ஒன்று - தஞ்சை பெரு வுடையார் கோயிலுக்கும், மற்றொன்று மலைக்கோட்டைக்கும் செல்வதாக அர்ச்சகர் கூறினார். "உண்மைதானா" எனச் சந்தேகம் தெரிவித்த எமக்கு அவர் தந்த பதில் இது "இரண்டு தலைமுறைகளாக யாரும் உள்ளே போய்ப் பார்க்கவில்லை. பெரியவர்கள் சொல்லக் கேட்டிருக்கிறோம்" என்பதாகும்.

அர்த்த மண்டப வாயலிற் தெற்குப் பார்த்தபடி அம்பாள் அருள்மிகு "நறுங்குழல் நாயகி" வீற்றிருக்கிறார். நின்ற திருக்கோலத்தில் நான்கு திருக்கரங்களுடன் அம்பாள் அபயம் தருகிறாள்.

"எறும்பியூர் மலைமேல் மாணிக்கம்" ஆன எறும்பீஸ்வரரை மீண்டும் வழிபட்டு படிகளில் கீழிறங்கி வருகிறோம்.

பி.கு.: திருச்சிக்கு பயணிப்பவர்கள், கிழக்காக 10 கி.மீ. தூரத்தில் பெருவீதியின் அருகே குன்றின் மீது கொலுவீற்றிருக்கும் எறும்பீஸ்வரரையும் ஒருமுறை தரிசித்து வரலாமே!

*இன்பமும் பிறப்பும் இறப்பின்னொடு*
*துன்பமும் உடனே வைத்த சோதியான்*
*அன்பனே அரனே என்றரற்றுவார்க்கு*
*இன்பனாகும் எறும்பியூர் ஈசனே!*

- நாவுக்கரசர்.

பங்குனி மலர் 2010 ஞானச்சுடர்

உ

# சித்திரை மாத வாராந்த நிகழ்வுகள்

**02.04.2010 வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணியளவில்**

விடயம் :- திருப்புகழ் (இசை)

வழங்குபவர் :- மா.ந. பரமேஸ்வரன் அவர்கள் (பக்கவாத்திய சகிதம்)

[ஸ்தாபகர், இளந்.தொ.சபை. - இணுவில்]

**09.04.2010 வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணியளவில்**

விடயம் :- "இன்னிசை"

வழங்குபவர் :- திருமதி கீதாமணி கிரிதரன் [இசைக்கலைமாணி]

(ஆசிரியர் – இமையாணன் அ.த.க. பாடசாலை)

**16.04.2010 வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணியளவில்**

முதுப்பெரும் புலவர் வை.க. சிற்றம்பலவானாரின்

96ஆவது அகவை நூல் வெளியீட்டு விழா

**23.04.2010 வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணியளவில்**

சொற்பொழிவு :- "தேவி பாகவதம்" (தொடர்)

வழங்குபவர் :- திரு. அ. குமாரவேல் அவர்கள்

[சிரேஷ்ட விரிவுரையாளர், யாழ் கல்லூரி வட்டுக்கோட்டை]

**26.03.2010 வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணியளவில்**

## ஞானச்சுடர் 148 ஆவது மாத வெளியீடு

சித்திரை 2010

வெளியீட்டுரை :- திரு. Dr. V. பாலகிருஸ்ணன் அவர்கள்

மதிப்பீட்டுரை :- திரு. தவமலர் சுரேந்திரநாதன் அவர்கள்

[இளைப்பாறிய அதிபர்]

பதிவு இல. Q.D/46/NEWS/2010

# ஸ்ரீ செல்வச்சந்நிதி ஆலய முகப்புத் தோற்றம்

